
தாராசங்கர் பந்தோபாத்யாயர்

மஹாஸ்வேதா தேவி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

தாராசங்கர் பந்தோபாத்யாயர்

ஆசிரியர் :

மஹாஸ்வேதா தேவி

தமிழாக்கம் :

கு. இராஜவேலு

சாகித்திய அக்காதெமி

புது டில்லி

TARASANKAR BANDOPADHYAYAR—Tamil translation by G. Rajavelu of Mahasveta Devi's monograph in English entitled TARASANKAR BANDYOPADHYAY.
Sahitya Akademi, New Delhi 1981. Price Rs. 4-00.

First Edition : 1981.

Copies Available from :
SAHITYA AKADEMI
Rabindra Bhavan, New Delhi-110 001.

Regional Offices :
Madras - 600 018, Calcutta - 700 029 & Bombay-400 014.

Published by Sahitya Akademi and Printed at
Meera Foundation Press, AE–103, Anna Nagar,
Madras–600 040.

அத்தியாயம்-1

மேற்கு வங்காளத்தில் பீர்பும் மாவட்டத்தில், லப்பூர் என்னும் கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் 1898ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25ஆம் நாளன்று தாராசங்கர் பந்தோபாத்யாயர் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் திரு. ஹரிதாஸ் பந்தோபாத்யாயர். தாயார் திருமதி பிரபாதேவி. குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்த இவருக்கு ஒரு சகோதரியும் இரண்டு சகோதரர்களும் இருந்தனர்.

லப்பூர் கிராமம் புராணப் புகழ் வாய்ந்தது. முன்னொரு காலத்தில் சதியின் உடல், ஐம்பத்தொன்று புண்ணிய ஸ்தலங்களில் சிதறி விழுந்ததாக இப்புராணங்கள் கூறுகின்றன. அப் புனிதத் தலங்களில் லப்பூரும் ஒன்று என்று அவை கூறுகின்றன. சைவமும் வைணமும் இவ்வூரில் தழைத்து ஓங்கின.

வங்காளம் நாடோடிப் பாடல்களுக்குப் பெயர் பெற்றது. பீர்பும் மாவட்டமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கீழ்வானம் வெள்ளென்று விளங்கும் வைகறைப் பொழுதில் இரவலர்கள், வைணவப் பாசுரங்களையும் சைவப் பாடல்களையும் இனிமையாகப் பாடிக்கொண்டு வருவதும், இஸ்லாமிய பக்தர்கள், அச்சமயத்தின் மகான்களின் பெருமையைப் பாடுவதோடு இந்துக் கடவுள்களின் மாட்சியையும் பாடிக்கொண்டு வருவது அப்பக்கத்தில் வழக்கம். அவர்களை அக் கிராமத்தினர் ஒருபொழுதும் வெறுங் கையோடு அனுப்பியதில்லை. சிறுவனாக இருக்கும்போதே அத்தகைய பாடல்களைக் கேட்டு விழித்துக் கொள்வேன் என்று தாராசங்கர் எழுதுகிறார். அவ்வூரில் இந்துக்களும் இஸ்லாமியரும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். பட்டுவாஸ் எனப்படும் இஸ்லாமிய நாடோடி மக்கள், கண்ணன் கதையையும் கோரங்க பிரபுவின் மகாத்மியத்தையும் விளக்கும் ஓவியங்களை (கையால் எழுதப் பட்டவை) மக்களுக்குத் திரைப்படம் போலக் காட்டுவார்கள். படங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே பக்திப் பாடல்கள் மூலம் அம்மக்களுக்குக் கதைகளை விளக்குவார்கள். பாம்பாட்டிகள்கூட இஸ்லாமியர்கள்தான். அந்த இனத்தைச்

சேர்ந்த ஆடவர் எடுப்பான தோற்றமுடையவர்கள். பெண்களோ நல்ல காதல் புரியும் அரம்பையர் போன்றவர்கள். இக் கழைக்கூத்தாடிகள் தங்கள் ஆடலாலும், பாடலாலும் இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்தனர். இந்த இனத்தைச் சேர்ந்த பெண்கள், காதல் லேகியம் என்றும், மந்திரசக்தி நிறைந்த மருந்து என்றும் சொல்லி, அந்த அப்பாவி கிராம மக்களை ஏமாற்றி எதையெதையோ விற்றனர். இந்த இனத்தைச் சேர்ந்த ஆடவர் முயல், ராட்சஸப் பல்லி...ஆகியவற்றை வேட்டையாடினர்.

அக் கிராமத்தில் வசித்த பெரிய, சிறிய ஜமீன்தார்கள், மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அரங்கங்களை (ஆற்றிடைக் குறை) வாங்கிய பின்னர் இந்த ஜமீன்தார்களில் சிலர் மிகவும் செல்வந்தர்களாகிவிட்டனர். ஏழைமக்கள் வறுமையில் உழன்றனர். மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைந்த செலவில் வசதியாக வாழ்ந்தனர். ஆண்டு ஒன்றுக்கு நான்காயிரம் அல்லது ஐந்தாயிரம் இருந்தால் போதும். இது சிறிய ஜமீன்தாரின் வருமானமாகும். நாளு போகத்துடன் வாழலாம். மாதம் ஒன்றுக்கு எழுபத்தைந்து காசுக்குப் பச்சைக் காய்கறிகளை வாங்கிவிடலாம். வாரம் இருமுறை கூடும் சந்தையில் முப்பத்தேழு காசுக்குக் காய்கறிகள் கிடைத்தன. வேலைக்காரர் ஊதியம், மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசுகள். தேர்ச்சி பெற்ற உதவியாளர் ஒருவரது மாத ஊதியம் இரண்டரை ரூபாய். சமையற்காரிக்கும் அதே ஊதியம். சமையற்காரருக்கு மூன்றரை ரூபாய்க்குமேல் ஊதியம் கிடையாது,

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த ஜமீன்தார்கள் ஒருபுறம். புதிய பணக்காரர்களான சுரங்க முதலாளிகள் மற்றொரு புறம். இவர்களுக்கிடையே பொறாமையும் போட்டியும் ஊற்றாக ஓடிக்கொண்டிருந்தன. இந்த நிலக்கரி வியாபாரிகள் வைணவர்கள். ஜமீன்தார்கள் சைவர்கள். கோயில் திருப்பணிகளை யார் செய்வது? குளத்தின் படிக்கட்டுகளைச் செப்பனிடுவது யார்? பள்ளிக்கூடங்களைக் கட்டுவது யார்? உயர்நிலைப் பள்ளிக்கு நிதி அளிப்பது எவர்? இப்படி எதற்கெடுத்தாலும் எல்லாவற்றிலும் போட்டி. திருவிழாக் காலங்களில் இந்த இருசாராரும் போட்டி போட்டுக்கொண்டு வான வேடிக்கைகளை வண்ணமுற நடத்தினர். நாடகங்களில் நடித்தனர். லப்பூர் நாடகக் கலையிலும் தனிசிறந்தது. நிலையான நாடக அரங்கம் ஒன்று அவ்வூரில் இருந்தது. மின்விளக்குகள் பொருத்தப்பட்ட நாடக மேடையுடன் விளங்கிய அந்நாடகக் கொட்டகையில் நாடகங்கள் நடத்த புகழ் பெற்ற நாடக நடிகர்களின் குழுக்கள் வந்தன.

இதுதான் அக்காலத்திய சமுதாயம். இவர்கள்தான் அக்காலத்திய மக்கள். பீர்புமின் சிவந்த—வறண்ட மண்ணும், பெருமுழக்கத்தோடு ஓடிய கோபால் ஆறும், தாராசங்கரின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான அங்கங்கள். இந்து சமயம் விரைவாக முன்னேறி வந்தபோதிலும், மறையாது என்றும் நிலவிவரும் பத்தாம்பசலிச் சடங்குகள், மந்திரவாதக் கிழவிகளின் வேதனைக் குரல் போல் கிறீச்சிட்டு ஓலமிடும் புழுதிப் புயல்கள், கோடையின் கொடுமை தாங்காது வறண்டு கிடந்த பூமியின் தவிப்பைத் தணிக்கும் பருவமழை, ஆறு குளங்களை நிறைக்கும் தண்புனல் வெள்ளம் ஆகிய அனைத்தும் தாராசங்கரின் பெரிய கதைகளிலும் நாவல்களிலும் வேரூன்றி உள்ளன. முதன்முதலாக எழுதிய 'ஏப்ரல் சுழற்காற்று' என்ற கதை தொடங்கி, அவர் இறந்த பின் வெளிவந்த 'ஒரு நூற்றுண்டின் சாவு' என்ற நாவல்வரை அவர் படைத்த நூல்கள் அனைத்திலும் தனது நாட்டைப் பற்றியும் மண்ணைப் பற்றியும் மக்களைப் பற்றியுமே எழுதியுள்ளார்.

பள்ளிப் படிப்பை முடிக்காது இடையிலே விட்டுவிட்ட அவர் தந்தை, தம் சொந்த முயற்சியில் நன்குகற்றுத் தேர்ந்தவர். நல்ல நூலகம் ஒன்று அவரது இல்லத்திலேயே இருந்தது. அன்றைய நாளில் வெளிவந்த பல்வேறு பத்திரிகைகளையும், செய்தித் தாள்களையும் வரவழைத்துத் தனது அறிவு வேட்கையைத் தீர்த்துக் கொண்டார்.

தாராசங்கர் எட்டு வயதில் தனது தந்தையை இழந்தார். அவர் தாய், பாட்னுவில் வாழ்ந்த கல்வியில் தேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். பத்தாம் பசலிகள் அக்காலத்தில் ஆங்கிலக் கல்வியை ஆதரிக்கவில்லை. ஆனால் அவரது தாயின் குடும்பம் ஆங்கிலக் கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்திருந்தது. தாராசங்கரை உயரிய முறையில் வளர்த்த சீரிய பெருமை அவர் அன்னையாரையே சாரும். திசை தெரியாது, செய்வதையும் அறியாது தவித்த குடும்பத்தை மீட்டுத் திறமையுடன் முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்ற பெருமையும் தாராசங்கரின் தாயாரைச் சார்ந்ததாகும். தாரா சங்கரின் அத்தையும் அக்குடும்பத்துடன் வசித்துவந்தார். ஒரே நாளில் தனது ஆருயிர்க் கணவரையும் அன்பார்ந்த மகனையும் இழந்த அவர், தாராசங்கரின்மேல் அளவுகடந்த அன்பை வாரிச் சொரிந்தார்.

> ''தீயவை தீய பயத்தலால் தீயவை
> தீயினும் அஞ்சப் படும்''

என்பதை இந்த இரண்டு பெண்களும் நன்கு அறிந்திருந்தனர். ''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு, பாராட்டும் உலகு'' என்பதை சிறுவயது முதற்கொண்டே முதுபெரும் பெண்டிர் இருவரும் தாராசங்கருக்கு உணர்த்தி வந்தனர். அறிவு தெளியும் வயதில் தாரா சங்கரை நல்வழிப் படுத்திய இந்த இரண்டு பெண்மணிகளும் அவரது வாழ்க்கையில் பெரும்பங்கு வகித்தனர்.

தாராசங்கரின் தாய் கதைகள் சொல்வதில் வல்லவர். அவருடைய படைப்புகள் பலவற்றில் ''கணதேவதா பஞ்சக் கிராம்'' (மக்களும் ஐந்து கிராமங்களும்) என்ற கதையில் வரும் 'நியாயரத்னு' என்ற பாத்திரம் போன்றவர்கள் தோன்றி அரும் பெரும் கதைகளைச் சொல்கின்றனர். தாராசங்கரின் தாய் நாட்டுப் பற்று மிகுந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது சகோதரர்கள் தேசீய இய்க்கத்தில் பங்கு கொண்ட மேலோர்கள். 1905 ஆம் ஆண்டில் கர்சன்புரபு வங்காளத்தை இரண்டாகப் பிரித்தபோது தாராசங்கரின் மகன், தனது சகோதரியின் கையில் ''காப்பு நாண்'' ஒன்றைக் கட்டினார். (ரட்சாபந்தன்) நாட்டுப் பற்று மிகுந்த அந்த அம்மையார் தன் மகன் சிறு குழந்தையாக இருந்தபோதே அவனுடைய தளிர்க் கரங்களில் வேறொரு காப்பு நாணைக் கட்டினார்.

அவரது தந்தையின் இறப்பு, துணிவுடனும் பொறுமையுட னும் அவரது தாய் நடத்திய போராட்டம், அவரது அத்தையின் கடலன்ன கனிந்த அன்பு ஆகியவை ''தாய் ஒரு தெய்வம்'' என்ற படைப்பில் விரிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

அக்காலத்தில் ஜமீன்தாரர்கள் ஊதாரிகள்—குடிப்பதில் பொழுதை அவமே கழித்தவர்கள்—புறஞ்சுவர்க் கோலம் செய்ப வர்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. ஜமீன்தாரி முறையில் உள்ள அவக்கேடுகள் அவ்வப் போது அச்சமின்றி அம்பலப்படுத்தப்பட்ட போதிலும், தாராசங் கருக்கு இறுதிவரை ஜமீன்தாரர்களிடம் ஒரு வகையான பரிவு இருந்து வந்தது. இந்த ஜமீன்தாரர்கள் ஆழ்ந்த மத நம்பிக்கை கொண்டவர்கள். சமயச் சடங்குகளைக் கண்டிப்பாகக் கடை பிடிப்பவர்கள். சமய உணர்வும் இறை உணர்வும் தாராசங்க ரின் குடும்பத்தில் வேரூன்றி இருந்தன. நல்லதன் நன்மையும் தீய தன் தீமையும் அக்குடும்பத்தில் நன்கு பகுத்துணரப்பட்டிருந் தன. வல்லவன் செய்ததாலேயே தீயவை, நல்லவையாகக் கொள்ளப்படவில்லை. செல்வச் செறுக்கால் செய்யப்பட்ட தீய செயல்களைக் கண்டிக்க அக்காலத்திலே மக்கள் தயங்கவில்லை.

இத்தகைய நம்பிக்கைக்களிடையே தாராசங்கர் வளர்ந்தார். இளம் வயதிலேயே நல்ல பண்பாளராக அவர் திகழ்ந்தார். இவ்வாருக அவர் வாழ்ந்த காலம், அவரைச் சுற்றி வாழ்ந்த மக்கள் நிலவிய சமுதாய அமைப்பு, அவரது குடும்பத்தினரின் சமயப் பற்று—இறை நம்பிக்கை—இவை அனைத்தும் சேர்ந்து அவரது உள்ளத்தைப் பண்படுத்தின. அவர்தம் சிந்தையைச் செம்மைப்படுத்தின; அவரது எண்ணங்களை மேலும் ஏற்றம் கொள்ளச் செய்தன.

அத்தியாயம்-2

அது தாராசங்கரின் வாழ்க்கையில் முக்கியமான கட்டம். வளமான வாலிப வயது. புகழ்பெற்ற புரட்சிவாதியான 'நளினி பக்சி' அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, தாராசங்கருக்குக் கிட்டியது. தாராசங்கரின் நாட்டத்தை நளினி அரசியலில் திருப்பினார். முதல் உலகப்போர் நடந்தபோது நமது புரட்சிவாதிகள் இரு முனைப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஒரு முனையில் இராணுவத்தினரைக் கலகம் செய்யும் படித் தூண்டிவிடுவது. மற்ருெருபுறம் ஜெர்மனியிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுப் போராடுவது.

பகாஜாடின் என்று அழைக்கப்பட்டுவந்த ஜதீந்திரநாத் முகர்ஜி போன்ற தலைவர் ளின்கீழ் இவ்வாயுதங்களைப் பெற்றுப் போராடுவது அவர்களது நோக்கம். ஆனல் அவர்களது திட்டங்கள் தோல்வியுற்றன. இந்தப் பயங்கரவாதிகளில் சிலர் போரில் இறந்தனர். சிலர் நீண்ட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் வாடித் துவண்டனர். சிலர் தூக்குமேடை ஏறித் தங்கள் இன்னுயிரை ஈந்தனர்.

தாராசங்கர் 1916ஆம் ஆண்ல் லப்பூர் ஜதல்லால் உயர் நிலைப்பள்ளியிலிருந்து மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறினர். அதே ஆண்டில் அவருக்குத் திருமணமும் முடிந்தது. கல்கத்தாவில் உள்ள புனித சேவியர் கல்லூரியில் இடம் கிடைத்தும் அக் கல்லூரியை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. சந்தேகத்திற்

குள்ளான அரசியல்வாதிகளின் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருந்ததே அதற்குக் காரணம். பின்னர் தெற்குப் புறநகர் கல்லூரியில் இவர் சேர்ந்தார். இது அஷ்டோஷ் கல்லூரி என்று தற்போது அழைக்கப்படுகிறது. ஆனால் உடல்நலம் குன்றியதன் காரணமாக அவர் மீண்டும் தனது கல்லூரிப் படிப்பை இடை யிலே நிறுத்தும்படி நேரிட்டது.

அரசியல் வானில் சிறிது காலம் மந்தமான ஒரு நிலை நிலவி யிருந்தது. 1921ஆம் ஆண்டில் பெரியதொரு புரட்சி உருவாகி யது. மகாத்மா காந்தி, அரசியலில் நுழைந்து புதுமையான புரட்சி முறைகளைப் புகுத்தினார், அகிம்சா முறையில் ஒத்துழை யாமை இயக்கம் தொடங்கினார். அந்த இயக்கம் தாராசங்க ரின் இளம் உள்ளத்தை ஈர்த்தது. நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்ற துடிப்பு அவருக்கு ஏற்பட்டது. ''நாட்டுப்பற்று தலைதூக்கி நின்ற போதிலும் குறிப்பிட்ட கட்சியில் சேரவேண்டும் என்றோ, பயங்கரவாதிகள் இயக்கத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றோ தாம் நினைக்கவில்லை'' என்று அவர்தம் சுயசரிதையில் எழுதுகிறார். பயங்கரவாதிகளுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. தாய் ஒரு தெய்வம் என்ற தலைப்பில் அவர் எழுதிய நாவல் அவரது வாழ்க்கை வர லாற்றைப் பிரதிபலிக்கும் படைப்பாகும். அவரது அரசியல் போக்கு இந்த நாவலில் வெளியாகின்றது.

இந்திய பயங்கரவாதிகளின் புரட்சிக் கருத்துக்களை தாரா சங்கர் ஏற்றதில்லை. ''நான் ஒரு கலகக்காரன் அல்ல'' என்று பின்னர் கல்லோல் எழுத்தாளர்களுக்கு எழுதுகையில் அவர்குறிப் பிடுகிறார். அவரது சிந்தையைக் குடைந்து வந்த பல வினாக் களுக்கான விடைகளைக் காந்தி அடிகளின் அரசியல் தத்துவத்தில் அவர் கண்டார். அரசியல் விடுதலை கிடைத்தால் மட்டுமே ஒரு மனிதன் சுதந்திர மனிதனாகி விடமாட்டான். மூட நம்பிக்கை கள், பேராசை, அறிவின்மை, குறுகிய மனப்பான்மை ஆகியவற் றிற்கு மனிதன் அடிமையாக இருக்கும் வரையில் அவனை விடுதலை பெற்ற மனிதனாகக் கருதமுடியாது. அரசியல் விடுதலையினால் இந்தி யாவின் கோடிக்கணக்கான மக்களுக்கு உண்மையான விடுதலை கிடைத்துவிடாது. வறுமை, சுரண்டல், பிணி, எழுத்தறி வின்மை, விதியில் உள்ள மூட நம்பிக்கை ஆகிய தளைகளிலிருந்து அவர்களை முதலில் விடுவிக்கவேண்டும். இதுதான் அவரது உள் ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த அவா. இந்த வேட்கை இறுதி வரையில் அவரிடம் தலைநிமிர்ந்து நின்றது.

தாராசங்கர் தலை சிறந்த எழுத்தாளர். தனது நாட்டு மக்களின்பால் அவருக்கிருந்த ஆழ்ந்தபற்று, அவர்கள் துயர் தணிக்க அவர் கொண்டிருந்த ஆர்வம், உறுதி ஆகியவை மீண்டும மீண்டும் அவரது படைப்புக்களில் எதிரொளிக்கின்றன. அவரது நாட்டம் அரசியலில் இல்லை; மக்களின்பால் இருந்தது.

''மனிதன் ஒரு குறிக்கோளுடன் வாழவேண்டும்; முழுமனித னாக வாழவேண்டும்'' என்பது அவர்கருத்து. ''மக்கள் கடவுள். ஐந்து கிராமங்கள்'' என்ற நாவலில் வரும் தேபு, 'தாய் ஒரு தெய்வம்' என்ற நாவலில் வரும் ஷிப்நாத், 'சந்திபணி பாட சால' என்ற நாவலில் வரும் சீதாநாத் ஆகியோர் லட்சியவாதி கள். (சந்திப்பணி என்பவர் கிருஷ்ணபகவானின் குரு; அவரது பெயரில் நடத்தப்பட்ட தொடக்கப்பள்ளி).

லட்சிய மனிதன் தனது சொந்தப் பொறுப்புக்களையும் குடும்பக் கடமைகளையும் சமூக அரசியல் பொறுப்புக்களையும் நிறைவேற்ற என்றுமே தயங்கமாட்டான். தனக்கென்று உயரிய லட்சியம் ஒன்றை அவன் வகுத்துக் கொள்கிறான். முழுமுயற்சியு டன் அந்த லட்சியப் பாதையில் முன்னேறுகிறான். பிறர் நலனுக் காக, தனது சொந்த நலனை அவன் தியாகம் செய்கிறான். இவன் தான் லட்சிய மனிதன். முழுமையான மனிதன்; இத்தகைய மனிதனை மக்கள் மதிக்கின்றனர். ஆனால் அவனை ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை.

எனவே அவன் மக்களிடமிருந்து பிரிந்து, தன்னந்தனியாக நிற்கிறான்; தனிமையில் வாழ்கிறான்.

அத்தியாயம்-3

தாராசங்கர் ஆர்வம் மிக்க கவிஞர். 1926ஆம் ஆண்டில் அவரது உறவினர் ஒருவர் திரிபத்தரா (மூன்று இலைகள்) என்ற தலைப்பில் அவரது கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டார். இதற்கு முன்னர் எழுதிய கவிதை ஒன்று ஜலாதர் சென் ஆசிரிய ராக இருந்த பாரதவர்ஷா என்ற தலைசிறந்த இலக்கியப் பத்திரி கையில் வெளிவந்தது. திரிபத்ரா அச்சிடப்பட்டு ஒரு குறிப்பிட்ட

வட்டத்திற்குள் மட்டும் சுழன்று வந்தது. எனவே இது விரைவில் மறைந்தது. தாராசங்கர் தனது பிற்காலத்தில் கவிதைகள் அதிகம் எழுதவில்லை. ஆனால், அவருள் மறைந்திருந்த கவி உணர்வு மறையவில்லை. அவர் ஒரு வரகவி. நினைத்தவுடன் கவிதை இயற்றி அதை இசையுடன் பாடக்கூடிய திறமை அவருக்கு இருந்தது. கிராமக் கவிஞன் ஒருவனை மையமாக வைத்து எழுதிய ''கபி'' என்ற நாவல் அவரது கவிதைத் திறனுக்கும் எழுத்து வன்மைக்கும் அருமையான சான்றாகும்.

லப்பூர், நாடகக் கலையிலும் பெருமை வாய்ந்த ஊராகும். நிர்மல்சிங் பானர்ஜி அந்த ஊரிலேயே பெரும் பணக்காரர்; புகழ் பெற்ற நாடகாசிரியர். அவரது நாடகங்கள் கல்கத்தாவில் நடிக்கப்பட்டு வந்தன. தாராசங்கர், தானும் நாடக ஆசிரியராக விரும்பினார். பதினெட்டு ரூபாய் செலவில்—அந்தக் காலத்தில் அது ஒரு பெருந்தொகையாகும்—கிராண்ட் டப் என்பவர் எழுதிய மராட்டியர்கள் வரலாறு என்ற நூலின் மூன்று பாகங்களை வாங்கினார். மூன்றாவது பானிப்பட்டு போர் பற்றி ஒரு நாடகம் எழுதினார். நிர்மல்சிங் பானர்ஜி அவருக்கு ஊக்கமளிக்கவே, இந்த நாடகத்தை ஒரு நாடக மானேஜரிடம் எடுத்துச் சென்றார். முன்பின் தெரியாத நாடக ஆசிரியர் எழுதிய நாடகத்தைப் படித்துப் பார்க்க அந்த மானேஜர் தயாராக இல்லை. படிக்காமலேயே அந்த நாடகத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார். மனமுடைந்து வீடு திரும்பிய தாராசங்கர் அக் கையெழுத்துப் பிரதியைத் தீக்கிரையாக்கினார்.

அவர் மனம் புழுங்கினார். இனி எழுதுவதில்லை என்று சூளுரைத்தார். காங்கிரஸ் கட்சிக்காகப் பணியாற்றி வந்த அவர், தமது சமாஜ் சேவக் சமிதி பணியில் முழு நாட்டத்தையும் ஈடுபடுத்தினார். அவர் ஒரு சிறு நிலக்கிழார். நிலத்திலிருந்து கிடைத்த வருவாய் அவரது குடும்பத் தேவைகளைச் சரிக்கட்டப் போதுமானதாக இருந்தது.

ஆனால் அவரது சூளுரை விரைவில் தேய்ந்து மறைந்தது. மற்றொரு இளைஞருடன் சேர்ந்து ''பூர்ணிமா'' என்ற மாத இதழைத் தொடங்கினார். கவிதைகள், கதைகள், நூல் விமரிசனங்கள், தலையங்கங்கள் அவரது எண்ணங்களை, எழுச்சியை, உள்ளத்து உணர்ச்சிகளை எழுத்து வடிவில் வெளியிட உதவின. 'காலிகலம்' (மையும் பேனாவும்) என்ற பத்திரிகை, தற்செயலாக அவரது கைக்கு வந்தது. அதில் இரண்டு கதைகள் அவரது உள்ளத்தைத் தொட்டன. ஒன்று பிரமேந்திர மித்ரா எழுதியது.

மற்ருென்று சைலஜானந்தா முகர்ஜி எழுதியது. அவர் பலமுறை கல்கத்தாவுக்குச் சென்றிருக்கிருர். ஆனல் இலக்கிய உலகில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை அவர் அறியார். புதிய எழுத்தாளர் கள் அவரது நாட்டத்தை ஈர்த்தனர். இக் கதைகளைப் படித்த போது, தமது உள்ளம் நெகிழ்ந்துவிட்டது என்றும் அக்கதைகள் உலகியலை யொட்டி அமைந்திருந்தன என்றும், உணர்ச்சி யோட்டம் மிகுந்திருந்தன என்றும் பின்னர் கூறியுள்ளார்.

ஒருமுறை தனது ஜமீனில் இருந்த ஓரிடத்தில், எழில்மிகுந்த வைணவப் பெண் ஒருத்தியைக் கண்டார். அவளை மையமாக வைத்துக் கதையொன்று பிறந்தது. ''ரசகளி'' என்ற அக் கதையை அந்நாளைய பிரபல பத்திரிகை ஒன்றுக்கு அவர் அனுப்பி ஞர். எட்டுத் திங்கள் கழித்து அக்கதையின் கதி என்னவாயிற்று என்பதை அறிய அவர் கல்கத்தா சென்ருர். அக் கதையைப் படிக்க எவரும் அக்கறை கொள்ளவில்லை என்பதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். அதனல் உள்ளம் உடைந்து, விழிகளில் நீர் மல்க, மத்திய கல்கத்தாவிலிருந்து தென்கல்கத்தாவுச்கு நடந்தே திரும்பினர். இனிக் கதைகள், கவிதைகள் எழுதப்போவதில்லை; சமூகப் பணியிலே காலம் கழிப்பேன் என்று மீண்டும் ஒருமுறை சூளுரைத்தார்.

பிறகு தாராசங்கர் லப்பூர் திரும்பினர். கிராமப் பஞ்சாயத் தின் தலைவரானர். சைக்கிளிலியே மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மக்களுடன் நெருங்கிப் பழகினர். அப்பொழுது தான் கிராம வாழ்க்கையைப்பற்றிய புதிய கண்ணேட்டம் அவருக் குக் கிடைத்தது. பீர்பும் மாவட்டம் எப்பொழுதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள மாவட்டமாகும். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக காலரா நோய பரவி, பெருவாரியான மக்களைச் சூறையாடிக் கொண்டிருந்தது. இக் கொடிய நோயை எதிர்த்து ஆறு மாதங்கள் தாராசங்கர் மக்களுடன் இணைந்து நின்று போராடினர். நோயால் பீடிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் நாட்டம் செலுத்தினர். இச்சுற்றுப்பயணத்தினல் அவருக்கு ஏராளனான செலவு ஏற்பட்டது. ஆனல் பல்வேறு மக்களின் தொடர்பு இதனல் அவருக்குக் கிட்டியது, பின்னர் இவர் எழுதிய நாவல்களிலும் கதைகளிலும் இவர்கள் வாழ்க்கை பிரதிபலிக்கின்றது. ஹன்சூலிபாங்கர் உபகதையில் வரும் சுசந், நசுபாலா ஆகியோரும், கபியில் வரும் நிடாய், மற்றும் பலரும் இவ்வாறுதான் உருவாகினர்.

காலம் கடுகிச் சென்றது. 'கல்லோல்' என்ற புகழ்பெற்ற பத்திரிகையின் மேலட்டையைத் தற்செயலாக அவர் பார்த்தார். இனி எழுதப் போவதில்லை என்ற தனது சூளுரையை மறந்து, பிரசுரிக்க மறுத்து அனுப்பப்பட்ட தனது 'ரசகளி'யைக் கல்லோல் பத்திரிகைக்கு அனுப்பினூர்.

நான்கு நாட்களுக்குள் அவருக்கு அப்பத்திரிகையிலிருந்து கடிதம் ஒன்று வந்தது. அவரது கதை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கதைக்கு ஏராளமான பாராட்டுக்கள். 'இன்னெரு கதை வேண்டுமே, அனுப்புகிறீர்களா' என்று அப்பத்திரிகையின் ஆசிரியர் கேட்டார். மற்றெரு கதை உருவாகியது; அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கதைகள் உயிரோட்டத்துடன் இருப்பதாக காலிகலம் என்ற பத்திரிகை எழுதியது. இவை நடை பெற்றது 1920ஆம் ஆண்டில்.

தாராசங்கரை எழுத்தாளராக ஏற்க மறுத்த எழுத்தாளர் உலகம் இப்பொழுது அவரை ஒரு சிறந்த எழுத்தாளராக ஏற்றுக் கொண்டது. காலிகலம், கல்லோல், உபாசனு, துப்சய்யா ஆகிய பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு தங்களுக்குக் கதைகள் எழுதி அனுப்புமாறு அவரைக் கேட்டுக் கொண்டன. அவரது கற்பனை ஊற்றிலிருந்து கதைகள் பல பிறந்தன. அதில் ஒன்று 'ஸ்மசான பாதை' (சுடுகாட்டு வழி). அழகான கிராமம் ஒன்று எப்படி நாளடைவில் சீரழிந்து விடுகிறது என்பதைத் தாராசங்கர் அக்கதையில் அற்புதமாகச் சித்திரித் திருந்தார். ஜமீன்தாரர்கள் மக்களை எப்படிச் சுரண்டுகின்றனர்? அநியாய வட்டிக்காரர்களின் பிடியில் அகப்பட்டு மக்கள் எவ் வாறு தவிக்கின்றனர்? மலேரியா நோய் மக்களைப் படுத்தியபாடு, இவற்றைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாத அரசின் ஆட்சி—இவையனைத்தும் ஒன்றுசேர்ந்து சிறிது சிறிதாக அக்கிராமத்தைச் சீர்குலைத்து, இறுதியில் அக்கிராமம் சுடுகாடாகிறது. இக்கதையே, 'சைதலி குர்னி' என்ற நாவலுக்கு மூலக்கதையாக அமைந்தது.

பல்வேறு வேலைகளுக்காக அவர் அவ்வப்போது கல்கத்தா செல்வது வழக்கம். இப்பொழுது அவர் கல்லோல், காலிகலம் ஆகிய அலுவலகங்களுக்கும் செல்லத் தொடங்கினூர். கல்லோல் ஒன்றுதான் தமது திறமையை முதன்முதலாக முன்வந்து ஏற்றுக் கொண்ட புகழ்வாய்ந்த பத்திரிகை என்று "எனது இலக்கிய வாழ்க்கை" என்ற தனது இலக்கியச் சுயசரிதையில் எழுதியிருக் கிருர். கல்லோல் எழுத்தாளர்களுக்கும் அவருக்கும் இடையே நடந்த சந்திப்பு விநோதமாக இருந்தது. அவர்களுடன் ஒன்றிப்

பழக அவரால் முடியவில்லை. சைலஜானந்தாவை அவருக்கு முன்னரே தெரியும். மற்றைய எழுத்தாளர்கள் இளைஞர்கள்; கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவர்கள். தங்கள் புகழார த்தின் நறுமணத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். நகர வாழ்க்கையில் தாராசங்கருக்கு அநுபவம் கிடையாது. எதையும் லட்சியம் செயயாதவர்கள் போல அவர்கள் நடந்து கொண்டது, தன்னம்பிக்கை மிகுந்தவர்களாகக் காட்டிக் கொண்டது எல்லாம் வெளிவேஷம் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவர் வாலிபப் பருவத்தின் முதல் படியைக் கடந்துவிட்டவர். கிராமத்திலிருந்து வந்தவர். அவர்கள் நகரவாசிகள். அவருக்குத் திருமணமாகி குழந்தைகளும் இருந்தன. கனவுலகில் உலவிக் கொண்டிருந்த அவர்கள், கசப்பான அனுபவங்கள் வாயிலாக வாழ்க்கை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டிருந்தனர். அவர் கற்பனை உலகில் உலவவில்லை. வாழ்க்கையின் கசப்பான அனுபவங்களை அணுஅணுவாக அனுபவித்தவர். முதல் சந்திப்பிலேயே அவருடைய ஆர்வம் அடங்கி விட்டது. இந்த நகர இலக்கியவாதிகளும் தாமும் இரு துருவங்கள் என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். அவர் உணர்ச்சிவயப்பட்டவர்; தொட்டாற் சுருங்கி போன்ற தன்மையுடையவர். இந்த விசித்திரமான சூழ்நிலையில் அவரால் மனம்விட்டுப் பழக முடியவில்லை. காலிகலம் ஆசிரியரான முரளிதர் பாசுவிடம் அவர் வெகுவிரைவில் ஒட்டிக் கொண்டார். நிருபேந்திர கிருஷ்ண சட்டர்ஜி, தினேஷ்தாஸ், பவித்ர காங்குலி, அச்சின்த்ய குமார் சென்குப்தா, பிரேமேந்திர மித்ரா, சரோஜ்குமார்ராய் சவுத்ரி, சபித்திரி பிரசன்ன சட்டர்ஜி மற்றும் சிலர் அவருக்கு அப்பொழுது அறிமுகமான எழுத்தாளர்களாவர். சட்டர்ஜி உடாசனுவின் ஆசிரியர். இவர்தான் சைதலி குர்னியை வெளியிட தாராசங்கருக்குப் பின்னர் உதவியவர். இந்த எழுத்தாளர்கள் அனைவரும் அவருடைய வாழ்நாள் முழுவதிலும் அவருக்கு நெருங்கிய நண்பர்களானார்கள்.

1929ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும் கொந்தளிப்பும் அமைதியின்மையும் நிலவின. மீரட் சதி வழக்கும், சிட்டகாங் ஆயுதக் கொள்ளையும் மறக்க முடியாத மாபெரும் நிகழ்ச்சிகளாகும். இத்தருணத்தில்தான் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். தமக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த எழுபத்தெட்டு தொண்டர்களுடன் 1930 ஏப்ரல் 6ஆம் தேதி தனது தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான மக்கள், வடமேற்கு எல்லை மாகாணம் முதல் வங்காளத்தில் உள்ள மிதுனப்பூர் வரை,

உத்தரப் பிரதேசத்திலிருந்து பம்பாய் வரை காந்தியடிகளின் அழைப்புக்கிணங்க பெரும் ஆர்வத்தோடு திரண்டு வந்தனர்.

மே மாதம் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். ஜூன் திங்களில் இந்திய தேசீய காங்கிரஸ் இயக்கம் சட்டவிரோதமானது என்று அந்நிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் திங்கள் பத்துக்குள் சிறை புகுந்தனர்.

1931ஆம் ஆண்டு இரண்டு அரசியல் கைதிகள் மேற்கு வங்காளம் மிதுனப்பூரில் உள்ள ஹிஜ்லி சிறையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். செய்தி கேட்ட மக்கள் பொங்கி எழுந்தனர். கல்கத்தாவில் மக்கள் கடலெனத் திரண்டனர். கண்டனக் கூட்டம் நடத்தினர். அக்கூட்டத்தில் மகாகவி தாகூர் உரையாற்றினர்.

1930இல் தாராசங்கரும் சிறை புகுந்தார். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு போராட்டமாக அரசியல் உருவாவதை சிறையிலே அவர் கண்டார். கைதிகளில் சிலரிடையே நிலவிய அரசியல் வெறி அவருக்கு அதிர்ச்சியைத் தந்தது. சிறையில் சைதலி குர்னி, பாஷன் புரி (சிறை) ஆகிய இரண்டு நாவல்களை எழுதத் தொடங்கினர். 1930 டிசம்பரில் அவர் விடுதலையானர்.

சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சுபாஷ் சந்திர போஸைச் சந்திக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. சுபாஷ்சந்திரருக்கும் ஜே.எம். சென்குப்தாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. திரு. ஆனே அவர்கள் அதைத் தீர்த்துவைக்க வந்தார். பீர்பும்மிலிருந்து சாட்சியாக விசாரிக்கப்படுவதற்காக தாராசங்கர் வரவழைக்கப்பட்டார். தம்மைப் போன்ற சாதாரண ஊழியர்கள் காங்கிரஸ் கட்சிக்கு உழைக்க வந்துள்ளார்களே தவிர குறிப்பிட்ட தலைவர்களுக்காக உழைக்க வரவில்லை என்று சுபாஷ் சந்திர போசிடம் நேரடியாகவே சொல்லிவிட்டார். ஒளிவு மறைவில்லாமல் அவர் பேசிய பேச்சு, சுபாஷ் சந்திர போசுக்குப் பிடித்திருந்தது. சுபாஷ் சந்திர போசின் கம்பீரத் தோற்றத்தினல் கவரப்பட்ட தாராசங்கர், பின்னர் தமது ‘சைதலி குர்னி’ என்ற முதல் நாவலை சுபாஷ்சந்திரருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். வீடு திரும்பியதும் அவர் தமது குடும்பத்தைச் சேர்ந்த பெண்களின் நகைகளை விற்று போல்பூரில் சிறிய அச்சகம் ஒன்றை வாங்கினர். அச்சிடும் யந்திரம் ஒன்று சிறிய அறை ஒன்றில் அமைக்கப்பட்டது. அங்கிருந்துதான் அவர் உபாசனவுக்கும் பின்னர் சரோஜ்குமார்

ராய்சவுத்ரி சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் அவர் ஆசிரியராக இருந்த அப்யுதயா என்ற பத்திரிகைக்கும் எழுதினுர்.

வங்காளத்தின் நாடோடிப் பாடல்கள், ஆடல்களுக்குப் புத்துயிரூட்டுவதில் நாட்டம் செலுத்திய அதிகாரி ஒருவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கிராம மக்களிடமிருந்து பழங் காலக் கலைப்பொருள்களைப் பலவந்தமாகப் பறித்துச் சேகரிக்கத் தொடங்கினுர். இதஞல் கிராம மக்கள் வெகுண்டனர். நாடோடிப்பாடல், ஆடல்களில் அவர் காட்டிய ஆர்வம் வங்காள இளைஞரை தேசீய இயக்கத்திலிருந்து பிரித்து திசை மாற்றி அழைத்துச் செல்வதற்கான ஒரு போர்வை என்று அவர்கள் நம்பினர். இவ்வெண்ணம் முழுவதும் தவறு என்றும் சொல்ல முடியாது. அவர் சேகரித்து வைத்திருந்த கிராமத் தெய்வச் சிலைகள் எல்லோருக்கும் எரிச்சலூட்டின. சீற்றம் மிகக் கொண்ட அரசியல் கட்சி ஊழியர் ஒருவர், நாடோடி கேலிப் பாடல் ஒன்றை தாராசங்கரின் அச்சகத்தில் அச்சிட்டார். இது நடந்தபோது தாராசங்கர் ஊரில் இல்லை. கிண்டலும் கேலியும் நிறைந்த அப்பாடல், அந்த அதிகாரியைத் தாக்கும் முறையில் அமைந்திருந்தது. அந்த அதிகாரி கொதித்தெழுந்தார். இதற்குக் காரணமான நபர் கைது செய்யப்பட்டார். அதிகாரியின் கோபம் தாராசங்கர்மீதும் விழுந்தது. ஆனுல் அவரைக் குற்றஞ் சாட்டிக் கைதுசெயய முடியவில்லை. எனவே, ஏனைய குற்றச் சாட்டுகளை அவர்மீது சுமத்த முயற்சிகள் செய்யப்பட்டன. போல்பூர் ரயில்வே நிலையத்தில் தாராசங்கர் இரண்டாம் முறையாக சுபாஷ்சந்திரரைச் சந்தித்தார். உறுதிமொழிப் பத்திரம் எதையும் எழுதிக் கொடுக்க வேண்டாமென்றும், சரணடைய வேண்டாமென்றும் சுபாஷ்சந்திரர் அவருக்கு ஆலோசனை கூறினுர். அச்சிடும் யந்திரத்தைப் பிரித்து மாட்டு வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு தாராசங்கர் லப்பூருக்குத் திரும்பிச் சென்ருர்.

இச்சமயத்தில் அவருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. கிராம வாழ்க்கையில் எவ்வித சுகமுமில்லை. வாழ்க்கையில் தோல்வியைத் தவிர வேறு எதையும் சந்திக்காத மனிதரைக் கிராம மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மன நிம்மதியின்றி, அவர் மாவட்டங்களில் மீண்டும் சுற்றுப் பயணம் தொடங்கினுர். சிறுபெண் ஒருத்தி இறந்து போவதை மையமாக வைத்துக் கதை ஒன்றைப் பின்னினுர். அவர் அக்கதையை எழுதி முடிக்குமுன் அவருடைய ஆறு வயதுப் பெண் பூலு இறந்து போனுள்.

துயரச் சுமையைத் தாங்க இயலாது அவர் கல்கத்தாவுக்கு ஓடினார். உபாசனா ஆசிரியர் சபித்ரி பிரசன்ன சட்டர்ஜி அப் பத்திரிகையை மூடும் தறுவாயில் இருந்தார். உபாசனாவில் வெளி யான நாவல் ஒன்றுக்கும் கதை ஒன்றுக்கும் உரிய தொகையைத் தாராசங்கருக்கு சட்டர்ஜி கொடுத்தார். சஜன் காந்த தாஸ் உபாசனா அலுவலகத்தை 'பங்கஸ்ரீ' என்ற பத்திரிகைக்காக எடுத்துக் கொண்டார். அன்றைய உலகில் உலவிய தலைசிறந்த எழுத்தாளர்களிடையே தாராசங்கர் தனித்து நின்றார்; துயரக் கடலில் ஆழ்ந்து தனிமரமாக நின்றார். வேறு வழியின்றி லப்பூருக்குத் திரும்பிச் சென்றார்.

ஒருசில நாட்கள் கழித்து கிராம வளர்ச்சிப்பணி தொடர் பாகத் தாகூரைச் சந்திக்க அவர் சாந்தி நிகேதன் சென்றார்.

தாம் செல்வத்தை விரும்பவில்லை என்பது அவருக்குத் தெரி யும். அப்படியானால் அவருடைய தேவைதான் என்ன? நிலக்கரி வாணிபத்தில் அவரை ஈடுபடுமாறு செய்ய அவர் மனைவியின் உறவினர்கள் முயன்றனர். அம்முயற்சியில் அவர்கள் தோல்வியே கண்டனர்.

தாராசங்கரின் சொந்தக் கிராமம் என்ற வகையிலதான் லப்பூர் பலருக்கும் தெரிந்த ஊராக இன்று விளங்குகிறது. ஆனால் அவர் காலத்தில் அவர் கிராமத்தில் இருந்த கிராம மக்கள், இந்த விநோத மனிதருடன் ஒத்துப்போகத் தயாராக இல்லை. அவர் நடந்து கொண்ட விதமே அலாதியாக இருந்தது. மனமுவந்து சிறை புகுந்த இவரை அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. கிராமச் சமுதாய வாழ்க்கை வேறு; நகரச் சமுதாய வாழ்க்கை வேறு. கிராமச் சமுதாயம் சிறியது. உலகத்தோடு ஒட்டி வாழத் தெரியாதவருக்கு அங்கு இடம் இல்லை. கிராம மக்களுக்கும் அவரைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லை. அவரைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தனர். வாழ்நாள் முழுவதும் தங்களுடன் பழகிய ஒருவர், வேறு விதமாக நடந்து கொள்வதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே அவரிடம் விரோத மனப் பான்மை காட்டினார்கள்; ஒரு சிறு சம்பவத்தில் அவர்களுடைய விரோதம் வெடித்து வெளிச் சிதறியது. இங்கிலாந்து சென்று திரும்பிய இளைஞர் ஒருவருக்குத் தம் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்ததற்காக அக்கிராமவாசி ஒருவரை அக்கிராம மக்கள் எதிர்த்தனர். லப்பூர் பழமை விரும்பிகள் நிறைந்த ஊராக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

19-வது நூற்றுண்டில் மேற்கு வங்காளத்தில் பலர் மேற் படிப்புக்காக இங்கிலாந்து சென்று திரும்பிய காலம் அது. மேற்கு வங்காளத்திலிருந்து மேல்நாடு சென்று திரும்பியவர்களே வங்காள மறுமலர்ச்சிக்கு வித்தாக இருந்தனர்.

தாராசங்கர் கல்கத்தாவை அடைந்தார். 'சுடுகாடு' என்ற இவரது கதை சஜனிகாந்த தாஸைக் கவர்ந்தது. ஒரு குழந்தை யின் மரணம் பற்றிய இக்கதையை அவர் தனது 'பங்கஸ்ரீ' என்ற பத்திரிகையின் முதல் இதழிலேயே வெளியிட்டார்.

நிகழ்ச்சிகளின் மையத் தலமாக விளங்கிய கல்கத்தாவில் வசிப்பது தனக்கு நன்மை பயக்கும் என்று தாராசங்கர் நம்பிஞர். அக்காலத்திய தலைசிறந்த ஓவியரான ஜமினிராயும் அதே கருத்தை அவரிடம் எடுத்துக் கூறிஞர். கல்கத்தாவில் வசிப்ப தென்றல் எளிதல்லவே. மாதம் ஒன்றுக்கு இருபது முதல் இருபத்தைந்து ரூபாய் வேண்டுமே! அதற்கு என்ன செய்வது? எப்படிச் சம்பாதிப்பது? பன்னிரண்டு இதழ்களில் எழுதப்பட்ட தொடர்கதை ஒன்றுக்கு அறுபது ரூபாயும் சிறுகதை ஒன்றுக்கு பத்து ரூபாயும் சபித்ரி பிரசன்ன சட்டர்ஜி அவருக்குக் கொடுத் தார். பத்திரிகை ஆசிரியர் ஒவ்வொருவரும் அவர் மாதிரி தாராளமாக இருக்கமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அக் காலத்தில் ஒரு புத்தகம் இரண்டாவது பதிப்பு வெளிவருவது என்பது அரிது. எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துத் திறமையி ஞல் பணம் சம்பாதிக்க முடியாத காலம் அது.

வேறு வழியின்றி லப்பூருக்குத் திரும்பிச் சென்ருர். நிம்மதி யின்றி மீண்டும் கிராமம் கிராமமாகச் சுற்றுப் பயணம் செய் தார். இரண்டு அருமையான கதைகள் பங்கஸ்ரீயிலும் பாரத் வர்ஷாவிலும் வெளிவந்தன; ஒன்று கிராமச் சந்தை பற்றிய கதையாகும். மற்றென்று சூனியக்காரி என்று கிராம மக்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கிய அபலை ஒருத்தி பற்றிய கதையாகும்.

தமது கதைகளுக்கான கருவைத் தேடி ஊர்ஊராகச் சென்று கொண்டிருந்த தாராசங்கரை காவல்துறையில் அதிகாரியாகப் பணியாற்றி வந்த அவரது நண்பர் எச்சரித்தார். அம்மாவட்டத் தலைமைக் காவல் அதிகாரி ஷாம் சுதோகா, தாராசங்கரைப் பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிருர் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

பீர்பும் மக்கள் ஷாம் சுதோகாவை எளிதில் மறக்க மாட்டார்கள். அம்மாவட்டத்தில் அவர் பயங்கரமான அடக்கு

முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார், தாராசங்கர் கல்கத்தா சென்றபோது, அவர் கல்கத்தாவில் எப்படி வாழ்க்கை நடத்துகிருர், எங்கிருந்து வருமானம் கிடைக்கின்றது என்றெல்லாம் அவர் விசாரணை செய்தார். சஜனி காந்த தாஸ் இல்லை என்ருல், இச்சமயத்தில் அவர் பாடு சங்கடமாயிருந்திருக்கும். தாராசங்கர் தம்மிடம் பணிபுரிவதாகவும் அவரது பணிக்காக அவருக்கு மாதம் முப்பது ரூபாய் ஊதியம் கொடுப்பதாகவும் சஜனி காந்த தாஸ் தம் கணக்குப் புத்தகத்தில் எழுதியிருந்தார்.

தாராசங்கருக்கு உண்மையில் மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபாய் ஊதியம் கிடைக்கவில்லை. தாராசங்கர் மீது விழுந்த சந்தேகத்தைப் போக்குவதற்காகக் கணக்கு சிறிது திரித்து எழுதப்பட்டிருந்தது. தனது கதைகளிலிருந்து வரும் ஊதியத்தைத்தான் அவர் தம் வாழ்க்கை நடத்துவதற்கு நம்பியிருந்தார். தென் கல்கத்தாவில் தகரக் கொட்டகை வேயப்பட்டிருந்த அறை ஒன்றை அவர் வாடகைககு எடுத்துக் கொண்டார், அதன் வாடகை மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய். மின்சாரக் கட்டணம் ஒரு ரூபாய். சாதாரண ஒட்டல் ஒன்றில் இரண்டு வேளை சாப்பாடு மாதம் ஒன்றுக்கு எட்டு ரூபாய். தேநீர், சிற்றுண்டி ஆகியவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு ஏழு, எட்டு ருபாய். போக்குவரத்து செலவும் அதே அளவில் ஆசியது. அறையைச் சுத்தம் செய்வது, துணிமணிகளைத் துவைப்பது எல்லாம் அவரேதான். தரையில் படுத்துறங்கிஞர், தனது தகரப்பெட்டியை எழுது பலகையாகப் பயன்படுத்திஞர்.

இவ்வாறு தமது எழுத்துத் தொழிலைத் தொடங்கிஞர் தாராசங்கர்.

அத்தியாயம்-4

தார்ராசங்கர் 1933-ல் கல்கத்தா வந்தபோது வங்காளத்தின் இலக்கிய உலகம் எப்படி இருந்தது?

கல்கத்தா அன்றும் இன்றும் வங்காளத்தின் முதுகெலும்பாக இருந்து வருகிறது. அரசியல் போராட்டம் நாடுமுழுவதும் நடந்து கொண்டிருந்தது. சிறு நகரங்களிலும் இலக்கிய மன்றங்கள்

இருந்தன. ஆனால் கல்கத்தாவில்தான் எழுத்தாளர்கள் குழுமி னர். பத்திரிகைகளும் நூல்களும் வெளியிடப்பட்டன. தாகூர், சரத்சந்திரர் ஆகிய இருவரைத் தவிர, மற்ற எழுத்தாளர்களின் படைப்புகளுக்குப் போதிய பணம் கிடைக்கவில்லை. எனினும், இளைஞர்களில் பலர் எழுத்துலகையே நாடிச் சென்றனர். அவர் கள் இலக்கியத்திற்காக வாழ்ந்தனர்.

அவர்களில் சிலரை மரணம் தழுவியது. ''நாங்கள் மரண தேவதையிடம் மையல் கொண்டுவிட்டோம். அரசியலிலும் இலக்கியத்திலும் புரட்சிவாதிகளைப் பொறுத்த வரையில் சாவு என்பது காதல் கீதமாகத்தான் இருந்தது, என்று அச்சின்த் குமார் சென் குப்தா எழுதுகிறார். (கல்லோல் யுகா : ஆசிரியர் அச்சின்த்குமார் சென்குப்தா) கற்பனை வளம் செறிந்த இளைஞர் கள், எழுத்தாளர்களானார்கள். தியாகத் தீயில் குதிக்கத் துடித்த இளைஞர்கள் புரட்சிவாதிகளாக மாறினார்கள்.

எழுத்தாளர் தொழில், வறுமையின் புகலிடம்; பட்டினி இருப்பதுதான் அங்கு பொழுதுபோக்கு என்பதை அறிந்தும் எழுத்தாளர்கள் அத்தொழிலை நாடிச் சென்றனர். தாராசங்க ருக்குச் சிறிது நிலம் இருந்தது. அவர் பட்டினி கிடக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், இத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன் அவர் சிறிது தயங்கத்தான் வேண்டியிருந்தது. அவர் கூட்டுக் குடும்பம் ஒன்றின் தலைவர்; அக்குடும்பத்தாரின் நலன் அவரது பொறுப்பில் இருந்தது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தாகூரின் மலான்சா (தோட்டம்) சார் அத்யாயா (நான்கு அத்தியாயங்கள்) துவி பான் (இரண்டு சகோதரிகள்) ஆகிய நூல்களும் சரத்சந்திரரின் ஸ்ரீகாந்த், திரித்ய பர்பாக (ஸ்ரீகாந்தன் வரலாறு - மூன்றாவது பாகம்) சேஷ பிரச்னு (இறுதி வினு) ஆகிய நூல்களும் தாகூரின் சதுரங்கா, காரேபாய்ரே (வீடும் வெளியும்) ஆகிய நூல்களும் சரத்சந்திரரின் பாத்தர் டாபி (கோரிக்கை) என்ற நூலும் வெளியிடப்பட்டன. கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நாவல் அஞ்சாநெஞ்சம் படைத்த புரட்சிக்காரர் ஒருவரைப் பற்றிய தாகும். இந்த நாவல் வெளிவந்ததும் வங்காளத்தில் புரட்சிப் புயல் வீசியது.

கல்லோல் பத்திரிகை பற்றியும் அதன் எழுத்தாளர்கள் பற்றியும் வெகுவாகச் சொல்லப்பட்டுள்ளது. உண்மை என்ன வென்றால், உலகமே அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது.

அரசியலில் பதட்டநிலை நிலவி வந்தது. பொருளாதார நிலையில் குழப்பம் தலைவிரித்தாடியது. அழகிய இலக்கியத்தில் மக்கள் தங்கள் மனதைப் பறிகொடுக்கவில்லை. எழில்மிகு ஓவியம் மக்கள் மனதைக் கவரவில்லை. இக்கால அளவில் நிலவி வந்த குழப்பத்திலேயே மக்கள் ஈடுபட்டிருந்தனர். ரஷ்யப் புரட்சி அடிமை நாடுகளின் மக்களைக் கவர்ந்தது. முதல் உலகப் போருக்குப்பின், உலகம் சிறியதாகிவிட்டது எனச் சொல்லலாம். மற்ற நாடுகள் பற்றியும் நாட்டு மக்கள் பற்றியும் தெரிந்து கொள்வதில் அனைத்து நாட்டு மக்களும் ஆர்வம் காட்டினர். நாடு, மொழி வேறுபாடின்றி ஏனைய நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களை அறிந்து கொள்வதில் இளைய தலைமுறையினர் ஆர்வங் காட்டினர். ஜோலா, கார்க்கி, ஹம்சுன், போஜர், ரோலண்ட் போன்ற எழுத்தாளர்கள், ரசிகர்கள் ஆகியோரின் உள்ளங்களைக் கவர்ந்தனர்.

கல்லோலில் வெளியிடப்பட்ட கதைகள், நாவல்கள், கவிதைகளில் வாழ்க்கையின் உண்மை நிலை, கசப்பான அனுபவங்கள், நடைமுறையில் நடக்கும் நிகழ்ச்சிகள் சித்திரித்துக் காட்டப்பட்டிருந்தன. கல்லோல் இத்துறையில் புதுமைப்புரட்சி செய்து விட்டதாகவும் சொல்ல முடியாது. ஏனெனில், பாரதி, ஸபூஜ் பத்ரா, மானசி முதலிய பத்திரிகைகளில் வெளிவந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகளில் சில எழுத்தாளர்கள் இத்தகைய படைப்புகளை ஏற்கனவே அளித்திருந்தனர் என்று தெரிகிறது. முந்தைய தலைமுறையை எடுத்துக் கொண்டாலும், சாருசந்திரா பானர்ஜி, பிரேமன்குர் அத்தர்தி, மணீந்தரலால் பாஸு, ஹேமேந்த்ரகுமார் ராய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். ஜகதீஷ் குப்தாவும் ரமேஷ் சந்திரஸென்னும் பின்னர் வந்த எழுத்தாளர்கள். எனினும், சமூச வாழ்க்கையின் உண்மை நிலையை உள்ளது உள்ளவாறே இவர்கள் விவரித்தனர்.

கல்லோல் பத்திரிகை பற்றி ஏதோதோ சொன்னோமே தவிர, முக்கியமாக ஒன்றைப்பற்றிக் குறிப்பிடத் தவறிவிட்டோம். இப்பத்திரிகையின் எழுத்தாளர்கள் இளைஞர்கள். அரசியலிலும் பொருளாதாரத்திலும் அமைதியின்மை தாண்டவமாடிய காலம் அது. எனினும் அவர்களுக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை. நாட்டை அதிர்ச்சியடையச் செய்த நிகழ்ச்சிகளில் அவர்கள் நாட்டம் செலுத்தவில்லை. இத்தகைய ஒரு பாரம்பரியத்தை அவர்கள் ஏற்படுத்தினர். அது இன்றும் தொடர்ந்து வருகிறது. எழுத்தாளர்களில் பெரும்பாலோர் இன்றுவரை தங்கள் காலத்திய அரசியல் நிகழ்ச்சிகள் பற்றிக் கவலை கொள்வதில்லை. கல்லோல் 1920-30 ஆண்டுகளிலே தோன்றியது.

1924ஆம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்டுகளின் முதல் தொகுதியினர் கான்பூர் சதி வழக்கில் தண்டிக்கப்பட்டனர். அதே ஆண்டு, கோபிநாத் ஸாஹா என்னும் வங்காள இளைஞர் ஒருவர், ஐரோப்பியர் ஒருவரைக் கொடுமையான ஆங்கிலேய போலீஸ் அதிகாரி என்று தவறாக நினைத்து அவரைக் கல்கத்தாவின் தெருக்களிலே சுட்டுக் கொன்றார். அதற்காக அவர் பின்னர் தூக்கிலேற்றப்பட்டார். 1925ஆம் ஆண்டில் சில பயங்கரவாதிகள் காக்கோரி ரயில் நிலையத்தில் பணப் பெட்டியைக் காவல் செய்து கொண்டிருந்தவனிடமிருந்து பணத்தைக் கைப்பற்றினர். அதற்காக அவர்களில் சிலர் காகோரி வழக்கிற்குப் பின்னர் தூக்குக் கயிற்றைத் தழுவ வேண்டியதாயிற்று. அதே ஆண்டில்தான் தட்சினேஸ்வரர் வெடிகுண்டு வழக்கும் நடந்தது.

1926-1927ல் தொழிலாளர்—விவசாயிகள் கட்சி தொடங்கப்பட்டது. சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை வழக்கு பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். 1931ஆம் ஆண்டில் மிதுனபூரில் உள்ள ஹிஜிலி சிறையில் போலீசார் துப்பாக்கியால் சுட்டதனால் இரண்டு கைதிகள் இறந்தனர். 1931, 1932, 1933 ஆகிய ஆண்டுகளில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளாகப் பணி புரிந்துவந்த ஆங்கிலேயர் மூவர் மிதுனபூரில் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். போலீஸ் படையினர், கையில் அகப்பட்டவர்களைச் சித்திரவதை செய்தனர். அவர்களின் அடக்குமுறைக்கு ஓர் எல்லையே இல்லாமல் இருந்தது. எழுத்தாளர் ஒவ்வொருவரும் இந்த அடக்குமுறைக்குத் தங்கள் எதிர்ப்பை எழுத்தில் வடித்து, நாட்டில் புரட்சிக் கனலை உருவாக்குவர் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. ஆனால், கல்லோல் எழுத்தாளர்கள் இப்படிச் செய்யவில்லை. துவர்கள் கற்பனை வளத்தில், துயரத்தின் சாயை படிந்திருந்தது. இலக்கியத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்துவந்த பழமையை எதிர்த்து முணுமுணுப்பு இங்குமங்கும் கேட்டது. இந்த இரண்டு கருத்துக்களையும் மையமாகக் கொண்டே கல்லோல் எழுத்தாளர்கள் தங்கள் கதைகள், கட்டுரைகள், நாவல்களை வரைந்தனர். அரசியலில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை என்றால் அதற்கு எவ்வித உள்நோக்கமும் இல்லை. சமுதாயத்தில் கைவிடப்பட்டவர்கள், பின்தங்கிய மக்கள், வறுமையில் உழலும் மக்கள் ஆகியோரிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்பதை மையமாக வைத்து ஒரு சில எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களைச் சமைத்தனர். குடிகாரர்கள், பரத்தைகள், பிச்சைக்காரர்கள் வறுமை காரணமாகக் குற்றவாளிகள் ஆனவர்கள் ஆகியோர் பற்றி மானிஷ் கடக்

(இவரது புனைப் பெயர் யுவனஸ்வா). கல்லோல் பத்திரிகையில் எழுதிய கதைகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. நிருபேந்தர கிருஷ்ணு சட்டர்ஜி, அக்காலத்திய மக்களின் உணர்ச்சிப் போக்கைப் புரிந்துகொண்டு கார்க்கியின் 'தாய்' என்ற நூலை மொழிபெயர்த்துக் கல்லோல் பத்திரிகையில் வெளியிட்டார். இக்காலத்திய இலக்கிய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இலக்கிய உலகில் கல்லோல் ஆற்றிய பணி மிகவும் பாராட்டத்தக்கது என்று சொல்லமுடியாது.

தாரா சங்கர் அக்காலத்து மக்களின் உணர்ச்சியைப் புரிந்து கொண்டிருந்தார். எனவே, அவர் அதனைக் கடுமையாகத் தாக்க வில்லை. 'ஐரோப்பிய இலக்கியத்தைப் பின்பற்றி எழுதுவதும் அந்த இலக்கியத்தின் கருத்துக்களை எதிரொலிப்பதுவுமே இக் காலத்திய இலக்கியம என்று விமரிசகர்கள் கூறுகின்றனர். அவர்கள் சொல்வதில் தவறில்லை. அவ்வாறு 'காபி' அடிப்பது இங்குள்ள எழுத்தாளர்களின் போக்காக உள்ளது. ஆனால் இதை விட உண்மை என்னவென்றால், எழுத்தாளர்கள் மன நிறை வின்றி, அமைதியின்றித் தவித்தனர் என்பதுதான். மக்கள் எழுச்சி, இருமுறை அதாவது 1921, 1930ஆம் ஆண்டுகளில் தோல்வியுற்றது. உணர்ச்சிக்கும் உண்மைக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த இயலும் என்று நம்பும் வகையில் அகிம்சை இயக்கம் உறுதியளித்தது. ஆனால் இவ்வாக்கு நிறைவேற்றப் படவில்லை. முதல் உலகப் போரினால் உலகெங்கும் அரசியல் பொருளாதாரக் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. மக்கள் வாழ்க் கையில் மன நிறைவின்மையும் அமைதியின்மையுமே தாண்டவ மாடுகின்றன. மக்கள் அகிம்சைக் கொள்கையில் நம்பிக்கை இழந்துள்ளனர். பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்கிவிட்டனர். மக்களிடையே நிலவும் அதிருப்திக்கு இதைவிட என்ன சான்று வேண்டும்? புரட்சி என்பது இலக்கியத்தின் முக்கிய குறிக்கோ ளாகியது. பொறுமை இழந்து, அமைதியின்றித் தவித்த இளைஞர் கள், தங்கள் உள்ளங்களில் அலைமோதிய எண்ணங்களை இலக்கியத் திலும் புகுத்தினர்.

வங்காளத்தில் நிலவிவந்த அரசியல் நிலைமை, இளம் எழுத் தாளர்களைப் பாதித்ததாகத் தெரியவில்லை. இலக்கியத்தில் புரட்சியை உருவாக்கவே அவர்கள் முனைந்தனர். அரசியல் அமைப்பில் புரட்சி செய்ய அவர்கள் விரும்பவில்லை. ஆனால் அவர்களைச் சுற்றிலும் வீசிய காற்றிலே அமைதியின்மையை அவர்கள் நுகர்ந்தார்கள். அதன் காரணமாகப் புரட்சிக்கனல் அங்கே கனன்று எரிந்தது.

எல்லா எழுத்தாளர்களேயும் கல்லோல் பத்திரிகையே இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது என்று சொல்ல முடியாது. பிரயாசி, பைசித்ரா, பாரதவர்ஷா ஆகிய மூன்றும் புகழ் பெற்ற பத்திரிகைகள். பிரபாசிக்கு நல்ல மதிப்பு இருந்தது. அச்சின்த்ய குமார் சென்குப்தா கல்லோலுக்கு எழுதுவற்கு முன்னர் பிரபாசியில்தான் எழுதத் தொடங்கிஞர். மணிக் பானர்ஜியின் கதைகள் பைசித்ராவில் வெளியிடப்பட்டன. எல்லாவற்றையும்விட இலக்கியக் சண்ஞேட்டத்தில் மிக முக்கியமானது பிபூதிபூஷன் பானர்ஜி அவர்களின் 'சாலேயின் சதை' 1929-ல் வெளிவந்ததேயாகும். பிரசித்தி பெற்ற இந்நாவல் பைசித்ராவில் தொடர்கதையாக வெளிவந்தது. சனிவார சிட்டி (சனிக்கிழமைக் கடிதம்) என்னும் பத்திரிகை பழமையில் நம்பிக்கை கொண்டது, இதன் ஆசிரியர் ஜைனிகாந்த தாஸ். சுரேஷ் சந்திர சக்கரவர்த்தி உத்தரா என்னும் பத்திரிகையைக் காசியிலிருந்து வெளியிட்டு வந்தார். துர்ஜாடிபிரஸாத் முகர்ஜியின் கதைகள் உத்தரா பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தன. சுசீந்திரநாத் தத்தா, பரிச்சயா என்னும் காலாண்டு இதழை 1931ஆம் ஆண்டிலிருந்து வெளியிடத் தொடங்கிஞர். புத்ததேவ பாசுவின் கவிதா என்னும் கவிதை இலக்கிய இதழ் 1935-ல் வெளிவந்தது. பரிச்சயா தரம் செறிந்த இலக்கிய இதழ். கவிதா புதுமைக் கவிதை இலக்கியத்திற்கு ஆற்றிய பணி அளவிறந்தது. புதுமைக் கவிதை எழுதுவதே பாவம் என்று நினைத்த காலத்தில் கவிதா, புதுமைக் கவிதைகளை எழுதிய புதுமைக் கவிஞர்களுக்கு நல்ல புகலிடமாய் விளங்கியது.

கிராம வளர்ச்சிப் பணியின் தொடர்பாகத்தான் தாராசங்கர் முதன் முதலில் தாகூரைச் சந்தித்தார். சில காலத்திற்குப் பின்னர் தாராசங்கர் ராய்கமல் (வைணவப் பெண் ஒருத்தியின் பெயர்) என்ற தமது நாவலேயும் சலனமாயி என்ற தமது கதைத் தொகுப்பினேயும் அஞ்சல் வழியாகத் தாகூருக்கு அனுப்பிஞர். தாகூருக்கு அந்த நாவல் மிகவும் பிடித்திருந்தது. அதைப் பாராட்டி அவர் தாராசங்கருக்குக் கடிதம் எழுதிஞர். கதைகளேப் பாராட்டி அவருடைய அடுத்த கடிதம் சென்றது. தாகூரைப் பார்க்க, தாராசங்கர் சாந்தி நிகேதன் சென்ருர். தாராசங்கருடன் ஏற்பட்ட முதல் சந்திப்பைத் தாகூர் மறக்கவில்லே. கிராமச் சூழலே மையமாக வைத்து தாராசங்கர் எழுதியுள்ளதுபோல் வங்க இலக்கியத்தில் வேறு எவருமே வரையவில்லே என்று தாகூர் பாராட்டிஞர். கிராம சூனியக்காரி பற்றிய கதை பற்றி அவர்கள் பேச்சு திரும்பியது. கல்கத்தாவில் ஓர் அறிஞருடன் இது பற்றித் தாம் நடத்திய விவாதத்தைத் தாகூர் நினைவு

கூர்ந்தார். அக்சதைக்கான கரு, மேலைநாட்டு இலக்கியத்திலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும் என்று அந்த அறிஞர் கூறியதையும் அதைத் தாம் மறுத்ததையும் தாராசங்கருக்கு தாகூர் எடுத்துரைத்தார். வங்காள எழுத்தாளர்கள் கிராமச் சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ளாதது தாகூருக்கு வருத்தமாக இருந்தது. தாகூரின் பாராட்டுரைகள் தாராசங்கருக்கு பேருவகையை அளித்தது. அவர் மீண்டும் தாகூரைக் கல்கத்தாவில் சந்தித்து ஜல்ஸாகர் (விருந்துக் கூடம்) என்னும் தன் கதைத் தொகுப்பினை அவரிடம் ஈந்தார். தாகூர் அதன் பின்னர் உடல் நலிவுற்றார். நோய்வாய்ப்படுமுன், ராய்பாரி (ஒளிரேகை இல்லம்) என்னும் கதையை அவர் படித்தார். அக்கதையில் ரபனேஸ்வர் ரே என்பவர் வீட்டை விட்டுச் செல்கிறார். வீதியில் இறங்கிய அவர் இறுதியாக ஒருமுறை வீட்டை நோக்க விரும்பித் திரும்பிப் பார்க்கிறார். விருந்துக் கூடத்தில் ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் விளக்குகள் அவரைத் திரும்பி வருமாறு அழைத்தன போலத் தோன்றியது. ஒளியின் அழைப்பை மறுக்காது அவர் இல்லம் திரும்புகிறார். ரபனேஸ்வர் திரும்பிய நிலைக்கும், கொடிய நோயின் காரணமாக நினைவிழந்து கிடந்த நிலையிலிருந்து தாம் நினைவிற்கு வந்த நிலைக்கும் தாகூர் பெரும் ஒற்றுமையைக் கண்டார்.

தாராசங்கர் அடுத்தமுறை சாந்திநிகேதன் சென்றபோது அவர் ஏன் அடிக்கடி சாந்திநிகேதன் வருவதில்லை என்று தாகூர் தாராசங்கரை அன்புடன் கடிந்து கேட்டார். தாராசங்கர் சாந்திநிகேதனுடன் மேலும் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டுமென்று தாகூர் பெரிதும் விரும்பினார் என்பது தாராசங்கர் எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. அம்மாவட்டத்தில் உள்ளவர்களே சாந்திநிகேதனுக்கு வருவதில்லை என்று தாகூர் குறைபட்டுக்கொண்டார் என்றும் சாந்திநிகேதனுக்கு வருவதில் அவர்களுக்கு என்ன தடை என்று தாகூருக்கு விளங்கவில்லை என்றும் தாராசங்கரின் குறிப்புகள் கூறுகின்றன. தாராசங்கருக்கு நல்ல எதிர்காலம் இருப்பதைத் தாகூர் உணர்ந்து கொண்டார். தாராசங்கர் வேறுமாதிரியானவராக இருந்தால், அவர் தாகூரிடம் நெருங்கிப் பழக முயற்சி செய்திருப்பார். இளம் எழுத்தாளர்களுக்குத் தாகூர் காட்டிய ஆதரவு அனைவரும் அறிந்ததே. தமக்குத் தாராசங்கரின் படைப்புகள் பிடித்திருப்பதாக தாகூர் கூறியதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற தாராசங்கர் முயற்சி செய்யவில்லை என்பதிலிருந்து அவரது நற்பண்பினை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

எழுத்தாளராக இராதபோது அவருக்கு அதிக இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. எழுத்தாளராகத் தனது வாழ்க்கையைத்

தொடங்குகையில் தடைகள் எழினும், அவரது திறமையை அனைவரும் விரைவில் உணர்ந்துகொண்டனர். இது எல்லா எழுத்தாளர்களுக்கும் கிடைக்கக் கூடிய வாய்ப்பு அல்ல. இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த பலர் அவருக்கு உற்ற நண்பர்களாகத் திகழ்ந்தனர். ஸஜனிகாந்த தாஸ் கிண்டலும் கேலியும் நிறைந்த எழுத்தாளர். அவரது எழுத்து வன்மைக்கு முன்னே எழுத்தாளர் பலர் அஞ்சி நடுங்கினர். எனினும் அவர் தாராசங்கரின் நெருங்கிய நண்பராக இருந்தார். கவிதை உலகில் முன்னணியில் நின்ற மோஹித்லால் மஜூம்தார், சிறந்த கட்டுரையாளர்; திறனாய்வாளர். அவரும் தாராசங்கர் தலை சிறந்த எழுத்தாளர் என்று கருதினார்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் வங்காளத்தில் சிறந்த அறிஞராகவும் எழுத்தாளராகவும் வர்ணனையாளருமான பிரஜேன்தரநாத் பானர்ஜி, தாராசங்கரின் நண்பர்; தாராசங்கரின் நலம் விழைந்தவர். அனைவரின் மதிப்பையும் கவர்ந்த பத்திரிகையாளரான இராமானந்த சட்டர்ஜி தனது பத்திரிகையில் தாராசங்கரின் படைப்புகளைத் தவறாது வெளியிட்டார். தொடக்க காலத்தில் தமது புத்தகங்களை வெளியிடத் தாமே செலவிட நேர்ந்தாலும், காலப்போக்கில் அவரது நூல்களை வெளியிட பதிப்பாளர்களும் நூல் வெளியீட்டாளர்களும் தயங்காது முன்வந்தனர். கிராமச்சூழ்நிலை பற்றி அவர் தனிக் கண்ணோட்டத்துடன் எழுதினார். மறுப்புக்கும், சர்ச்சைக்கும் உரிய எதைப்பற்றியும் அவர் எழுதவில்லை. தெரிந்த ஒன்றைப் பற்றி, வங்காளத்தின் கிராமங்களைப் பற்றி எழுதிய சிறந்த ஓர் எழுத்தாளரை வங்காளத்தின் இலக்கிய ரசிகர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டனர். அவர் உள்ளத்தில் ஒளிவீசிய உண்மைகளை நெஞ்ச நிறைவோடு எழுதினார். அதே சமயத்தில் அவர் புதிய வழிக்கும் செல்லவில்லை. எனவே மக்கள் அவரை மனமார வரவேற்றனர்.

அத்தியாயம்-5

சிறுகதைகள் மூலமாகவே தாராசங்கர் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார்.

அவருடைய சிறுகதைகள் வண்ணங்கள் பல படைத்தவை. அவற்றை வகைப்படுத்துவது என்பது கடினம். தாரா சங்கர், வரலாற்றையும் அரசியலையும் உணர்ந்தவர். தமது வாழ்க்கையில் தாம் அனுபவத்தில் கண்டவற்றை எழுத்தில் வடித்தார். அவருடைய முக்கியமான கதைகளை எடுத்துக் கொண்டு அவை எவ்வாறு அவரது எண்ணங்களை—கருத்தோட்டங்களை எதிரொலித்தன என்று நாம் பார்ப்போம். ஜலசாகர், ராய்பாரி, சாரேசாட் கண்டர் ஜமீன்தார் மற்றும் சில கதைகள் ஜமீன்தார்களின் வாழ்க்கை பற்றிய பல்வேறு கூறுகளை விவரிக்கின்றன. ஏழ்மையுற்ற ஜமீன்தார்களின் வீழ்ச்சி பல கதைகளில் வருகின்றது. ரபனேஸ்வர் ரே பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஜமீன்தார்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ராய்பாரி அவரது கதையாகும். அவர் ஒரு சர்வாதிகாரி, கொடுமையானவர், எதற்கும் துணிந்தவர். அதே சமயத்தில் தாராள மனப்பான்மை கொண்டவர். அவரது முன்னோர்கள், உழவர்களைச் சுரண்டிச் சேர்த்த பெருஞ் செல்வம் அவரது திருவிளையாடல்களுக்கு உறுதுணையாக நின்றது. காமக் கேளிக்கைகளில் ஆர்வமும் விழைவும் கொண்ட இவர் பெரியதொரு விருந்துக்கூடம் ஒன்றைக் கட்டுகிறார். அக்கூடத்தில் அவர் கேளிக்கைகளைத் தொடங்கும் நாளன்றே அவரது மனைவியும் மகனும் இறக்கின்றனர். அதிர்ச்சியுற்ற அவர் வீட்டைவிட்டு வெளியேறுகின்றார். அரண்மனையைக் கடைசி முறையாகப் பார்க்க வேண்டுமென்ற அவா அவரைப் பிடர்பிடித்து உந்துகிறது. திரும்பிப் பார்க்கிறார். ஒளியை நாலாபுறமும் பரப்பிக் கொண்டிருக்கும் மணிவிளக்குகள் அவரை 'வா' என்று அழைப்பது போன்று அவருக்குத் தோன்றுகிறது. அவர் இல்லம் திரும்புகின்றார்.

பிஸ்வாம்பர் ரே, ரபனேஸ்வரின் பேரர். ஜலசாகர் என்ற நாவலில் இவர்தான் கதாநாயகர். முன்னோர்களிடமிருந்து இவருக்குக் கிடைத்ததெல்லாம் பெருங்கடன்தான். அக் கடனுடன், நீண்ட நாளாக நீதிமன்றத்தில் முடிவுறாமல் உள்ள வழக்கும் இளவரசனுக்கே உரிய குணங்களும் அவரது முன்னோர்கள் அவருக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள். பயன்படாதிருந்த கூடம், வயதான குதிரை ஒன்று, வயது முதிர்ந்த யானை ஒன்று ஆகியவை அவரது முன்னோர்களின் பெருமையை நினைவூட்டக் கூடிய சின்னங்கள். புதுப் பணக்காரன் கங்குலியிடம் பிரிவி கவுன்சில் வழக்கில் தோற்றுவிடுகிறார், அன்றுகூட அவர் தம் களியாட்டங்களை நிறுத்தவில்லை, கங்குலியின் துணிச்சலினால் எரிச்சலுற்று, அவர் இரண்டு பாடகிகளை—நடன நங்கையரைத் தமது மாளிகைக்கு அழைக்கிறார். தம் கையில் உள்ள கடைசி காசு

வரையில் கடைசி விருந்துக்காகச் செலவிடுகிறார். காலையில் எழுந்து, வழக்கம்போல் குதிரையில் செல்கிறார். செல்லும் வழியில் உள்ள கிராமங்கள், முன்பு அவருக்குச் சொந்தமானவை. இப்போது அவை கங்குலியின் உடைமைகளாகிவிட்டன. உலகம் அவரைப் பார்த்து நையாண்டி செய்கிறது. எல்லோருடைய கேலிக்கும் கிண்டலுக்கும் நகையாடலுக்கும் தாம் ஆளாகிவிட்டதை உணர்கிறார். தமது இல்லம் திரும்புகிறார், படிகளில் ஏறி வருகையில், மாளிகையின் கதவுகள் திறந்திருப்பதையும் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதையும் அவர் காண்கிறார். சுவர்களில் மாட்டப்பட்டிருந்த உருவப் படங்களிலிருந்து அவரது முன்னோர்கள் அவரை வெறுப்புடன் பார்ப்பதுபோல் தோன்றுகிறது. அந்த முன்னோர்கள் உருவப் படங்களில் தம்மைக் காண்கிறார். கண்மூடித்தனமான காமவெறி பரம்பரையாகத் தமது உதிரத்தில் ஊறியிருப்பதை உணர்கிறார். அச்சம் அவரை ஆட்டி வைக்கிறது; அலறுகிறார்; அழைக்கிறார் தமது பணியாட்களை; அந்த விருந்துக் கூடத்தின் கதவுகளைத் தாளிடச் சொல்கிறார்.

தாராசங்கருக்கு ஜமீன்தார்களிடம் கடைசிவரை அனுதாபம் இருந்தது. இந்த இரண்டு கதைகளிலும் உயிரோட்டம் உள்ளது. உணர்ச்சி மிகுந்த உரையாடல்கள் நிறைந்துள்ளன. சாரேசாட் கண்டர் ஜமீன்தாரில் வரும் பான் பிஹாரி சர்க்கார் முதியவர். தமது காலத்தால் ஒதுக்கப்பட்டவர். அவர் தனது மருமகனுடன் வாழ்ந்து வருகிறார். தனது குடிமக்களிடமிருந்து வரி வசூலிக்க முயற்சி செய்கிறார். அவர் சிறு ஜமீன்தார்தான் என்பதையும், அவரால் ஏதும் செய்ய இயலாது என்பதையும் விவசாயிகள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் வரி செலுத்துவதைப் பற்றி கவலைப்படவேயில்லை, அவரது செயல்களைக் கண்டு அவரது மருமகன் நாணித் தலை குனிந்தார். இறுதியில் அந்த வயோதிகர் தனது வாழ்க்கை பயனற்றது என்பதை உணர்ந்து கொள்கிறார். தன்னைக் காசிக்கு அனுப்பும்படி மருமகனைக் கேட்டுக் கொள்கிறார். ஏழை ஜமீன்தாரின் துயரக் கதை என்பதனால் இக் கதையைப் படிக்கும்போது வருத்தம் ஏற்படுவதில்லை. தனது காலத்தையும் தாண்டி வாழ்ந்த வயோதிகர் ஒருவர், தனது கையறு நிலையை உணர்ந்து, மற்றவர்கள் முன்னேற்றத்திற்குத் தான் ஒரு முட்டுக்கட்டை என்பதை அறிந்து அவதியுறுவதுதான் துயரக் கதையாக அமைகிறது, வாழ்க்கையில் பயனற்றவர்களாகி, மற்றவர்களுக்குச் சுமையாக வாழ்வதனால் அனைவருக்கும் சங்கடம் ஏற்படுகிறது.

மனிதனின் இயல்பான உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் அடிப்படையாக வைத்தே அவர் தம் கதைகளைப் புனைந்தார். சில

சமயங்களில் மனிதர்கள் உணர்ச்சிவயப்பட்டுத் தங்கள் இயல்புக்கு மாருக நடந்து கொள்கின்றனர் என்ற கருத்தை அவர் ஏற்றுக் கொண்டார். உணர்ச்சி வெள்ளம் பாயந்தோடும் நிகழ்ச்சிகளையும் சோகம் ததும்பும் காட்சிகளையும் படைப்பதில் இவருக்கு ஆர்வம் அதிகம். மனிதனின் மடமை, அவனுடைய காதல், காமம், ஆகியவை பேடனி (நாடோடிப் பெண்) தாரினி மஜ்ஹி (தாரினி, படகுக்காரர்) என்ற நாவல்களில் பிரதிபலிக்கின்றன. ஒன்று காதலையும் மற்ருென்று தன்னைக் காப்பாற்றிக் கொள்வதில் மனிதனுக்குள்ள உணர்வையும் பொருளாகக் கொண்டது.

முதல் கதை ராதிகா என்ற நாடோடிப் பெண்ணின் கதை. அவள் ஒவ்வோர் ஆண்டும் கிராமச் சந்தைக்குத் தனது காதலன் சம்புவுடனும், ஒரு கூடாரத்துடனும், வயதான ஒரு சிறுத்தையுடனும் வருவது வழக்கம். சம்புவின் ஆரஞ்சு நிறக் குஞ்சியும் கூண்டில் அடைக்கப்பட்ட சிறுத்தையும் அவளைக் காந்தம் போல ஈர்த்தன. தனது கணவனை விட்டுவிட்டு சம்புவுடன் சரச வாழ்க்கை நடத்த வந்தாள். சம்புவுக்கும் சிறுத்தைக்கும் வயதாகிவிட்ட போதிலும் அவளுக்கு அவர்கள்பால் இருந்த ஈடுபாடு குறையவில்லை. ராதிகாவோ இளமைப் பூரிப்புடனும் கட்டான உடலுடனும் கவர்ச்சி குன்ருமல் நின்ருள். ஏதோ ஒரு விசித்திர மான பிணைப்பால் அவனைவிட்டுப் பிரியாமல் அவனுடன் வாழ்ந்து வருகிருள். இந்த ஆண்டு கிஷ்டோ வருகிருன். அவனும் ஒரு நாடோடி; இளைஞன், அழகன். அவனும் கிராமச் சந்தையில் கூடாரம் போடுகிருன். சம்புவும் ராதிகாவும் இதனைத் தகாத போட்டி எனக் கருதி எரிச்சலடைகின்றனர். அவன் கூடாரத்திற்குத் தீ வைக்க முடிவு செய்கின்றனர். நள்ளிரவு. ராதிகா, கிஷ்டோவின் கூடாரத்தில் பூனைபோல் நுழைகின்ருள். கிஷ்டோ அமைதியாக உறங்குவதைக் காண்கிருள். அவன் முகத்தில் நிலவிய அழகு, அவளை நிலைகுலையச் செய்கிறது. அவனை எழுப்புகிருள். தன்னுடன் வந்துவிடுமாறு அவனை அழைக்கிருள். அவள் அழைப்பு அவனுக்கு அமுதமாக இனிக்கிறது. சிறிது கூடத் தயங்காமல் அந்நங்கையுடன் ஓட இசைகிருன். ராதிகா அத்துடன் நிற்கவில்லை. சம்புவின் கூடாரத்திற்குத் தீ வைக்கிருள். "சம்புக் கிழவன் 'சாம்பலாகட்டும்'' என்று கூறிக் கைகொட்டிச் சிரிக்கிருள். இளைஞர்களுக்கும் காதலர்களுக்கும் தான் இவ்வுலகில் வாழ உரிமை உண்டு. வயோதிகர்களுக்கும் நாடி தளர்ந்தவர்களுக்கும் இங்கு இடமில்லை. பேடேனி, தாரா சங்கர் எழுதிய பெரிய கதைகளில் ஒன்ருகும். தனது பாத்திரங்களை அவர் உண்மை வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுத்தார். அவர்களின் பண்புகளை இயல்பாக வடித்தார். ராதிகாவை

வர்ணிக்கையில் தாராசங்கர் துவருக்குப் பிடித்தமான உவமைகளைக் கையாண்டார். ராதிகா ஒரு மெல்லியலாள். கண்டோர் மயங்கும் எழில்மிகு தோற்றமுடையவள். கருநாகம் போன்று உயர்ந்தவள். மதுக் கடலில் மூழ்கித் திளைத்து, நீந்தி விளையாடி வெளிவந்தவள்போல், அவள் உடல் போதையைத் தந்தது. அம்மங்கையின் புன்னகையில் வாளின் கூர்மை மறைந்து மின்னியது. அவளைக் காதலித்தவர்கள் இறுதியில் சாதலை அடைந்தனர்.

தாரிணி ஒரு படகுக்காரன். மனித இயல்பு எவ்வளவு கீழ்த்தரமானது என்பதை தாராசங்கர் இக் கதையில் விவரிக்கிறார். ஆற்றில் வெள்ளம் வந்தால்தான் மக்கள் படகைத் தேடுவர். அப்பொழுதுதான் படகோட்டிக்குப் பணம் கிடைக்கும். எனவே, வெள்ளம் வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டு மயூராக்ஷி நதிக்கு தாரிணி பலி கொடுக்கிறான். ஆனால் மக்கள் அவனைத் திட்டுகின்றனர். ஏனெனில் வெள்ளம் வந்தால் மக்கள் அளவற்ற இன்னலுக்கு ஆளாவர். ஆனால் வெள்ளம் அடித்துவரும் வண்டல்' மண்ணுக்கு வளமூட்டும்—வறண்ட நிலம் வளம் பெறும். கரம்பு நிலம் கழனி நிலமாகும். நீண்ட கால வறட்சிக்குப் பிறகு பெரும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. எங்கு பார்த்தாலும் கொந்தளிக்கும் ஆற்று வெள்ளம் ஆர்ப்பரித்துக் கொண்டு பாயகிறது. தாரிணி தன் மனைவி மீது தணியாக் காதல் கொண்டவன். அவளுடன் படகில் தப்பிச் செல்கிறான். அப்பொழுது படகு கவிழ்கிறது. ஆற்றுச் சூழலில் இருவரும் தத்தளிக்கின்றனர். அவன் மனைவி பயத்தில் அவனை இறுகப் பற்றிக் கொள்கிறாள். இருவரும் மூழ்குகின்றனர். அது ஜீவ மரணப் போராட்டம். ஒருவர்தான் தப்பிக்கலாம். மற்றொருவர் மரணத்தைத் தழுவித்தான் ஆக வேண்டும் என்ற நிலை. வெறி பிடித்தவன்போல் தாரிணி, தன் மனைவியின் சழுத்தை நெறிக்கிறான். அவளது பிடி தளர்கின்றது. அவளை உதறிவிட்டு மேலே நீந்தி வருகிறான். தண்ணீருக்கு மேலே தலையை நீட்டி நன்றாகக் காற்றை சுவாசிக்கிறான். தான் உயிருடன் இருப்பதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறான். மனிதன் எவ்வளவு கீழ்நிலைக்குப் போகிறான் என்பதைத் தாராசங்கர் மிகவும் அழகாக வர்ணிக்கிறார். இத்தகைய சூழநிலையில் மனிதன் விலங்குகளைப்போல நடந்து கொள்கிறான் என்பதை தாராசங்கர் விவரிக்கையில் எல்லோரையும் மிஞ்சிவிடுகிறார்.

இயற்கையை மீறிய சக்திகளில் மனிதனுக்கு உள்ள மூட நம்பிக்கை விசித்திரமானது. இந்த மூடநம்பிக்கையின் காரணமாக மனிதன் தன் இயல்புக்கு மாறான செயல்களைச் செய்கிறான்.

இயற்கையை மீறி நடந்து கொள்கிறன். இக்சருத்தை மையமாக வைத்துச் சில கதைகள் எழுதப்பட்டுள்ளன. அறிவொளி பரவி வரும் இக்காலத்திலும் அறியாமை என்னும் இருள் இருந்து கொண்டுதான் வருகிறது. வாழ்நாள் முழுவதும் நாகரிகமான மனிதனுக வாழ்ந்து வரும் ஒருவன் திடீரென காட்டுமிராண்டியாக—அரக்கனுக மாறி விடுகிறன். காட்டுமிராண்டியாக—அரக்கத்தனமாகத் தன் குழந்தையையே ஆற்றில் வீசி எறிகிறன். விதவைச் சிறுமியை— இறந்த அவள் கணவன் உடலுடன் சேர்த்து எரிக்கிறன். காளிக்கு நரபலி கொடுக்கிறன்.

சலனமாயி என்னும் நாவலில் நிலக்கரிச் சுரங்கத்தின் மேலாளர் ஒருவர் வருகிறர். சில தாந்தீரிக சடங்குகளைச் செய்வதன் மூலம் இயற்கையை வென்று மகாசக்தி அடைய விரும்புகிறர். சில நல்ல அங்க அடையாளங்களுடன் கூடிய மனிதனின் உடல் அவருக்குத் தேவைப்படுகிறது. ஆனுல் அத்தகைய மனிதனின் உடல் சுடுகாட்டிலிருந்து அவருக்குக் கிடைக்கவில்லை. எனவே அத்தகைய அடையாளங்களுடன் கூடிய மனிதனைக் கண்டுபிடித்துக் கொல்கிறர், கொன்ற அந்த உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று சில சடங்குகளைச் செய்கிறர். அப்பொழுது அங்கு வந்த அவருடைய மகள் அங்கு நடப்பதைக் கண்டு அழுகிறள்—துடிக்கிறள். ஏனெனில் அங்கு கொல்லப்பட்டுக் கிடந்தது அவளுடைய கணவனின் உடல். இதை அறிந்து திடுக்குற்ற அவளுடைய தந்தை இருளில் தப்பி ஓடிவிடுகிறர். அவர் விரும்பிய அனைத்து அடையாளங்களுடன் கூடிய உடல் கிடைத்தும் அவருடைய குறிக்கோள் ஈடேறவில்லை. மகாசக்தி அவரை விட்டு நழுவி விடுகிறது. மந்திர தந்திரங்கள், பாம்புகள், நாடோடிகள், ஈமச் சடங்குகள், வேட்டை, இரத்தக் களரி, கொடூரம், மிருகத் தன்மை, வன்முறை, நோய், காமவெறி இவையெல்லாம் தாராசங்கரின் கதைகளில் ஏராளமாக வருகின்றன. தாராசங்கரின் படைப்புகளில் உணர்ச்சிப் பெருக்கினைப் பெருமளவில் காணலாம்.

அக்ரதானி என்பது அவரது கற்பனைத் திறமையை விளக்கும் ஆரோக்கியமற்ற பொருளை அடிப்படையாகக் கொண்ட மற்ருெரு கதையாகும். இறந்து போனவரது ஆத்மா சாந்தி அடைவதற்காக வைக்கப்படும் உணவை உண்பவனும், அவர்களுக்காக அளிக்கப்படும் பரிசுப் பொருள்களை ஏற்றுக் கொள்பவனுமான அந்தணன் அக்ரதானி எனப்படுகிறன். சக்கரவர்த்தி அத்தகைய ஒரு பிராமணன். அவனைக் கண்டால் மற்ற பிராமணர்களுக்கு வெறுப்பு. அவனுடைய மனைவியும் குழந்தைகளும் உணவில்

லாமல் வாடுகின்றனர். ஆனால் அவன் தனது வயிறு ஒன்றைப் பற்றித்தான் கவலைப்படுகிறான். பெருந்தீனி தின்று அவன் பேராசைப் பிடித்து அலைகிறான். என்ன காரணத்தாலோ ஜமீன்தார் வீட்டில் குழந்தைகள் பிறந்தவுடன் இறந்து விடுகின்றன. அன்று குழந்தை பிறக்கும் சமயத்தில் காவல் இருக்கச் சம்மதிக்கிறான். இக்குழந்தையும் இறந்து போகாமல் பிழைத்து விட்டால், கோயிலிலிருந்து நிலமும் உணவும் கிடைக்கும். அதே இரவில் சக்ரவர்த்தியின் மனைவிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. ஆனால் ஜமீன்தார் வீட்டிலோ குழந்தை பிறந்து இறந்து விடுகிறது. சக்கரவர்த்தி உடனே தனது குழந்தையையும் ஜமீன்தார் வீட்டுக் குழந்தையையும் மாற்றி விடுகிறான். இது எவருக்கும் தெரியாது. சக்ரவர்த்தியின் மகன் ஜமீன்தாரின் மகனாக வளர்கிறான். பெரியவனானவுடன் இறந்துவிடுகிறான். அவனுடைய ஆத்மா சாந்தியடைவதற்காக அளிக்கப்படும் உணவை உண்ண, சக்கரவர்த்தி மறுக்கிறான். ஆனால் ஜமீன்தார் அவனை விடவில்லை. அந்த உணவை உண்ணுமாறு அவனைக் கட்டாயப் படுத்துகிறார். அவனது பேராசை காரணமாகவே அவனுக்கு இம்மாதிரியான இழிநிலை ஏற்படுகிறது. 'மகனுக்காகப் புனித சடங்குகள்' என்ற கதையில் வயோதிக ஜமீன்தாரர் ஒருவர், மகன் ஒருவனைப் பெறுவதற்காக நரபலி கொடுக்க ஏற்பாடு செய்கிறார். அவர் மனைவி குறுக்கிட்டு அவ்வுயிரைக் காப்பாற்றுகிறாள்.

பில்லி, சூனியம் ஆகியவற்றில் மனிதனுக்குத் தொன்று தொட்டு நம்பிக்கை இருந்துவருகிறது. இந்த நம்பிக்கையையும் மனிதனுக்கு உள்ள மூட நம்பிக்கையையும் இயற்கையின் சீற்றத்தையும் அடிப்படையாகக்கொண்டு ''சூனியக்காரி'' என்ற கதை புனையப்பட்டுள்ளது. மழையின்றி வறண்டு கிடந்த வயல் ஒன்று. அதில் புல்லும் முளைக்கவில்லை. செடி கொடிகளும் வளரவில்லை. புள்ளினங்கள் அங்கு இசைபாட வருவதில்லை. அங்கு ஒரு கிழவி தனியாக வசிக்கிறாள். அவள் ஒரு சூனியக்காரி என்று கிராம மக்கள் கருதிக்கொண்டிருக்கின்றனர். அவளும் அவ்வாறே நம்புகிறாள். அவளிடம் உள்ள அச்சத்தால் அன்றாடம் மக்கள் அவளுக்கு உணவளிக்கின்றனர். அக் கிராமத்தில் யாராவது இறக்க நேரிட்டால், அதற்கு அச் சூனியக்காரியின் இரத்ததாகம் தான் காரணம் என்று மக்கள் நம்புகின்றனர். ஒருநாள் காதலர் இருவர் கனிமொழி பேசிக்கொண்டே அவள் வீட்டருகே வருகின்றனர். அப்பொழுது அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு விடுகிறது. அதனால் அவனுடைய காதலி அவனைவிட்டு அங்கிருந்து பிரிந்து சென்றுவிடுகிறாள். அதற்காகக் காதலன்

வருந்துகிறான். அவன் மனம் நொந்து வேதனைப்படுவதை 'சூனியக்காரி' பார்க்கிறாள். மனம் இரங்குகிறாள். அவனுக்கு ஆறுதல் அளிக்க அவனை நெருங்குகிறாள். அவளைக் கண்ட அவன் அஞ்சி நடுங்குகிறான். உடனே வீட்டை நோக்கி ஓட்டம் பிடிக்கிறான். அந்தக் கடும் வெய்யிலின் வெப்பம் தாளாது மடிந்து விடுகிறான். இதற்காகக் கிராம மக்கள் வெகுண்டு தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்று சூனியக்காரி அச்சம் கொள்கிறாள். அக்கணமே அவ்விடத்தைவிட்டு ஓடிவிட முயற்சி செய்கிறாள். ஆனால், திடீரென இயற்கை, சீற்றம் கொள்கிறது. புழுதிப் புயல் வீசுகிறது. மெலிந்த அக்கிழவி அக் கடும் புழுதிப் புயலினால் அடித்துச் செல்லப்படுகிறாள். மறுநாள் அவள் உடல் மரத்தின் கிளைகளில் சிக்குண்டு தொங்குவதை மக்கள் பார்க்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் அது அசாதாரணமான சாவு; இயற்கையாக நேர்ந்த சாவு அல்ல. எனவே அவள் சூனியக்காரி என்ற நம்பிக்கை மக்களிடையே வலுப்பெறுகிறது.

தாராசங்கர் சிறுவனாக இருந்தபோது அவரது கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். அவள் ஒரு சூனியக்காரி என்று மக்கள் நம்பினார்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் இக்கதை பிறந்தது. அவரது எழுத்து வன்மையால் இம்மாதிரியான கதைகளைப் படிப்பவர்கள் அந்த நம்பிக்கையை அடையுமாறு செய்து விடுகிறார். அந்த சூனியக்காரியும் மனித இனத்தைச் சேர்ந்தவள்; அவளுக்கும் மனித உணர்ச்சிகள் உண்டு. அவளது முடிவு துன்பமயமானது என்ற கருத்து தாராசங்கரின் எழுத்து வன்மையால் மறைந்து போய்விடுகிறது.

விலங்குகளின் வாழ்க்கையிலும் அவற்றின் குணநலன்களிலும் தாராசங்கருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. குறிப்பாக பாம்புகளின் வாழ்க்கையில் அவருக்கு மிகுந்த அக்கறை இருந்தது. மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள தொடர்பு, கதை புனைவதற்கு ஏற்ற அருமையான கருப்பொருளாகும். பிரபாத் குமார் முகர்ஜி, சரத்சந்திர சட்டர்ஜி ஆகிய இரண்டு பெயர் பெற்ற நாவலாசிரியர்கள் இரண்டு தலைசிறந்த நாவல்களை எழுதியுள்ளனர். துதரிளி (செல்வ யானை) மகேஷ் (பசுவின் பெயர்) என்ற இரண்டு நாவல்களும் விலங்குகள் பற்றிய தலைசிறந்த நாவல்களாகும்.

விலங்கினங்களை மையமாக வைத்து எழுதிய கதைகளில் தாராசங்கர் கையாண்ட முறையே தனியானது. பாம்புகள் அதிகமாக வாழும் இந்திய நாட்டில் மக்களுக்கு அறியாமையும்

மூட நம்பிக்கைகளும் இருந்ததை அவர் நன்கு அறிவார். பாம்பை மையமாக வைத்து இந்தியாவில் கதைகளும் புராணங்களும் ஏராளமாக உள்ளன. பாம்பு என்பது சாவுக்கு நேர். அரவம் தீண்டிய மனிதனை, மந்திரக்காரரிடம் எடுத்துச் செல்வது மிகச் சாதாரணம். மந்திரத்தால் நஞ்சை நீக்குவதாகச் சொல்வோரும் இந்தியாவில் உண்டு. நஞ்சு இல்லாத பாம்பு என்பதைப் புரிந்து கொண்டு அவர்கள் மந்திரங்களைச் சொல்லி, ரட்சை கட்டி மக்களை நம்ப வைக்கின்றனர். ஆனால் பாம்புக் கடியினால் இறப்போர் பலர். பாம்பு கடித்தவுடன் பயத்தினால் இறப்போரும் உண்டு. பாம்பு கடித்தால், இந்தியர்களைப் பொறுத்தவரையில் அது விதியின் செயல். இதை தாராசங்கர் நன்றாக உணர்ந்து கொண்டிருந்தார். இந்திய மக்கள் பாம்பைத் தெய்வமாக்கி வணங்குகிறார்கள். அதற்கு அசாரணமான சக்தி இருப்பதாக நினைக்கின்றனர். பாம்பு கடித்து மனிதன் இறந்தால் அதைக் கடவுளின் செயல் என்று நம்புகின்றனர். இந்திய மக்களுக்கு பாம்புகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பது ஜிம்கார்பட் போன்றவர்களின் கருத்து என்பதும் தாராசங்கருக்குத் தெரியும். சாதாரண, வங்காளி ஒருவரின் இந்த மூடநம்பிக்கையை தாரா சங்கர், அணங்கும் அரவமும் என்ற தனது சிறுகதையிலும், நாக நங்கையின் கதை என்ற நாவலிலும் படம் பிடித்துக் காட்டி யுள்ளார். இந்த நாவலில் வரும் நாகம்' பெண்ணின் இயல்பு கொண்டது. தன்னைப் பற்றிய பாம்புப் பிடாரனின்பால் அது மையல் கொள்கின்றது. எனவே, தான் காதல் கொண்ட ஒருவன் தன் மனைவியுடன் வாழ்வது அதற்குப் பிடிக்கவில்லை. எனவே கூடும் பருவம் வந்தவுடன் பிடாரனின் மனைவியைக் கடிக்க வரு கிறது அந்த நாகம்.

ஹன்சுலி பாங்கர் உபகதா என்ற நாவலில் மக்களுக்குப் பாம்பின்பால் உள்ள பக்தியைத் தாராசங்கர் விளக்கு கிறார். அங்கு வாழும் பாம்பு அவர்கள் வணங்கும் தெய்வத்தின் பிரதிநிதி என்று கிராம மக்கள் நம்புகின்றனர். நல்லவேளை! எருமையைப் பற்றி எழுதியுள்ள ஒரு கதையில் அதற்கு மனித குணங்களை ஏற்றிச் சொல்லவில்லை, குடியானவன் ஒருவனிடம் எருமை ஒன்று இருந்தது. அதை அவன் பாசமாக வளர்த்தான். ஆனால் அதற்குத் தீனி போட்டுக் காப்பாற்ற அவனால் இயல வில்லை. எனவே அதனை விற்கும்படியான கட்டாயம் அவனுக்கு ஏற்படுகிறது. கால்நடைச் சந்தையில் அதை அவன் விற்கின்றான். புதிய இடத்தில் அது மிரள்கிறது. தளைகளை அறுத்துக் கொண்டு தான் பழகிய இடத்திற்கு ஓட முனைகிறது. அதற்கு வெறி பிடித்துவிட்டது என்று நினைத்த காவலர் அதனைக் கொன்று

விடுகின்றனர். அதன் பரிதாபமான முடிவு நம் உள்ளத்தை உருகச் செய்கிறது. காமதேனு என்பது மற்ருெரு கதை. முதற் கன்று கூட போடாத பசு பால் கொடுத்தால், அது தெய்வீகப் பசு என்பது கிராம மக்களின் நம்பிக்கை. அத்தகைய பசுவுக்கு சுரபி என்று பெயர். அத்தகைய பசுவை வளர்ப்பவன் நல்ல ராசியுடையவன் என்பதும் அவர்களிடம் இருந்த நம்பிக்கை யாகும். நத்து படிப்பறிவில்லாதவன். கால்நடை மருத்துவன். சுரபி மங்களம் என்பது தெய்வீசப் பசுவைப் போற்றிப் பாடப் படும் பாட்டு. அந்த இசையில் ஈடுபட்டுக்கொண்டு அவன் நோய்வாய்ப்படும் பசுக்களுக்குச் சிகிச்சை அளிக்கிருன். பணக் கார மாது ஒருத்தி அவனுடைய சுரபியை விலேக்குக் கேட்கிருள். சுரபியிடம் தன் உயிரையே வைத்திருக்கும் நத்து அதை விற்க மறுக்கிருன். அதை விற்பது பாவம் என்று அவன் கருதுகிருன். ஆனல் பல்மோனி என்ற பெண்ணிடம் மையல் கொள்கின்ருன். அவள் திருமணமானவள். அவள் கணவன் அவளே ஹேபாஜட்டி ஷேக்கிற்கு நூறு ருபாய்க்கும் ஐந்து மணங்கு அரிசிக்கும் விற்க முடிவு செய்கிருன்.

சுரபி லட்சுமி; திருமகள். செல்வத்தை அளிப்பவள்; ஆனல் பல்மேனியோ ஊர்வசி; அழகின் உரு. திருமகள் வேண்டுமா? ஊர்வசி வேண்டுமா? இரண்டிற்கும் இடையே நத்து ஊசலாடுகிருன். கடைசியில் காதல் வெற்றி முரசு கொட்டுகிறது. சுரபியை விற்று பல்மோனியாவை வாங்குகிருன். ஆனல் அதே சமயம் அவனுக்குப் பல்மோனியாவி டம் வெறுப்பு ஏற்படுகிறது. சுரபியை வாங்கிய பணக்கார மாது வையும் வெறுக்கிருன். தனக்கில்லாத சுரபி அவளுக்கும் இருக் கக்கூடாது என்ற விபரீதமான எண்ணம் அவனிடம் மேலோங்கு கிறது. அறியாமை என்ற அடர்த்தியான இருள் அவனது மனதைக் கவிழ்ந்து கொள்கிறது. சுரபியை விஷம் வைத்துக் கொல்கிருன். அவன் செய்த பாவச் செயல் அவன் மனதை அரிக்கிறது. பல்மோனியை ஷேக்கிற்கு விற்கிருன். மாட்டுத் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபடுகிருன். பசுவின் காவலன் பசுவின் தோல் பதனிடும் தொழில் செய்வது அவன் பாபச் சூழலில் அகப்பட்டுக் கொண்டதன் அறிகுறியாகும். அக்கிரா மத்தில் ஒரு விநோதமான பழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. ஒருவன் வளர்க்கும் பசு இறந்துவிட்டால், அவன் பசு மாதிரி கத்திக்கொண்டே பிச்சை எடுக்கவேண்டும். அந்தப் பழக்கப்படி பசுவை இழந்த ஒருவன் பசுமாதிரி கத்தியவாறே நத்துவின் வீட்டு வாசலில் நின்று பிச்சை கேட்கிருன். ஆத்திரம் அடைந்த நத்து அவனேக் கொன்றுவிடுகிருன். அவன் கைது

செய்யப்படுகிறுன். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இப்போது அவன் மனதில் அமைதி பிறக்கிறது. மரணத்தை எதிர்நோக்கிச் சிறையில் இருக்கும்போது, கரித்துண்டு ஒன்றை எடுத்து, பல்மோனியின் கண்களைச் சுவரில் வரைகிறுன். ஏனெனில் அக் கண்கள்தானே அவனுடைய அழிவுக்குக் காரணம்!

இக்கதையில், சுரபியைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பது சிறிதுதான். ஆனல் நத்துவின் உள்ளத்திலே நடக்கும் போராட்டம் தெளிவாக, விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எளிய மக்கள் பற்றியும் அவர்கள் சிந்தனை ஓட்டம் பற்றியும் எந்த அளவுக்குத் தாராசங்கர் தெரிந்து வைத்திருந்தார் என்பதை இக் கதையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அழகான நடையைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கோடு அவர் எழுதவில்லை. உண்மையைச் சொல்லப்போனல், அவர் சொற்களை ஆழ்ந்த கவனத்துடன் பயன்படுத்தவில்லை யென்றுதான் கூறவேண்டும். ஆனல் அவர் எழுதிய முறையே தனி நடையாகிவிட்டது. உள்ளதை உள்ளவாறே எழுதுகிறுர். எதையும் சுற்றி வளைத்துச் சொல்வதில்லை. வாழ்க்கையில் நடக்கும் கொடூரங்களை, எள்ளளவும் மாருமல், அவற்றை அழகுபடுத்த முயற்சி செய்யாமல் நேரடியாக எழுதுகிறுர். அவரது எழுத்தில் இலக்கிய ரசனை இல்லாமல் இருக்கலாம். ஆனல் வாழ்க்கையில் நடக்கும் உண்மைகளைத்தானே அவர் எழுதுகிறுர். வாழ்க்கையில் நடப்பதெல்லாம் ஒழுங்காக அமைந்து, பண்பட்டமுறையில்தான் நிகழ்கின்றனவா? அவர் நடையில் அழகில்லை என்றுல் உலக வாழ்க்கையில் அழகில்லை என்றுதான் பொருள். நடை அழகையும், மொழி அழகையும் மட்டும அவர் கவனித்திருந்தால் தாம் கண்டவற்றையெல்லாம் உள்ளது உள்ளவாறே எழுதியிருக்க மாட்டார். அதை மனதில் வைத்துக்கொண்டு, அழகுபட எழுதியிருப்பார். அப்படி எழுதியிருந்தால். தம் உள்ளத்தை நெகிழ வைத்த நிகழ்ச்சிகளை அப்படியே படம்பிடித்துக் காட்டவேண்டும் என்ற கட்டாய உணர்விஞல் உந்தப்பட்டு எழுதியிருக்க மாட்டாரே!

அவருடைய கதைகளில் பெரும்பாலானவை இந்திய மண்ணை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. இடத்தையும் சூழ்நிலையையும் மாற்றி எழுதிஞல், இக்கதைகள் இந்தியாவில் எப்பாகத்திற்கும் பொருந்தும். சாதாரண மனிதன் ஒருவன் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிகண்டு, தனது வாழ்வை நல்ல முறையில் அமைத்துக் கொண்டால், அவன் மற்றவர்களுக்கு

எடுத்துக்காட்டாக—முன்மாதிரியாக அமைவான். குளிர்காலத்து அறுவடையின்போது, வயலில் விளைந்து, காற்றில் தவழ்ந்தாடும் தானியக்கதிர் திருமகளாகக் கருதப்படுகிறது. பவுஸ் லட்சுமி என்ற கதையில், முகுந்த பால் இத்தகைய எடுத்துக்காட்டாக விளங்குகிறான். வயது முதிர்ந்த அந்த விவசாயி, அப்பகுதியிலேயே மிகத் திறமையான விவசாயி எனப் பெயர் பெற்றவன். அது 1944ஆம் ஆண்டு. அதற்கு முந்திய ஆண்டில்தான் பெரும் புயல் அடித்துக் கடும் சேதம் ஏற்பட்டது. வங்காளத்தில் கொடும் பஞ்சம் தலைவிரித்தாடிய ஆண்டுக்கு அடுத்த ஆண்டில நடந்த கதை. அந்த ஆண்டில் நல்ல விளைச்சல். அறுவடைக்கு ஆளில்லை. கூலி ஆட்கள் இரண்டாவது உலகப்போர் தொடர்பான பணிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். முதிர்ந்த, பொன்மயமான கதிர் முகுந்துக்கு திருமகளாகத் தோற்றமளித்தது. வீரன்தான் திருமகளை அடையமுடியும். முகுந்தன் வயோதிகன், உடல்வலுக் குறைந்தவன். தன் உடலில் வலுக் குறைந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறான். தன் உடலுக்கு முறுக்கேற்றச் சாராயம் குடித்துவிட்டு ஆவேசம் வந்தவன்போல் அறுவடையில் இறங்குகிறான். நெல் நிறைந்த வண்டியை இழுக்க மாடு சக்தியற்று நிற்கிறது. முகுந்தன் தன் தோளைச் சக்கரத்தின் அடியில் கொடுத்து வண்டியை நகர்த்தப் பார்க்கிறான், 'அந்தோ! அம்முயற்சியில், அவன்மீது பெரும்பாரம் விழுந்து அழுத்துகிறது. மீளமுடியாது அகப்பட்டுக் கொள்கிறான். நெற்கதிரில் ஒன்றைப் பற்றிக்கொண்டு, கடைசி முறையாகப் பொன்மயமான அந்த வயலைப் பார்க்கிறான். தான் வெற்றிக்கொள்ள முடியாத அத் திருமகளைப் பார்த்துக் கொண்டே அவன் இறக்கிறான்.

அரண்மனை என்ற கதையில் வரும் ஜனுப் அலி, கிராமத்தில் தலைசிறந்த கொத்தன். இவனது வாழ்க்கையும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. தன் வாழ்நாள் முழுவதும் உயரமான கட்டிடங்களையும் மசூதிகளையும் கட்டிப் புகழ் பெற்றவன். வயதான காலத்தில் அவன் வறுமையில் உழல்கிறான். ஆலமரத்தின் அடியில் அடைக்கலம் புகுந்து மரணத்தின் தழுவலை எதிர்நோக்கிக் காத்திருக்கிறான். எல்லாம் வல்ல இறைவனின் அருகில் இருப்பதை அவன் உணர்கிறான். அனைவருக்கும் நிழல் தரும் அந்த ஆலமரம் ஆண்டவனால் கட்டப்பட்ட அரண்மனையாகும். விண்ணில் தவழ்ந்து ஓடும் வெண்மையான மேகங்கள் நாம் கட்டிய எல்லா மசூதிகளையும் விட அழகானவை என்பதை அவன் உணர்ந்தான். இறைவன் அழைப்பு வரும்போது அமைதியாக அவருடைய திருவடிகளை அடைந்தான். ஊழ்வலியில் இந்தியர்களுக்குள்ள நம்பிக்கை இக்கதையில் அழகாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

தன் வாழ்நாள்முழுவதும் மற்றவர்களுக்கு உறைவிடங்கள் கட்டிக் கொடுத்த ஒருவன், தனது இறுதி நாட்களில் உறைவிடமின்றித் தவிக்கிறான். அவனால் இதுகாறும் பயன் அடைந்த சமுதாயம் அவனைப் புறக்கணிக்கிறது. அவன் ஒரு மரத்தடியில் புகலிடம் பெறுகிறான். மரம் என்பது கடவுளின் படைப்பாகும். எனவே துவன் கடவுளிடம் புகலிடம் பெறுகிறான்.

துவர் கதைகளில் வரும் கிராம மக்கள், சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வாழ்ந்தவர்களே தவிர, சமுதாயத்தை எதிர்த்துப்போராடியவர்களோ, சமுதாயநடைமுறைக்கு மறுப்புத் தெரிவித்தவர்களோ அல்ல. ஆனால் அவர்களிடம் அருமையான மனிதப் பண்புகள் இருந்தன. எனவே, அவர்கள் சிறந்தவர்கள். இவர்களைத் தாராசங்கர் நன்கு அறிந்திருந்தார். இவர்களைப் பற்றி அவர் மீண்டும் மீண்டும் எழுதுகிறார். அவர்களது நற்பண்புகளை நம் நாட்டத்திற்குக் கொண்டு வருகிறார். டாக் ஹர்காரா (தபால் எடுத்துச் செல்பவர்) என்ற நாவலில் வரும் தினு, அஞ்சல் துறையில் நேர்மையுடன் பணி புரியும் பணியாளன். தபால் பைகளை ரயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்வது இவனது கடமையாகும். அவனது மாதச் சம்பளம் பதினைந்து ரூபாய். அவனது மகன் நிடாய், அஞ்சல் பைகளில் உள்ள பணத்தைக் களவாட முயற்சி செய்கிறான். தந்தை, மகனை போலீசிடம் ஒப்படைக்கிறான். அவனது நேர்மையைப் பாராட்டி முன்னூறு ரூபாய் பரிசளிக்கப்படுகிறது. மகன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிடுகிறான். மகனைக் காட்டிக் கொடுத்ததற்காக தினு தனது மனைவியாலும் உறவினராலும் புறக்கணிக்கப்படுகிறான். தன் மகன் தவறான வழிகளினின்றும் திருந்தி நேர்வழியில் சென்று நல்ல காரியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்துவிட்டான் என்ற செய்தி பல காலம் கழித்து அவன் காதுகளுக்கு எட்டுகிறது. நிடாய்க்கு அளிக்கப்பட்ட தங்கப் பதக்கம் ஒன்று தினுவுக்குக் கொடுக்கப்படுகிறது. தினு இப்பொழுது தனது வேலையை விட்டு விலகுகிறான். தன் வாழ்நாள் முழுவதையும் மற்றவர்களுக்குச் செய்தி கொண்டு செல்வதிலேயே கழித்துவிட்ட அவனுக்கு இப்பொழுது ஒருசெய்தி கிடைத்துவிட்டது. அவனுடைய முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் தன் உள்ளுணர்வால் உணர்கிறான். ஏழை ஒருவன் நேர்மையாக வாழ்வதற்குப் படும்பாடு; கடமைக்கும் பாசத்திற்கும் ஏற்படும் போராட்டம்; கடமை உணர்வு மேலோங்கி பாசத்தையும் துறந்து மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பது இவை எல்லாம் அவனைத் தலைசிறந்த பண்பாளராகச் செய்கின்றன. இதில்தான் சிறுகதை எழுத்தாளர் என்ற முறை

யில் தாராசங்கரின் பெருமை உள்ளது. சாதாரணமான ஒரு மனிதனை அவர் தேர்ந்தெடுக்கிறார். அவரது உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் நற்பண்புகளை வெளிக்கொணர்ந்து அவனை முழு மனிதனாகச் செய்கிறார். ஐனுப் அலி, முகுந்தபால், தினு இவர்கள் எல்லோரும் இந்த வரிசையின் கீழ் வருபவர்களே.

வங்காள இலக்கியம் செழிப்பு மிகுந்தது. வளம் நிறைந்த சிறுகதைகள் செறிந்தது. சிறுகதைத் துறையில் பல பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. பிரமேந்திர மித்ராவின் கதைகளில் வருவதுபோல தாராசங்கரின் கதைகளில் பாதரசம் போன்று வழுக்கிச் செல்லும் ஒரு நெகிழ்ச்சித் தன்மை இல்லை. மாணிக் பானர்ஜியின் கதைகளில் வருவதுபோல ஆழ்ந்த ஓட்டமோ, சிக்கல் நிறைந்த கதைப்போக்கோ இல்லை. அல்லது அச்சின்த்ய குமார் சென் குப்தாவின் கதைகளைப் போன்று உளியால் செதுக்கப்பட்ட நுண்ணிய கலையழகையோ காண இயலாது. எனினும் அவர் தலைசிறந்த எழுத்தாளராகத் திகழ்கிறார். எவ்வாறு என்ற வினா இயல்பாக எழுகின்றது. வாழ்க்கையின் பல கோணங்களை அவர் தம் கதைகளில் கொண்டு வருகையில், அந்த நிகழ்ச்சியில் அவர் ஒன்றி விடுகிறார். அவற்றிலே அவர் மூழ்கிப் போய்விடுகிறார். மனிதனுடைய நெஞ்சத்தின் ஆழத்தில் தோன்றும் சிக்கல்கள், வக்கிர வழியில் செல்லும் மனப்பான்மை, சமுதாயத்தின் அலங்கோலமான போக்கில் வளர்ச்சி பெறும் மனம் படும் பாடு ஆகியவற்றில் அவருக்கு ஈடுபாடில்லை. பாமர மனிதனிடம் தான் அவருடைய நிலையான அக்கறை இருந்தது. அவர் நடையில் அழகு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் கதையில் உயிரோட்டம் உள்ளது; உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வாசகரின் உள்ளத்தைத் தொடும் வகையில் அவருடைய கதைகள் இயல்பாக அமைந்துள்ளன. பாமர மனிதனை மையமாக வைத்தே அவர் கதைகள் எழுதப்பட்டுள்ளன.

அத்தியாயம்-6

நாட்டில் நிலவிவந்த அமைதியின்மை, தாராசங்கரின் நாவல்களில் எதிரொலிப்பதை சைதாலி குர்னி, பாஷன் பூரி, நீல கண்டன் (பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அருந்தியதால் நீல

நிறம் பெற்ற கண்டத்தையுடைய சிவனின் காரணப்பெயர்) மன்வந்தர் (பஞ்சம்) முதலிய நாவல்களில் சேர்க்கலாம். ஏனைய நாவல்களிலும் இத்தகைய அமைதியின்மையும் சமராடும் நிலையும் கதையின் கருவாக அமைந்துள்ளன; எனினும் மேற்குறிப்பிட்ட நான்கு நாவல்களில் இத்தகைய போரும் குழப்பமும் சிறப்பாகக் குடிகொண்டுள்ளன.

செல்வந்தர்கள் வாழும் சமுதாயத்தில் வறியவர்களுக்கு இடமேது? அத்தகைய சமுதாயத்தில் பாமர மனிதன் படும் பாடு சைதாலி குர்ணி என்ற நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது. கிராமத்தில் கடும் வரட்சி: பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. பஞ்சத்தில் கிராமமக்கள் படும் அவதியை முதல் அத்தியாயத்திலேயே நம் கண்முன் சித்திரித்துக் காட்டுகிறார் ஆசிரியர். சைத்ரமாதம் (மார்ச் 15ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் 14ஆம் தேதிவரை) வங்காள ஆண்டின் இறுதி மாதமாகும், பலத்த காற்று சுழன்று சுழன்று அடித்து புழுத்த இலைகளையும் சருகுகளையும் அள்ளிச் சென்று வங்காளப் புது ஆண்டிற்குக் கட்டியங் கூறும் மாதம் இது. பஞ்சத்தின் கொடுமை தாளாது மக்கள் மடிகின்றனர். உயிரற்ற உடல்களை ஓநாய்கள் இழுத்துச் செல்கின்றன. கழுகுகள் கொத்தித் தின்கின்றன. துன்பத்தால் துடிக்கும் இவர்களுக்கு உதவியாக ஒருவரும் முன வரவில்லை. இருப்பினும் மக்கள் ''கடவுளே கருணை காட்டு'' என்று கண்ணீர்விட்டுக் கதறுகின்றனர். ஊரே சுடுகாடாக ஆகிறது. கோஸ்தா ஒரு ஏழை விவசாயி. ஜமீன்தாரரிடமும் பட்டாணிக்காரனிடமும் கடன்பட்டுத் தவிக்கிறான்; தத்தளிக்கிறான்; தன்னுடைய மகன் இறந்ததும் வேதனை தாங்காமல் கிராமத்தைவிட்டுத் தன் மனைவி தாமினியுடன் வெளியேறுகிறான். நகரந்தை அடைந்து சிறிய தொழிற்சாலை ஒன்றில் சேர்கிறான். இங்கும் மனிதர்கள் கொடூரமாக நடந்து கொள்கின்றனர். ஏழைகளிடம் கருணை காட்டுவதில்லை. நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்தால் 50 அல்லது 60 காசுகள் கூலி கிடைக்கும். அவன் வசிக்கும் குடிசைப் பகுதி சமுதாயத்தின் குப்பைத் தொட்டி; பணக்காரர்கள் குப்பை கொட்டுமிடம். ஏழைப் பெண்களின் கற்புக்குப் பணக்காரர்களிடையே மதிப்பு கிடையாது. சோடோ மிஸ்திரிக்கு தாமினியின் மீது ஒருகண். இதற்கிடையில் அரசியல் வாதிகளின் பிடியில் தொழிலாளர் சிக்கித் தவிக்கின்றனர். போதிய ஊதியமின்றி மிகைநேரப் பணி செய்ய வேண்டாம் என்று தொழிலாளர்களைத் தூண்டுகின்றனர். தொழிற்சாலை மூடப்படுகிறது. தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். வேதனை தாளாத தொழிலாளர்கள் தொழிற்சாலை முதலாளியிடம்

சென்று தொழிற்சாலையைத் திறக்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றனர். வேலை நிறுத்த ஆதரவாளர்களுக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. சோட்டோ மிஸ்திரிக்கும் கோஸ்தாவுக்கும் ஏற்படும் கைகலப்பில் சோட்டோ கோஸ்தாவைக் கொன்றுவிடுகிறான். "ஏப்ரல் சுழற்காற்று அற்பமானது. சாதாரணமானது. அதைவிடப் பெரும் சூறைக்காற்று ஒன்று அடிக்கப் போகிறது" என்று அரசியல் கட்சி ஊழியன் ஒருவன் சொல்கிறான். அத்துடன் கதை முடிகிறது.

இக்குறு நாவலை, தாராசங்கர் சிறையில் எழுதத் தொடங்கினார். சுபாஷ் சந்திர போசுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த நாவல் ஏழைகள் படும் அவதியை நம் கண்முன்னே அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. சில இடங்களில் நம்மை அறியாமல் நம் கண்கள் குளமாகின்றன. எனினும் இது புதிய முறையிலே ஆக்கப்பட்டுள்ளது. தாராசங்கருக்கே உரிய சில குறைபாடுகள் இந்நாவலிலும் காணப்படுகின்றன. எனினும் தாராசங்கரின் காலத்திற்கு முன்பு தொடங்கி இன்று வரையுள்ள நிலையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்த நாவல் இன்றைய நிலைமைக்கும் பொருந்தும். ஏழை விவசாயிகள் இன்றைக்கும் பணக்கார நிலக்கிழார்களிடமும் ஈவு இரக்கமற்ற லேவாதேவிக்காரர்களிடமும் அகப்பட்டுக் கொண்டு தவிக்கின்றனர். வேதனை தாளாமல் பிறந்த மண்ணை உதறிவிட்டுத் தொழிற்சாலை நிறைந்துள்ள நகரங்களுக்கு வேலை தேடிச் செல்கின்றனர். இன்றும் இந்த அநீதி நடக்கிறது. ஏழை விவசாயிக்கோ, தேர்ச்சி பெறாத தொழிலாளருக்கோ சட்டம் பாதுகாப்பு அளிக்கவில்லை. செய்திக் கதிர் என்ற முறையில் பார்த்தால் இந்த நாவல் மதிப்பு மிக்கது. பின்னர் எழுதிய நாவல்களை விட இது நன்கு அமைந்துள்ளது.

பாஷன்பூரி ஒரு நிறைவில்லாத நாவல். கதையின் அமைப்பில் குறைபாடுகளும், கதைப் போக்கில் முரண்பாடுகளும் கொண்ட ஒரு நாவல். அவருக்கிருந்த சிறை அனுபவத்தைக் கருத்தில் கொண்டு பார்த்தால், சிறையின் கொடுமைகளைக் கூறுவதைவிட, கொலைக் குற்றத்திற்காகவும், தீ வைத்த குற்றத்திற்காகவும் தூக்குமேடையை எதிர்நோக்கியிருந்த காலிகார்மாகர் என்ற கைதியின் வாழ்க்கையைப் பற்றித்தான் அதிகம் எழுதியிருக்கிறார். எழுத்துலகில் அறிமுகமான காலத்திலேயே அவருக்கு உணர்ச்சி ததும்ப எழுதுவதிலும் வாழ்க்கையின் கசப்பான, கலக்கமான நிகழ்ச்சிகள் பற்றி விவரிப்பதிலும் இவருக்குத் தனி ஆர்வம் இருந்தது. சிறை வாழ்க்கையைப்பற்றி அவர் எழுதுவதாவது ;- "குற்றவாளியின் கை கால்களை இரும்

புச் சங்கிலிகளினுல் பிணைத்து, அவனைச் சிறைக்குள் அடைப்பதன் மூலம் அவனுள்ளே தேங்கிக் கிடக்கும் குற்ற உணர்வை, குற்ற மனப்பான்மையை, குற்றங்கள் புரியவேண்டும் என்ற ஆர்வத்தை அடக்க சட்டம் வகை செய்கிறது. ஆனுல், மனிதனுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் குற்றவாளி இறந்து விடுவதில்லை. அரவம் கேட்டு அஞ்சும் அரவம்போல், மனிதனின் மனத்தில் ஆழமாகப் புதைந்துகொண்டு சமயத்தை எதிர்பார்த்து இருக்கிறது. அடிபட்ட நாகம் புற்றினுள் மறைந்துநின்று ஆத்திரத்துடன் சீறுவதில்லையா? மனிதன் அறிவில் முன்னேறியிருக்கலாம். ஆனுல், கொடிய நஞ்சினை, சோல அமுதமாக மாற்ற அவன் தெரிந்து சொள்ளவில்லை. இதனுல்தான் சிறையில் அடைக்கப் படும் கைதி, தண்டனை முடிந்து வெளிவரும்போது, ஈவு இரக்க மற்ற சல்நெஞ்சனுக வெளியே வருகிறுன். பாம்பு, அமுதம், நஞ்சு ஆகிய அவருடைய வார்த்தை வண்ணங்களை இங்கே காண லாம். அரசியல் கைதிகள் வாழ்க்கையை அறிமுகம் செய்த பின்னர், அவர் நேரடியாக காலிகார்மாகர் வாழக்கை பற்றி விவரிக்கத் தொடங்குகிறுர். ஆத்திரத்தில் அறிவிழந்து கொலைக் குற்றம் செய்த காலிகார்மாசரை தாராசங்கர் மாவட்ட நீதிபதி யின் நீதிமன்றத்தில், தான் பார்த்திருந்தபோதிலும் அவனுடைய வாழ்க்கையை மையமாக வைத்து அந்த நாவலை வரைந்தார்.

நீலகண்டன் என்ற நாவல் பாஷன் பூரியைக் காட்டிலும் நிறைவில்லாதது. கிளைக்கதையின் தன்மை வாய்ந்தது. ஸ்ரீமந்தா ஏழை கிராமவாசி. அவனது மனைவி கிரி. இருவரின் அன்பு வாழ்க்கையில் எமன்போல ஹரிலால் குறுக்கிடுகிறுன். இவன் ஸ்ரீமந்தாவின் உறவினன். குழந்தைகளற்ற ஸ்ரீமந்தா தம்பதி யினர் ஹரிலாலின் பெண் கௌரியிடம் பாசம் மேலிட்டு அவளிடம் உயிரையே வைத்திருக்கின்றனர். அவர்கள் பாசத்தை ஹரிலால் தனக்கு சாதகமாக்கிக் கொள்கின்றுன். கௌரிக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்ய வேண்டுமென்று சொல்லி, ஸ்ரீமந்தாவின் ஒரே நிலத்தை விற்கும்படி அவனைக் கட்டாயப் படுத்துகிறுன். சௌரியை ஒரு அயோக்கியனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததைக் கண்ணுற்ற ஸ்ரீமந்தா வெகுண்டு, ஹரிலாலைத் தாக்குகின்றுள. ஸ்ரீமந்தாவைக் கைது செய்ய ஹரிலால் ஏற்பாடு செய்கிறுன். கிரி தனியாக விடப்படுகிறுள். அவள் அப்பொழுது கருவுற்றிருக்கிறுள். கிராமத்தினர் அவளுடைய கற்பை ஐயுறுகின்றனர். கிரி, கிராமத்திற்குத் தீ வைத்துவிட்டு வெளியேறுகிறுள். நகரத்தை அடைகிறுள். அங்கு மருத்துவமனையில் அவளுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அக் குழந்தைக்கு நீலகண்டன் என்று பெயர் வைத்துவிட்டுத் தன்

உயிரை மாய்த்துக் கொள்கிறாள். நீலகண்டன் பெரியவனாகிறான். அவன் தன் தந்தை இருந்த கிராமத்திற்கு அடிக்கடி வருகிறான். அங்கிருந்து பழங்களைச் சேகரித்து நகரத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறான். ஆனால் அந்த கிராமத்திற்கும் தனக்குமுள்ள தொடர்பு அவனுக்குத் தெரியாது. ஸ்ரீமந்தா சிறைத் தண்டனை முடிந்து கிராமத்திற்குத் திரும்பி வருகிறான். தனது மகனைச் சந்திக்கிறான். அவன் தன் மகன் என்பதை உணர்ந்து கொள்ளாமல், அவனுடன் கிராமத்தை விட்டு வெளியேறுகிறான். இந்த நாவலின் கதையமைப்பு வலுவற்றது. ஆனால் கற்பனை வளம் நிறைந்தது,. கதையில் வரும் பாத்திரங்கள் எவையும் நம் உள்ளத்தைத் தொடவில்லை. அனாதைக் குழந்தையான நீலகண்டன் எப்படி வளர்ந்து பெரியவனாகிறான் என்பதை ஆசிரியர் நமக்கு விளக்கவில்லை. கதையின் போக்கே தவறு என்று தான் தோன்றுகிறது. ஏனெனில் கதையை உருவாக்கும் சம்பவங்களில் நீலகண்டன் மிகச் சிறிய பங்குதான் வகிக்கின்றான்.

1944ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மன்வந்தர் என்ற நாவலில் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல விவரிக்கப்பட்டுள்ளன. ஜப்பானிய விமானத் தாக்குதலினால் கல்கத்தாவில் மக்களிடையே நிலவிய பெரும் பீதி, பஞ்சத்தினால் பரிதவித்த பல்லாயிரக் கணக்கான மக்களின் துயரம், உணவுப் பொருள்களும் இன்றியமையாத ஏனைய பொருள்களும் கிடைக்காமையினால் ஏழை மக்களும் கீழ்நிலையில் உள்ள நடுத்தரக் குடும்பத்தினரும் அனுபவித்த தாங்கொணாத துயரம், காந்தியடிகள் மேற்கொண்ட இருபத்தோரு நாட்கள் உண்ணா நோன்பினால் மக்களுக்கு ஏற்பட்ட கவலை ஆகியவை எல்லாம் இந்நாவலில் நெஞ்சை அள்ளும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த நாவலின் கதாநாயகன் கனாய; முன்னாள் செல்வந்தர் சுகமாய் சக்கரவர்த்தியின் வாரிசு. சக்கரவர்த்தியின் வீடு பாழடைந்து இடிந்துவீழும் நிலையில் உள்ளது. கனாய், நீலா எனும் பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால் அவளைத் திருமணம் செய்து கொள்ள அஞ்சுகிறான். தன்னுடைய இரத்தம் தூய்மை கெட்டது; திருமணம் செய்துகொண்டால் தனது குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோர் போன்று தன்னையும் நோய பற்றிவிடும் என்ற நம்பிக்கை அவன் மனதில் ஆழமாக வேரூன்றிவிட்டது. தலைமுறை தலைமுறையாக நிலப்பிரபுக்களாக இருந்த சக்கரவர்த்திக் குடும்பத்தினர், நடைமுறை உண்மைகளை உணர்நது கொள்ளத் தவறிவிடுகின்றனர் மாறிவரும் காலத்தின் போக்கை அறிந்து, அதற்கேற்ப நடந்துகொள்ள மறுக்கின்றனர். அக்குடும்

பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் வீட்டிலேயே ஆடையின்றி அலைகிறான். அவனைப் புனிதமானவர்; பூஜயர் என்று அவன் பெற்றோர் நினைக்கின்றனர். அக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் திருடுகின்றனர். ஆண்கள் தீய நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். கனுயின் தாய் ஒருத்திதான் இத்தகைய செயல்களுக்கு விலக்காக விளங்குகிறாள்.

மேற்கு வங்காளத்தில் தென்மேற்கு மாவட்டமாகிய மிதுனபூரில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது; வெள்ளம், மக்களை ஆற்றொணுத் துயரில் ஆழ்த்துகிறது. இயற்கையின் சீற்றத்தினால் இருபக்கமும் இடிபடுகின்ற மக்களுக்குத் துயர் தணிக்கத் தொண்டர் படை திரள்கிறது. வீட்டில் மன நிம்மதியின்றிப் புழுங்கிய கனுய் நாட்டிற்குச் சேவை செய்வதில் மன அமைதி காண விழைகிறான். அவனுக்கு உறுதுணையாக நீலாவும் அவள் சகோதரனாகிய நேபியும் வருகிறார்கள். 1942ஆம் ஆண்டுக்குப் பிறகு, இரண்டாண்டுகளாக போலீஸ் அதிகாரிகளின் அட்டூழியமும் அடக்குமுறையும் தலைவிரித்தாடின. புயல் வந்தது. பயிரும் அழிந்தது. நீலாவுடன் தொண்டாற்றும்போது அவன் சிறிது ஆறுதலைப் பெறுகிறான்.

உலகப் போரினால் பல குடும்பங்கள் பல விதங்களில் பாதிக்கப்பட்டன. கனுயின் அண்டைவீட்டுப் பெண் கீதா. உலகப் போரைப் பயன்படுத்திக் கொண்டு திடீர் பணக்காரர்களானவர் பலர். பணம் குவிந்தால் பழக்கங்களும் பலவாகலாம் அல்லவா? பெண்களுக்கு அதுவும் குறிப்பாக கன்னிகளுக்கு ஏகப்பட்ட கிராக்கி! கீதாவின் தகப்பன் காசாசை பிடித்தவன். தன் மகளையே விற்கத் துணிகிறான். பணக்காரன் ஒருவனுக்கு விலை போகிறாள் கீதா. அவனுடைய காமவெறிக்குப் பலியான பிறகு, அங்கிருந்து தப்பி சாலை நோக்கி ஓடி வருகிறாள். கனுய் தெருவில் அவளைச் சந்திக்கிறான். பிஜோய்தா என்னும் கம்யூனிஸ்ட் பத்திரிகையாளரிடம் கீதாவைக் கொண்டு சேர்க்கிறான். போரினால் புதியதொரு தலைமுறையே உருவாகிறது. பெற்றோருக்கும் சிறுவர்களுக்கும் இடையே பெரியதொரு சுவர் எழுகின்றது. பாடுபட்டு ஈட்டிய பணத்தைத் தன் தகப்பன் குடித்து அழிப்பதைக் கண்ட கனுய், வீட்டைவிட்டு வெளியேறுகிறான். பெண் சம்பாத்தியத்தில் வாழக் கூடாது என்று நினைப்பவர் நீலாவின் தந்தை. ஆனால் நீலாவின் வருவாயில்தான் குடும்பம் நடத்த வேண்டியிருக்கிறது. அவரது கொள்கை சிதறுகிறது. அவரது மனம் படாதபாடு படுகிறது. நீலாவும் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். நேப்பி கம்யூனிஸ்ட் கட்சியில் சேருகிறான்.

கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமானதல்ல என்று அறிவிக்கப் பட்ட காலம் அது. குடும்பங்கள் சிதறுகின்றன. கல்கத்தாவின் மீது குண்டு வீசப்படுகிறது. சக்கரவர்த்திக் குடும்பத்தினைச் சேர்ந்த பழைய வீடு, குண்டுவீச்சில் அழிகிறது. அக்குடும்பத்தினர் பலர் இறக்கின்றனர். கீதாவின் தகப்பனார் வீட்டைவிட்டு வெளி யேறுகிறார். அவள் தாயாருக்குத் தெருவில் பிச்சை எடுக்கும் நிலை ஏற்படுகிறது. கனாய் துணிந்து ரத்தப் பரிசோதனைக்குச் செல் கிறான். அவன் ரத்தம் தூய்மையானது என்பதை அறிந்து மகிழ் கிறான். நீலாவை மணந்து கொள்கிறான். பிஜோய்தா தனது பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுகிறான். உலகப் போருக்கு ஆதரவு தெரிவித்து எழுதப்பட்ட கட்டுரை அது. ஏனெனில் இப் போர் ஏனைய போர்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடும்; காந்தியின் லட்சியங்கள் இந்தியாவின் பொற்காலத்திற்கு வழி வகுக்கும்; சமத்துவத்தின் அடிப்படையில் வருங்கால சமுதாயம் அமைக்கப்படும் என்பது அவன் கருத்தாகும்.

காலத்தை உணர்ந்து தாராசங்கர் இந்த நாவலை எழுதினார் என்றுதான் சொல்லவேண்டும். பத்திரிகை நிர்வாகத்திற்காகத் தாராசங்கர் இலக்கியத்தைப் புறக்கணித்துவிட்டார் என்பது அவர்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. ஆனால் இன்று இந்த நாவலைப் படிப்பவர்களுக்கு இந்த நாவல் மிகவும் முக்கிய மாகும். தலைசிறந்த எழுத்தாளர்கள், போர்க்கால நிகழ்ச்சிகள் பற்றி மறக்க முடியாத சில சிறுகதைகள் எழுதிய போதிலும், சரோஜ்குமார் ராய் சவுத்திரி எழுதிய கறுப்புக் குதிரை என்ற நாவலைத் தவிர வேறு எந்த வங்காள நாவலிலும் போர்க்கால பயங்கர அனுபவங்கள் பற்றி இவ்வளவு விரிவாகச் சொல்லப்பட வில்லை. வங்காளம் பட்ட வேதனையைப் படம் பிடித்துக் காட்ட வேண்டிய கடமையும் பொறுப்பும் அக்கால வங்காள எழுத் தாளர்களுக் கில்லையா?

தாராசங்கர் ஒருவர்தான் இக் கடமையை உணர்ந்து செயல்பட்டார். நாவல் ஒன்றில்தான் பல்வேறு பிரச்சினைகள் பற்றி விரிவாக எழுத முடியும். அவர் கம்யூனிஸ்ட் அல்ல; எனினும் அக்கட்சியைப் புறக்கணிக்க இயலாது என்பதைப் படித்த இளைஞர்கள் மீதும் நாட்டின் பழைய அரசியல் தொண் டர்கள் மீதும் அக்கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்பதையும் அவர் ஒருவர்தான் தெளிவாக உணர்ந்து கொண் டார். கம்யூனிஸ்டுகளிடம் குறைகள் பல இருக்கலாம். ஆனால், பஞ்ச நிவாரணத்திற்காக அவர்கள் செவ்விய முறையில் செயல் பட்ட முறை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. அக்

கட்சியை அனைவரும் பாராட்டினர். மேலும் அவந்த் காடிர் எழுத்தாளர்களும் கலைஞர்களும் அக்கட்சியின் செல்வாக்கின் கீழ் வந்தனர். இந்த உண்மையைத் தாராசங்கர் தமது நாவல்களில் நன்கு புலப்படுத்தியுள்ளார். நாவல் என்ற கோணத்திலிருந்து பார்த்தால் மன்வந்தர் நன்கு புனையப்பட்ட நாவல் என்று சொல்ல முடியாது. ஏதாவது ஒரு நிகழ்ச்சி பற்றி நன்கு சொல்லப் பட்டுள்ளதென்றால் அது சக்கரவர்த்திக் குடும்பத்தைப் பற்றித் தான் என்று சொல்லவேண்டும். நீலாவின் பாத்திரம் உண்மை யான கம்யூனிஸ்டின் பாத்திரம் என்று சொல்ல முடியாது. பிஜோய்தா கடமை உணர்வு மிக்கவர்; அமைதியே உருவானவர். தாராசங்கர் படைத்த மற்ற பாத்திரங்களை இவர்கள் நினைவூட்டு கின்றனர்.

இந்த நூலில் அவர், தம்முடைய பழைய சொல் ஜாலங்கள் அமைந்த இலக்கிய நடையைவிட்டு உரையாடல் நடையைப் பின்பற்றியுள்ளார். இந்த நாவல் அக்கால சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் நாவல் என்று சொன்னால் மிகையாகாது. கல்கத்தாவில் லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத் தில் மாண்டனர். ஆயிரக் கணக்கான மக்கள் தெருக்களில் இறந்துகிடந்தனர். கல்கத்தா, சூதாட்டப்பணம் விளையாடிய நகரம். லட்சக்கணக்கான மக்கள் மாண்ட போதிலும் ஒரு சினிமா கொட்டகைகூட மூடப்படவில்லை என்பதும் பெரிய இடங்களில் களியாட்டங்கள் குறையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கன. குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பெண்கள் விலைமகளிராக ஆகவேண்டிய கட்டாயம் இருந்தகாலம். மிதுனப்பூரைக் கலக்கிய புயல் ஏராளமான மக்களைக் காவுகொண்டது. இரண்டு கிராமங் களில் வாழ்ந்த இருநூற்று எண்பத்தாறு மக்களில் ஐந்துபேர் தான் பிழைத்தனர் என்று அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்றை அந்த நாவலிலும் நாம் காணலாம்.

அத்தியாயம்-7

''தத்ரிதேவதா'' 1939-ல் வெளியிடப்பட்டது. தாராசங்கர் எளிதில் திருப்தியடையாதவர். தாம் எழுதியதைத் திரும்பத் திரும்பப் படித்து அதை மாற்றி மாற்றி எழுதும் பழக்கம்

உள்ளவர். ஆனால் தத்ரிதேவதா என்ற நாவலை அவர் மாற்றவே யில்லை. இந்த நாவலை ஒருவிதத்தில் தாராசங்கரின் சுய சரித்திரம் என்று சொல்லலாம். நாவலாசிரியர் என்ற முறையில் தாராசங்கரின் இயல்பான பண்புகளை எல்லாம் இந்த நாவலில் காணலாம். சிறு ஜமீன்தாரர்களுக்கிருந்த பிரச்சினைகள், வணிகர் சமுதாயத்தின் எழுச்சி, உழவர்களின் பிரச்சினைகள், பாமர மனிதனின் வாழ்க்கைப் போராட்டம், தலைசிறந்த மனிதர்கள், மகளிர், பொன்மனம் படைத்த ஜமீன்தாரர் ஒருவர், சன்னியாசி, மாறுபட்ட கருத்துக்களை உடைய அரசியல் கட்சி ஊழியர்கள், வறட்சி, காலரா, பஞ்சம் இவை அனைத்தையும் இந்த நாவலில் காணலாம். அழகுற அமைந்த இந்த நாவல் பாங்காக எழுதப் பட்டுள்ளது, காப்பிய நூல் ஒன்றை எழுத அவர் எடுத்துக் கொண்ட முதல் முயற்சி இது.

நாட்டின் நிலைமையையும் மக்களின் வாழ்க்கை நிலையையும் முழுமையாக விளக்கிக் காட்டுவதே காப்பிய நாவலின் இலக்கணம். தத்ரிதேவதாவைத் தொடர்ந்து, கணதேவதா, பஞ்சக்கிராம், ஹன்சுலி பாங்கர் உபகதா என்று மூன்று நாவல்கள் வெளிவந்தன. அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றிக் கூறினாலும், நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும், கடந்த கால வரலாறு, தற்போதைய வரலாறு பற்றியும் விளக்குகின்றது. குறிப்பிட்ட காலத்தை மட்டும் தழுவி எழுதப்படாமல் பரந்து விரிந்துள்ள நாடு முழுவதிலும் உள்ள மக்கள் அனைவரின் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்டுள்ளதே இந்த நாவலின் சிறப்புத் தன்மை. ஷிப்நாத் தத்ரிதேவதாவின் கதாநாயகன். சிறு ஜமீன்தார் ஒருவரின் ஒரே மகன். குழவிப் பருவத்திலேயே தன் தந்தையை இழந்தவன். அவனுடைய தாயும் அத்தையும் அவனை வளர்க்கின்றனர், இருவருமே அசாதாரணமானவர்கள். அன்பும் அமைதியும் நிறைந்த அவன் தாய் அருள் நிறைந்தவள்; அதே சமயத்தில் கண்டிப்பானவள். அவன் அத்தை அன்பே உருவானவள்; ஆனால் ஆணவம் மிக்கவள்; பொறுமையில்லாதவள். அவளைப் பொறுத்தவரையில் ஷிப்நாத் அவளுக்குத்தான் உரிமையானவன். அவளுடைய வற்புறுத்தலின் மேல் ஷிப்நாத் பள்ளிப் படிப்பை முடிக்குமுன்னர் ஒரு செல்வனின் சகோதரனின் மகள் கௌரி என்ற பெண்ணை மணந்து கொள்கிறான். கிராமத்தில் காலரா பரவுகிறது. காலரா நோயை எதிர்த்துப் போராட அவன் கிராம மக்களுக்கு உதவுகிறான். அப்பொழுது அவன் சுஷில், பூர்ணா என்ற இரண்டு கட்சி ஊழியர்களைச் சந்திக்கிறான். அவர்கள் அவனைப் பயங்கரவாதியாக மாற்ற விழைகின்றனர்.

கௌரி மீது அவனுக்குள்ள அன்பை அவனுடைய அத்தையால் சகித்துக் கொள்ள முடியவில்லை. முடிவாக கௌரியை அவளுடைய பெரியம்மா, கல்கத்தாவுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு அவளுக்கு ஒரு மகன் பிறக்கிறான். ஷிப்நாத் கல்லூரியில் படிப்பதற்காக சல்கத்தா செல்கிறான். அங்கு சுசிலும் பூர்ணுவும் அவனுக்கு வலை விரிக்கிறார்கள். காந்தி அடிகளின் அகிம்சைக் கொள்கையினால் பயங்கரவாதி ஒருவன் ஈர்க்கப்படுகிறான். தன்வசமிருந்த ஆயுதங்களை அழித்து விடுகிறான். அண்ணல் வழி நடக்கிறான்; அதனால பயங்கரவாதிகளின் கோபத்துக்கு ஆளாகிறான். அவனைக் கொல்லும்படி பயங்கரவாதிகள் கட்சி, பூர்ணுவுக்கு உத்திரவிடுகின்றது. பூர்ணு அந்த உத்தரவை நிறைவேற்றுகின்றான்' ஷிப்நாத்தின் தாய் இதற்கிடையில் இறந்துவிடுகிறாள். ஷிப்நாத்தும் கௌரியும் ஒன்று சேரும் பொருட்டு ஷிப்நாத்தின் அத்தை காசிக்குப் போகிறாள், ஷிப்நாத் தனது ஜமீன்தாரியில், தொலைவில் உள்ள கிராமம் ஒன்றுக்குச் சென்று ஏழை மக்களுக்குச் சேவை செய்கிறான். ஒத்துழையாமை இயக்கத்தில் ஷிப்நாத் கைதாகிறான். கௌரியும் அத்தையும் தங்கள் பகைமையை மறந்து ஷிப்நாத்தைப் பார்க்கச் செல்கின்றனர். அவர்கள் இருவரும் ஒற்றுமையாகிவிட்டதைக் கண்டு ஷிப்நாத் மகிழ்ச்சி அடைகிறான். தன்னை அன்புடன் வளர்த்ததைப் போல தன் மகனையும் வளர்க்க வேண்டுமென்று அத்தையைக் கேட்டுக் கொள்கிறான்.

தனது அத்தை இறந்ததைக் குறிப்பிடுகையில் ''எனது தத்ரி தேவதையின் மரணம்'' என்று தாராசங்கர் தனது நாவலில் குறிப்பிடுகிறார். இந்த நாவலில் ஷிப்நாத்தின் அத்தை அக்குடும்பத்தின் முக்கியமான சக்தியல்ல. தாய்தான் முக்கியமான பங்கு வகிக்கிறாள். நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்க வேண்டுமென்று அத்தாய்தான் கற்றுக் கொடுக்கிறாள். ஷிப்நாத்தின் பாத்திரம் ஒரே சீராக அமைந்துள்ளது. பல்வேறு மக்களுடன் பழக அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அவனது பண்பு பாராட்டத்தக்க முறையில் வளர்கிறது. அவன் தாய், தந்தை, கோசென்பாபா என்ற துறவி ஒருவர், சுசில் என்ற வயது முதிர்ந்த புரட்சிக்காரர் ஒருவர், எல்லோரும் அவனைப் பண்பாளனாக உருவாக்குகின்றனர். கௌரி அவளது உள்ளத்தில் இடம் பிடித்துக் கொள்கிறாளே தவிர; அவனது உணர்ச்சிகளை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் வளர்ந்த சூழ்நிலை வேறு; அங்கு பணத்துக்குத்தான் மதிப்பு அதிகம். பணத்தைக் கொண்டு தான் ஒருவனுடைய மதிப்பது கணக்கிடப்பட்டது. நாவலின் பிற்பகுதியில் கௌரியின் மனப்பான்மை மாறுகிறது. தன்

கணவன் மீது அளவிலா அன்பு கொள்கிறுள். அவன் சேவைகளில் பங்குகொண்டு அவனுடன் ஒன்றிவிட விழைகிறுள். ஆனுல் இத்தகைய மனமாற்றத்தை நாம் புரிந்து கொள்ள முடியவில்லை. அதில் நமக்கு நம்பிக்கையும் ஏற்படுவதில்லை.

இந்தியாவில் பயங்கரவாதிகள் வெற்றி பெற முடியவில்லை. தப்பியோடி, மறைந்து, தலைமறைவாக வாழும் சுஷிலுக்கு ஷிப்நாத் பரிவு காட்டி அன்பு செய்கிறுன். தாராசங்கர் இந்தியாவில் பயங்கரவாதிகளின் செயல்கள் பற்றி எவ்வளவு நன்ருகத் தெரிந்து வைத்திருந்தார் என்பதற்கு அது ஒரு தக்க சான்று. அவர்கள் கருத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனுல் நாட்டிற்காகத் தன் இன்னுயிரையே தியாகம் செய்த இளைஞர்களிடம் அவர் பரிவு காட்டினுர். வன்முறை தோல்வி அடைந்தவுடன் பயங்கரவாதிகள் சோவியத் நாட்டிற்கும், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் தப்பிச் செல்கின்றனர். அங்கிருந்து இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபடுகின்றனர். ஷிப்நாத், சுஷிலிடம் தனது கொள்கையை விவரிக்கிறுன். ''33 கோடி மக்கள் தங்களின் அறுபத்துஆறு கோடி கரங்களையும் உயர்த்தி சுதந்திரம் கேட்க வேண்டும் என்பதுதான் எனது அவா, அதுதான் என் கனவு, அது மக்கள் புரட்சி'' ஷிப்நாத்தின் கருத்துக்களை சுஷில் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. ஆயினும் ஷிப்நாத்திடம் அவனுக்குத் தனி மதிப்பு இருந்தது. நாவலின் அமைப்பு, கட்டுக்கோப்பாக அமைந்துள்ளது. கௌரியைத் தவிர எல்லா பாத்திரங்களும் நன்கு ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். அறிவுக்குகந்த வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கதையின் அமைப்பில் திடீர் சம்பவங்கள் எதுவும் இல்லை. வறட்சி பற்றியும் கொள்ளை நோய் பற்றியும் நம் நெஞ்சை உருக்கும் வகையில் வர்ணிக்கப்பட்டுள்ளது. நடை மிகவும் அழகான முறையில் அமைந்துள்ளது.

கணதேவதா, பஞ்சகிராம் ஆகிய இரண்டு நாவல்களிலும் மகாகிராம், தேகூரியா, சிஞகாளிப்பூர், குசும்பர்; கன்கணு ஆகிய ஐந்து கிராமங்களின் கதை அடங்கியிருக்கிறது. பண்டைக் காலம் முதல் இந்நாள் நாவலாசிரியர் காலம்வரை ஊராட்சிமுறை எவ்வாறு செயல்பட்டது? அது எவ்வாறு சிறிது சிறிதாக நசித்துவிட்டது? என்பதை இந்த இரு நாவல்களிலும் தெளிவாக விளக்குகிறுர். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பே என்பதை மையமாக வைத்தே இந்த நாவல்கள் கிராமச் சூழலை விவரிக்கின்றன.

பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் வங்காளத்தில் உள்ள கிராமங்கள் ஒன்பது கிராமங்கள், ஐந்து கிராமங்கள், மூன்று கிராமங்கள் அல்லது ஏழு கிராமங்கள் என்று தொகுதி தொகுதியாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியும் மக்களின் இசைவுடன் கிராம ஆட்சிச் சங்கத்தினுல் நிர்வகிக்கப்பட்டது. இந்த அடிப்படையிலேதான் அவற்றுக்கு நவக்கிராம், பஞ்சக் கிராம், சப்தக்கிராம் என்றெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டன. கிராம நிர்வாகம் செவ்வையாகச் செயல்பட்டதனுல் மிகத் தொலைவில், தலைநகரங்களில் இருந்த ஆட்கியாளர்கள் கிராமங்களைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை, கிராம ஆட்சி சங்கத்தின் ஆணைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டன.

கிராமத்தில் உள்ள தொழில் வினைஞர்கள் செய்யும் பணிக்கு ஏற்ப அவர்களுக்கு நெல் வழங்கப்பட்டது. இந்த நடைமுறைப் படி கிராமக் கருமான், முடிதிருத்துவோர், தச்சர், செருப்புத் தைப்பவர் ஆகிய அனைவருக்கும் மானியம் கொடுக்கப்பட்டது. இப்பின்னணியை வைத்து கணதேவதா எழுதப்பட்டுள்ளது. அனிருத்தா கிராமக் கருமான். கிராம மக்கள், அவனது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நெல் வழங்க இயலவில்லை யாதலால் அவன் கிராமத்திற்காக உழைக்க மறுக்கிறுன்; வேறு இடத்திற்குச் சென்று பொருள் ஈட்ட விரும்புகிறுன். கிராம ஆட்சி மன்றம் அவனைக் கண்டிக்கிறது. அந்த ஆட்சிச் சபையால் ஏழைகளைத்தான் நசுக்கி ஆள முடியும். பணக்காரனுன ஸ்ரீஹரிபால் அந்த ஆட்சிச் சபையின் உத்தரவுகளுக்குக் கீழ்ப் படிய மறுக்கிறுன். அவனை ஒன்றும் செய்யமுடியவில்லையே! எனவே அனிருத்தா அந்த ஆட்சி மன்றத்தின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறுன். ஸ்ரீஹரிபால் சூழ்ச்சிக்காரன்; காமுகன், ஆணவம் மிக்கவன். அனிருத்தாவின் மனைவி, பத்மாவின் மேல் அவன் ஒரு கண் வைத்திருந்தான். அவன் காமக்கிழத்தி துர்க்கா பாவுரி வகுப்பைச் சேர்ந்த பெண். பாவுரி இனத்தைச் சேர்ந்தவர்கள் ஏழைகள். கடுமையான உழைப்பாளிகள்; அந்த இனத்தைச் சேர்ந்த பெண்கள் மேற்குடி மக்களின் காமக்கிழத்திகளாக வாழ்ந்தனர். அது அன்றைய சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்ட நடைமுறை.

தேபுகோஷ் கிராமத்தின் ஆரம்பப்பள்ளி ஆசிரியர். கோஷிடம் அளவு கடந்த பக்தி வைத்திருந்தாள் துர்க்கா. அவர் அனைவரின் மதிப்பையும் பெற்றவர்; அனைவராலும் விரும்பப் பட்டவர். ஸ்ரீஹரி, ஏழை விவசாயிகளின் நிலங்களைக் கைப்பற்றி ஜமீன்தாராக விரும்புகிறுன். மக்களின் தலைவரான தேபுவிடம்

ஸ்ரீஹரிக்குஅச்சம் இருந்தது. எனவே சூழ்ச்சி செய்து, பொய் வழக்கில் தேபுவை மாட்டி வைக்கிறான். தேபு கைது செய்யப் படுகிறார். மக்கள் ஸ்ரீஹரியை மேலும் வெறுக்கின்றனர். இன்னொரு பொய்வழக்கிலும் தேபுவை மாட்டி வைக்க ஸ்ரீஹரி சூழ்ச்சி செய்கிறான். ஆனால் அனிருத்தா தான்தான் குற்றவாளி என்று கூறி அக்குற்றத்தை ஏற்கிறான். கைது செய்யப்படுகிறான். கணவனின் பாதுகாப்பை இழந்த காரிகையைக் கைப்பற்ற இது அருமையான வாய்ப்பல்லவா? ஸ்ரீஹரி இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு பத்மாவைத் தன் வசப்படுத்த முயற்சி செய்கிறான். ஆனால் அவன் எண்ணங்கள் ஈடேறமுடியாதபடி தேபு குறுக்கே நிற்கிறார். ஜாடினை பத்மாவுக்குக் காவலாக வைக்கிறார்.

காலரா பரவி மக்களின் உயிரைக் கொள்ளை கொள்கிறது. தேபு, மக்களைக் காப்பாற்ற கடுமையாக உழைக்கிறார். ஆனால் காலரா அவர் மனைவியையும் மகனையும் பலி கொள்கிறது. மன முடைந்த தேபு தவிக்கிறார். தத்தளிக்கிறார். அவருக்கு உயிருக் குயிரான கிராமம் அவர் கண்முன்னரே சிதறுகிறது: சின்னாபின்ன மாகிறது. ஸ்ரீஹரி எல்லா நிலங்களையும் வாங்குகிறான்; ஜமீன்தார் ஆகிறான். பத்மாவுக்குக் காவலாக இருந்த ஜாடின், காவலரால் அகற்றப் படுகின்றான். சிறையிலிருந்து வெளிவந்த அனிருத்தா மனம் வெறுத்து கிராமத்தை விட்டு வெளியேறு கிறான். விரக்தியுற்ற தேபுவுக்கு மகா கிராமத்தைச் சேர்ந்த சிவசேகரேசுவரர் நியாய ரத்னா என்ற அந்தணரின் துணை கிடைக கின்றது. அவர் அறிஞர். ஆசார சீலர். கிராம மன்றத்தின் தலைவர். நிலமற்ற விவசாயிகள் பிழைப்பைத் தேடி நகரத் திற்குச் செல்கின்றனர். தொழிற்சாலையில் சேர்ந்து வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். நகரத்திற்குச் சென்றுவிட்டால் தங்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் தீர்ந்துவிடும் என்று நம்புகின்றனர். நகரங்கள் பெருகுகின்றன. கிராமங்கள் பழைய பெருமையின் நிழலிலே குற்றுயிரும் குலை உயிருமாக நிலைகுலைகின்றன.

கடந்த நூற்றாண்டுகளில் வேளாண்மை விளைபொருளின் விலை உயர்ந்துவிட்டது. இருப்பினும் விவசாயிகள் ஜமீன்தார்களுக்குப் பழைய வரியையே செலுத்தி வருகின்றனர் என்று அரசு அறிக்கை கூறுகிறது. இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு ஜமீன்தார்கள் ஒன்றுபடுகின்றனர். விவசாயிகளிட மிருந்து அதிக வரி வாங்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கு கின்றனர். இப்பின்னணியில்தான் பஞ்சக்கிராம் என்ற நாவல்

தொடங்குகிறது. விவசாயிகள் இதனை எதிர்த்து ஒன்றுபடு கின்றனர். வேளாண்மை விளைபொருள்களின் விலை உயர்ந்து விட்ட தென்றால் வாழ்க்கைச் செலவும் உயர்ந்து விட்டது. ஜமீன்தார்கள் கேட்கும் வரியைக் கொடுத்துவிடும்படி தேபு விவசாயிகளுக்கு அறிவுரை கூறுகிறார். ஏனெனில் சட்டம் அவர்கள் பக்கம்தான் சாயும் என்பது அவரது வாதம். ஆனால் அவர்களை ஒற்றுமையாக நின்று அரசை எதிர்த்துப் போராடும்படி அறைகூவல் விடுக்கின்றான் சிவசேகரின் பேரன் விஸ்வநாத். தேபுவும் சிவசேகரும் இளைஞனின் அறைகூவல் கேட்டு அதிர்ச்சி யுறுகின்றனர். அந்தணர் உயர்ந்தவர் என்ற கொள்கையை மறுக்கிறான் விஸ்வநாத். பழங் கொள்கைகளைச் சாடுகிறான். சிவசேகரைப் பொறுத்தவரையில் இது மன்னிக்கமுடியாத குற்றம். ஆங்கிலம் கற்றுக் கொள்ளக் கூடாது என்பது அவரது வாதம். அவருக்கும் அவரது மகனுக்கும் இதில் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. அவருடைய மகன், உள்ளம் மிகக் கசந்து தற்கொலை செய்து கொள்கிறான்.

குசும்பூர் கிராமம் முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள கிராமம். தௌலத் ஷேக் அவர்களிடையே செல்வாக்கு மிகுந்த வர். அவர் ஒரு தோல் வியாபாரி. முஸ்லீம் லீகும் அமைச்சர் களும் ஜமீன்தார்களின் பக்கம் இருப்பதால் ஜமீன்தாரர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவேண்டாம் என அவர் தேபுவைக் கேட்டுக் கொள்கிறார். இர்ஸாத் என்னும் கிராமப் பள்ளி ஆசிரியர், முஸ்லீம் விவசாயிகள் தனிப்பட இயக்கத்தைத் தொடங்க மாட்டார்கள் என்றும் ஆனால் இந்து விவசாயிகளை ஆதரிப்பர் என்றும் கூறுகிறார். மனைவியையும் மகனையும் இழந்து மனம் உடைந்த நிலையில் உள்ள தேபு, இந்த இயக்கத்தைத் தானே பொறுப்பேற்று நடத்த வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்ததும் தயங்குகிறார். ஏனெனில் அவருடைய குடும்பத்தின் மீது விழுந்த இடியின் அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் மீள வில்லை. உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவருக்கு விவசாயிகளை நன்றாகத் தெரியும். அவர்கள் மே மாதத்திலிருந்து உணவு தானி யங்களைக் கடன் வாங்கிக் காலம் தள்ளுபவர்கள். அவர்களால் நீண்டகாலம் ஜமீன்தார்களை எதிர்த்துப் போராட முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

ஸ்ரீஹரி, இப்போது ஜமீன்தார் ஸ்ரீஹரிகோஷாகி விட்டார். விவசாயிகள் போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அவர் தேபுவின்மீதும் பல்லா பக்டி இனத்தைச் சேர்ந்த, அஞ்சாநெஞ்சம் படைத்த வீரன்

தின்சாரி என்பவன் மீதும் கொள்ளைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடுக்கிறார். விவசாயம் இல்லாத காலத்தில் விவசாயிகளுக்கு உணவு தானியங்களைக் கடன் கொடுக்க வேண்டாம் என்றும் பட்டினி போட்டால் அவர்கள் தானே வழிக்கு வருவார்கள் என்றும் ஆலை உரிமையாளர்களின் பிரதிநிதியான முகர்ஜி பாபு ஸ்ரீஹரிக்கு ஆலோசனை கூறுகிறார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருசேர இன்னலுறுகின்றனர். தேபுவுக்கு எதிராக வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்ட தௌலத் ஷேக் முயற்சி செய்கிறார். இர்ஸாத்தையும் ரஹம் ஷேக் என்ற விவசாய புரட்சிவாதியையும் குசும்பூரிலிருந்து விரட்ட முகர்ஜி பாபு திட்டமிடுகிறார். குசும் பூரில் தௌலத் ஷேக்கும் கிராமத்தில் ஸ்ரீஹரியும் விவசாயிகளின் நண்பர்கள்போல் நடித்து விவசாயிகளுக்கு உணவு தானியங்களைக் கடனாகக் கொடுக்கின்றனர். இந்த இரண்டு பெரிய மனிதர்களும் என்றாவது ஒருநாள் விவசாயிகளை அவர்களது நிலங்களிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்பதை இர்ஸாத்தும் தேபுவும் நன்கு உணர்ந்திருந்தார்கள். எனினும் அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. இச்சமயத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படு கிறது. துன்பத்தில் ஆழ்ந்து தவிக்கும் விவசாயிகளுக்கு உதவ ஸ்ரீஹரிகோஷ் விரைகிறார். தமக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை நழுவவிடாமல் மக்களிடையே செல்வாக்குப் பெறுகிறார்.

ஐந்துகிராமங்களுக்கும் தூண்கள் போன்று நின்ற மக்கள் ஒருவர்பின் ஒருவராக அகன்று விடுகின்றனர். விஸ்வநாத் தனக்கு எதிராகப் போராடத் தொடங்கியதனால் மனம் உடைந்த சிவ சேகர் குராமத்தை விட்டுச் செல்கிறார். தின்காரி கைது செய்யப் படுகின்றான். அவரது விதவை மகள் சுபர்ணா மேல்படிப்புக்காக நகரம் செல்கின்றாள், அனிருத்தாவின் மனைவி பத்மா, புதிய தொரு வாழ்க்கையைத் தொடங்க கிராமத்தை விட்டுச் செல் கிறாள். அனிருத்தா கிராமதிற்குத் திரும்பி, தொழிற்சாலைகளில் வேலைக்குப் போகுமாறு கிராம மக்களைத் தூண்டுகிறான். தேபு காங்கிரஸில் சேருகிறார். 1930ஆம் ஆண்டில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு கைது செய்யப்படுகிறார். 1933ல் அவர் விடுதலை பெறு கிறார். ஐந்து கிராம மக்களும் கடைசியாக விழித்துக் கொள்கின்ற னர். அதற்குள் ஜமீன்தார்கள் அக்கிராமங்களில் உள்ள நிலங்கள் அனைத்தையும் வாங்கி விடுகின்றனர். விவசாயிகளை வெளியேற்றி விட்டு அவர்களுக்குப் பதிலாக சந்தால் வகுப்பைச் சார்ந்த கூலி யாட்களைக் கொண்டு வருகின்றனர். இர்ஸாத் சட்டம் பயில முனைகிறார். சட்டம் பயின்றால் ஜமீன்தாரர்களை எதிர்த்துப் போராட இயலும் என்ற நோக்கத்தில் சட்டத் தேர்வுக்குத்

தயாராகிறார். இதற்கிடையில் விவசாயிகள் அணியைத் திரட்டு கின்றார். பணக்காரர்களிடம் மேலும் செல்வம் குவிகின்றது. ஏழைகள் மேலும் மேலும் வறியவர்களாகின்றனர். தாம் வெளியே நின்று இந்நிலையைக் கைகளைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதைத் தேபு உணர்கிறார். அவரும் விவசாயிகள் குடும்பத்திலிருந்து வந்தவர்தானே! நிலத்தில் ஆழமாக வேரூன்றி மீண்டும் துளிர்த்துத் தழைக்கும் மரம் போன்றவன் விவசாயி. வாழ்க்கையின் நடைமுறையை யொட்டி வாழ்வதுதான் அறிவுடைமை என்பதை உணர்கிறார். தற்போது கிராமப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றிவரும் இளம் விதவை சுபர்ணவை மறுமணம் புரிந்துகொண்டு தனது பள்ளியை மீண்டும் தொடங்குகிறார். சாதாரண மனிதனாகி, அன்றாட வாழ்க்கையில் ஈடுபடுவதன் மூலந்தான், அந்த ஐந்து கிராமங்களுக்கும் தன்னால் பணிபுரிய முடியும் என்பதை நன்கு தெரிந்து கொண்டு அவ்வழியிலேயே செயல்படுகிறார்.

இந்த இரண்டு நாவல்களும் உண்மையில் ஒரு நாவலின் இரண்டு பாகங்கள்தான் என்று சொல்லவேண்டும். தாரா சங்கருக்கு அந்தணர்களிடம் மதிப்பு அதிகம். 'இலக்கிய நினைவுகள்' என்னும் நூலில் இதை அவர் வெளியிடுகிறார். சிவ சேகர் ஓர் உண்மையான அந்தணர். பிதாபுத்ரா (தந்தையும் மகனும்) என்ற சிறுகதையே இந்த இரண்டு நாவல்களுக்கும் வித்தாக அமைந்தது. வடமொழி விற்பன்னரான சிவசேகரரும் ஆங்கிலம் படித்த சசிசேகரும் சிறுகதையில் வருகின்றனர். நாவலில் சிவசேகர் சிறுபங்கையே வகிக்கிறார். பண்டைய இந்தியாவின் பிரதிநிதியாக அவரை நாம் காண்கிறோம். முதலில் தன் மகனுடனும் பின்னர் தன் பேரனுடனும் நடத்தும் போராட்டம் நமக்கு அர்த்தமற்றதாகத் தோன்றலாம். பண்டைக் கால அந்தணர்களிடம் தாராசங்கருக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் இதன் மூலம் வெளிப்படுகின்றது. தாராசங்கருடைய நோக்கம் எதுவாக இருப்பினும், கணதேவதாவும் பஞ்சக்கிராமும் அந்தணத் தன்மையின் மேன்மையைவிட மேலான ஒன்றைச் சாதித்துள்ளது என்பதிலே தினையளவும் ஐயமில்லை.

இந்த இரண்டு நாவல்களிலும் ஒரு சமுதாயமே திரண்டு வருகிறது. முக்கியமானவர்கள் அனைவரும் ஒரே பொருளாதார நிலையைச் சேர்ந்தவர்கள். வறிய மக்கள், வாழ்க்கையில் அல்லல் படுவோர், நிலமற்றோர், சுரண்டப்படுவோர் ஆகியவர்களை மையமாக வைத்து முக்கிய நிகழ்ச்சிகள் பின்னப்பட்டுள்ளன.

துவாரிக் சௌத்திரி, ஸ்ரீஹரிபால், தௌலத் ஷேக், முகர்ஜிபாபு, மற்றும் சிலர் இதற்கு விதிவிலக்கு. தாராசங்கருக்கு விவசாயி களிடம் அனுதாபம் இருந்தது; ஆனால் அவர் காலம் காலமாக இருந்துவரும் நம்பிக்கைகளுக்கிடையே வளர்ந்தவர். பண்டைய பழக்கங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை அவரது இரத்தத்தில் ஊறியிருந்தது. சிவசேகருக்கு, தாராசங்கர் கொடுத்த சிறப்பிடமும் தேபுவிடம் சிவசேகருக்கிருந்த செல்வாக் கும் இதிலிருந்து நமக்குத் தெரிகிறது. ஆனால் விவசாயிகள் அல்லலுறும்போது, அவர்கள் சுரண்டப்படும்போது, தேபு, சிவசேகரின் செல்வாக்குக்கு உட்படவில்லை. தாராசங்கர் நமது நாட்டின் சாதாரண மக்களின் மனப்பான்மையை எந்த அளவுக்கு ஆழமாகக் கணித்து வைத்திருந்தார் என்பதற்கு தேபுவின் மன நிலையை அவர் சித்திரிக்கும் விதமே சான்றாகும். குடியானவர் களிடையே தேபு சிறிதளவு உயர்ந்த நிலையில் நிற்பது இயல்பே. ஏனெனில் அவர்களைவிட அவர் அதிக அளவு படித்தவர். கல்வி கற்ற விவசாயி நிலத்தில் வேரூன்ற முடிவதில்லை. அவன் தனியாக நிற்கின்றான். தேபு, பழமை விரும்பியாக இருப்பது இயல்பே. ஆனால் அவரது பழமை மனப்பான்மை மேலெழுந்தவாரியாகத் தான் அமைந்துள்ளது. அந்த மனப்பான்மை அவரது செயலில் தென்படுவதில்லை, அவரும் இர்ஸாதுந்தான் இறுதிவரையில் விவசாயிகள் இயக்கத்திற்கு உண்மையாக நடந்து கொள் கின்றனர்.

அனிருத்தா அத்தகையவன் அல்ல. ஹன்சுலி பாங்கர் உபகதாவில் வரும் கரலியின் முன்னோடியாக அனிருத்தா விளங்கு கிறான். அவன் விவசாயி அல்ல. மண்ணில் அவன் கால்கள் வேரூன்றவில்லை. அவன் கருமான். கிராமச் சமுதாயம் மாறி வரும் காலத்தை உணர்ந்து கொள்ளாமல் பழமையிலேயே ஊறிக் கொண்டிருந்ததைக் கண்டு அவன் ஆத்திரம் அடைகிறான். அச்சமுதாயத்தை எதிர்க்கிறான். தொழிற்சாலைகளில் வேலை தேடி அண்மையில் உள்ள நகரங்களுக்குச் செல்லுமாறு ஏழை கிராமத்தினரை அவன் தூண்டுகிறான். பீர்பும் மாவட்டத்தில் ஏழை மக்கள் கிராமத்தைவிட்டு வெளியேறுகின்றனர். அதே மாவட்டத்தில், அரிசி ஆலைகளும் தொழிற் சாலைகளும் உள்ள ஏனைய நகரங்களுக்குச் செல்கின்றனர். ''தொழிற்சாலை'' ''தொழிற்சாலைத் தொழிலாளர்'' என்று தாராசங்கர் குறிப்பிடு வதன் பொருள் வரையறை நமக்கு விளங்கவில்லை. 1930 முதல் 1940 வரை பீர்பும் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெரிய தொழில்கள் எதுவும் இருந்ததாக அரசு அறிக்கை களிலோ அல்லது மக்கட் தொகை கணிப்பிலோ காணப்பட

வில்லை பீர்பும்மில் அரிசி ஆலைகள் இருந்தன. ரயில்வேயுடன் இணைக்கப்பட்டிருந்த நகரங்களில் ரயில் கூடங்கள் இருந்தன. பீர்பும் மக்கள் வேலை வாய்ப்புத்தேடி பிற இடங்களுக்குச் செல்ல விரும்புவதில்லை என்று அரசு அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது. மேற்கு வங்காளத்தில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் இந்த மாவட்ட மக்களே தலைமுறை தலைமுறையாக ஒரே இடத்தில் வசிப்பதையே விரும்புகின்றனர். பல நூற்றுண்டு களாக ஒரே இடத்தில் வசிப்பதனுல் மக்கள் பிடிவாதமாகத் தமது பழைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள மறுக்கின்றனர். அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை பீர்பும்மில் விவசாயப் பிரச்னைகள் இல்லாமல் இல்லை. ஏனெனில் இங்கு மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பி உள்ளனர். எனவே தாராசங்கர் தொழிற்சாலை, தொழிலாளர்கள் எனக் குறிப்பிடும்போது அரிசி ஆலைகள் அல்லது ரயில் பணிமனைகளில் வேலை வாய்ப்பினைத் தேடிச் செல்லும் கிராமத்தவர்களைத்தான் குறிப்பிடுகிருர் என்று நாம் அனுமானிக்கலாம்.

சிறிது சிறிதாக பொருளாதார நிலை நலிந்து விவசாயிகள் வறுமையின் கடைகோடிக்குச் செல்கின்றனர். இந்த நிலையை தாராசங்கர் மிக்க துயரத்துடனும் அனுதாபத்துடனும் விவரிக் கிருர். ஜமீன்தார்கள் ஒன்றுபட்டு நின்று விவசாயிகளைச் சுரண்ட முற்படும்போது விவசாயிகள் சமய வேறுபாட்டை மறந்து ஒற்றுமையாகப் போராடுகின்றனர். இர்சாத்தும் ஸ்ரீஹரியும் இவ்வகுப்பின்பால் சாய்கின்றனர். வகுப்பு வேறுபாடு என்பது பொருளாதார அடிப்படையில் ஏற்படுவதுதான் என்று தாராசங்கர் சரியாகக் குறிப்பிடுகின்ருர். ஜமீன்தாரர்களை எதிர்த்து மறியல் செய்யும் முடிவை சமய உணர்ச்சிகளைத் தூண்டித்தான் கலைக்க முடியும். மதம் பற்றியும் சமயச் சடங்கு கள் பற்றியும் தாராசங்கர் குறிப்பாக எழுதுகிருர் என்ருல் அதற்குக் காரணம் அவர், தாம் கண்ணுல் கண்டவற்றைப் பற்றி எழுதுகிருரே தவிர எது எப்படி இருக்க வேண்டுமென்று அவர் என்றும் எழுதவில்லை. இத்தகைய பழக்க வழக்கங்கள் இன்றும் நம்மிடையே நிலவி வருகின்றன. இந்திய வரலாறு விந்தையா னது. சரித்திரப் போக்கில் தோற்றம் என்பதும் முடிவென்பதும் இல்லை. அது பழமையும் புதுமையும் சேர்ந்து பின்னியது. மாறி மாறி வருவது; பழமையில் ஊறிக் கிடக்கும் சமுதாயம் புதிய துறைகளில் மிக வேகமாக முன்னேறுகிறது. இதைத் தாராசங்கர் நன்கு புரிந்து கொண்டவர். இதில் முரண்பாடு ஏதும் இல்லை. தேபு, சிவசங்கரிடம் ஒட்டிக் கொள்கிருர். ஆனுல், விவசாயி களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதிக்கிருர். இந்தியாவில்

இது சர்வசாதாரணம். படித்து, பட்டம் பெற்று, பகுத்தறிவு வாதம் செய்பவர்கள் கைரேகை சாத்திரத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். கடவுளின் அவதாரம் என்பதிலும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். கொள்கை காற்றில் பறக்கிறது; அதற்குப் பதிலாக மற்றொரு கோட்பாடு கருத்தில் ஏறுகிறது என்று சொல்வதெல்லாம் வெறும் ஏட்டளவில்தான்.

நமது உள்ளங்களில் பண்டைய இந்தியா பதிந்து கிடக்கிறது. மத்திய கால வரலாறு மறைந்து நிற்கின்றது. இவை இரண்டுடனும் புதுமையும் புகுந்து கொள்கிறது. பழமையும் புதுமையும் மாறி மாறி வரும் இந்த மயக்கத்தைத் தாராசங்கர் நன்கு உணர்ந்து கொண்டார். இதனால்தான் அவரது நாவல்களில் வரும் பாத்திரங்கள் புரட்சிகரமான மாறுதலுக்குட்படுவதில்லை. மாற்றங்கள் அறிவுக்குகந்த முறையில்தான் நிகழ்கின்றன. இயற்கையை ஒட்டி, படிப்படியாக மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஸ்ரீஹரி கொடுமை நிறைந்தவனாக, அதிகார வெறியனாக, ஆணவம் மிக்கவனாக ஆகின்றான். காவலர் கரங்களிலிருந்து தேபுவை துர்க்கா காப்பாற்றுகின்றாள். காமக் களியாட்டத்தில் ஈடுபட்ட பரத்தையானாலும், தேபுவைப் பொறுத்த வரையில் மனித உள்ளம் படைத்த மங்கையாகின்றாள். ஏனெனில் தேபு அனைவரிடமும் அன்புடன் பழகுகின்றார். ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் அவருடன் நல்ல முறையில் பழகி, அவர்களிடமுள்ள நல்ல பண்புகளை வெளிக் கொணர்கின்றார். மற்றவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறுகின்றனர். ஆனால் இர்சாத்தும் தேபுவும் தங்கள் உயிரினும் இனிய கிராமத்தை விட்டுச் செல்லத் தயாராக இல்லை. அடக்குமுறைக்கு எதிரான பேராட்டம் என்றும் ஓய்வதில்லை. கடக்க முடியாத தடைகளைத் தாண்டித்தான் அப்போராட்டத்தில் வெற்றி கொள்ள முடியும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். சுபர்ணாவும் கௌரியும் கிராம மக்களுக்குப் பணி செய்ய முன்வருகின்றனர். கிராமங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். கிராமங்கள் சிறிது சிறிதாக நசித்து விட்டால், நாடு ஒரு நாளும் வளம் பெற முடியாது என்பதைத் தாராசங்கர் இந்த நாவல்களின் மூலம் நன்கு உணர்த்தி யுள்ளார்.

இந்த இரண்டு நாவல்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து உருவாகியவையாகும். படிப்பவர்களின் மனதுக்குச் சோர்வு ஏற்படும் வகையில், குழப்பம் உண்டாக்கும் முறையில், நீண்ட வர்ணனைகள் ஏதும் இல்லை. எளிய நடை, சொற்களைப் பயன்படுத்துவதில் சிக்கனம், பகட்டான சொற்றொடர்கள் பயன்

படுத்தப்படாமை, இவையெல்லாம் இந்த நாவல்களின் சிறப்பியல்புகள். இவை புதுமைக் கவிதைகள் அல்ல; உணர்ச்சி ததும்பும் பாடல்கள் அல்ல. நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளவாறே விருப்பு வெறுப்பற்ற வகையில் எழுதியுள்ளார். தேபுவைத் தவிர எல்லாப் பாத்திரங்களும் அவரைப் பொறுத்தவரையில் சரிநிகர் சமானம்தான்; கதையின் மையம் என்று எதுவுமில்லை. இது ஐந்து கிராமங்களின் கதை அல்வளவுதான். பாத்திரங்களும் அவர்களின் வரலாறும் நன்கு பிணைக்கப்பட்டும் பின்னப்பட்டும் எழுதப்பட்டுள்ளன. அவர்களில் சிலரைப்பிரித்துவிட்டால் நாவல் முழுமையாகாது. இது மக்களின் வரலாறு. அதுதான் கதையின் மையம். தாராசங்கர் எழுதிய நாவல்களிலேயே இந்த இரண்டு நாவல்கள்தான் மிகச் சிறந்தவை. இவை இரண்டும் காப்பிய நாவல்களாக நிலைத்து நிற்கும். இத்தகைய நாவல்களை எழுத வேண்டுமென்றால் மக்களைப் பற்றி, அந்த மக்கள் வாழும் மண்ணைப் பற்றி, அம்மக்கள் வரலாறு பற்றி, அக்காலம் பற்றி ஆழ்ந்து அறிந்திருக்க வேண்டும். தாராசங்கருக்குப் பின்னர் அவருக்கு நிகரான திறன் படைத்த எழுத்தாளர் இத்துறையில் எவருமில்லை என்பதை நினைக்கவே வருத்தமாக இருக்கிறது. ஒரே ஒரு நாவலாசிரியர்தான் நம் நினைவுக்கு வருகிறார். அவர்தான் ஜாகரி (விழிப்பு) தோனஸி சரித மனஸ் (தோனஸியின் வாழ்க்கைச் சரிதம்) என்ற இரண்டு நாவல்களையும் எழுதிய சதிநாத் பாதுரி. ஆனால் அவர் எழுதிய பாணி வேறு; அவரது நடை வேறு. பிறர் எவரேனும் இத்தகைய நாவல்கள் எழுதியிருந்தாலும், தாராசங்கரின் சிறப்பு அதனால் சிறிதும் குறைந்துவிடாது.

அத்தியாயம்-8

ராய்கமல், முதலில் சிறுகதையாக 1929ல் கல்லோல் பத்திரிகையில் வெளிவந்தது. பின்னர் தாராசங்கர் இதனை நாவலாக எழுதினார். வைணவர்களுடனும் அவர்களது சமய நெறியுடனும் அவருக்கிருந்த நெருங்கிய தொடர்பை அவரது வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். வைணவரைப் பொறுத்த வரையில் அன்பு என்பது, மனிதர் ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பல்ல. மண்ணகத்தைச்

சார்ந்ததுமல்ல. உண்மையான அன்பு கண்ணனுக்குத்தான் சொந்தம். கீதகோவிந்தம் எழுதிய ஜெயதேவர், பன்னிரண்டாவது நூற்றுண்டில் பீர்பும் மாவட்டத்தில் வசித்தவர். சிறந்த வைணவக் கவிஞர். ஜெயதேவர் காலத்திற்கு முன்னரேயே வைணவம் பீர்பும் மாவட்டத்தில் வேரூன்றத் தொடங்கி விட்டது. ஸ்ரீசைதன்யர் வருவதற்குள் இம்மாவட்டத்தில் வைணவம் தழைத்து நன்ருக வேரூன்றி விட்டது. ஜெயதேவர் பற்றி இந்த நாவலின் தொடக்கத்தில் தாராசங்கர் குறிப்பிடுகிருர். இப்பொழுதுகூட வைணவம் சாதாரண மனிதனை ஈர்க்கின்றது. வைணவத்தில் சாதி வேறுபாடு கிடையாது. எல்லோரும் சமம். தாழ்த்தப்பட்டோருக்கும், சமூகத்தில் ஒதுக்கப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் நசுக்கப்பட்டோருக்கும் புகலிடம் கொடுத்த சமயம் என்று வைணவத்தைச் சுவாமி விவேகானந்தர் புகழ்ந்து போற்றியுள்ளார்.

வைணவர்கள் பெருவாரியாக வாழ்ந்த கிராமம் ஒன்றில் கமலினியும் அவரது விதவைத்தாய் காமினியும் வசிக்கின்றனர். காமினி தனக்கென்று ஆசிரமம் ஒன்றை வைத்திருக்கின்ருள். இந்த ஆசிரமத்திற்கு ரசிக்தாஸ் என்ற வயது முதிர்ந்த வைணவர் ஒருவர் வருகிருர். அவர் கமலினிக்கு ராய்கமல் என்று பெயர் சூட்டுகிருர். மகேஸ்வர் என்ற பணக்கார நிலக்கிழாரின் மகன் ரஞ்சனை, ராய்கமல் காதலிக்கிருள். ராய்கமலை மணந்து கொள்வதற்காக, தான் ஒரு வைணவனுக மாறிவிடுவதாக ரஞ்சன் தந்தையை அச்சுறுத்துகிருன். தன்னிடம் கருணை காட்டி தனது ஒரே மகனை ரஞ்சனை விட்டுவிடுமாறு ராய்கமலிடம் மகேஸ்வரர் கெஞ்சுகிருர். இதனுல் மனம் நெகிழ்ந்து காமினி, ராய்கமல், ரசிக்தாஸ் ஆகிய மூவரும் பகவான் ஸ்ரீசைதன்யருடைய நவதீபம் என்ற ஊருக்குச் செல்கின்றனர். காமினி அங்கு ஆசிரமம் ஒன்றைக் கட்டிக் கொள்கிருள். சிறிதுகாலம் கழித்து அவள் இறைவனடி சேர்கிருள்.

ராய்கமல், ரசிக்தாஸை மணம் செய்து கொள்கிருள். வயது முதிர்ந்தவரைத் திருமணம் செய்து கொண்டால்தான் உடல் உறவைத் தவிர்க்க முடியும் என்பது அவள் கருத்து. ஆனுல் இளமங்கையை மணந்து கொண்டதனுலோ என்னவோ உறங்கிக் கிடந்த ரசிக்தாசின் உணர்வுகள் விழித்துக் கொள்கின்றன. இளமை திரும்புகிறது. இது உண்மையான வைணவர் தமது தர்மத்திலிருந்து வழுவுவதாகும். அவர்கள் அந்த ஊரைவிட்டுச் செல்கின்றனர். சிறிது காலம் இங்குமங்கும் அலைந்து திரிந்த பின்னர் சொந்தக் கிரரமத்திற்கே திரும்புகின்றனர். அங்கு

ராய்கமல் புதிய ஆசிரமம் ஒன்றைக் கட்டுகிறாள். ரஞ்சனிடம் தான் உண்மையாக நடந்து கொண்டதுபோல், ரஞ்சன் தன்னிடம் உண்மையாக நடந்து கொள்ளவில்லை என்பதைக் கண்டு ராய்கமல் மனம் வருந்துகிறாள். ரஞ்சன் வைணவனாக மாறி, பாரி என்ற பெண்ணை மணந்து கொண்டதை அறிந்து அவள் அதிர்ச்சி யுறுகிறாள். ஜெயதேவர் கோயிலில் ராய்கமல் ரஞ்சனைச் சந்திக்கின்றாள். அங்கு இருவரும் சங்கமம் ஆகின்றனர். அந்த மகிழ்ச்சி சிறிது காலம் நீடிக்கிறது. ரஞ்சன், அழகின் ரசிகன். அவனால் ராய்கமலிடமே நிலைத்து நிற்க முடியவில்லை. ராய்கமலின் இடத்தில் இன்னொரு இளமங்கை வருகிறாள். மனிதர்களுடைய அன்பு அற்பமானது என்பதை ராய்கமல் உணர்கிறாள். இறைவனிடம் வைக்கும் அன்புதான் நிலைத்தது—நீடித்தது என்பதை அறிந்து உண்மையான வைணவ தத்துவத்தை உணர்ந்தவளாய் எவரும் காணாத ஓர் இடத்திற்குச் செல்கிறாள். கண்ணனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே மறைகிறாள்.

வைணவத்தின் சமய - ஆன்மீக சக்தி பற்றி இந்த நாவலில் அதிகம் சொல்லப்படவில்லை. பற்றுக பற்றற்றான் பற்றினை அப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு என்பது வைணவ தத்துவம். ராய்கமலின் சரிதம் உண்மையில் ஒரு காதல் கதை. இதில் வருபவர்கள் மனிதர்களுக்குள்ள இயல்புகள் படைத்தவர்கள். மனித உணர்ச்சிகளுக்கு அடிமையானவர்கள். பக்தி ரசம் என்பது நாவலில் காணப்படவில்லை. காதல் ரசனைதான் மேலோங்கி நிற்கிறது. இறுதிக் கட்டத்தில்தான் அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது என்பதை ராய்கமல் உணருகிறாள். ரஞ்சனைவிட்டு விலகுகிறாள். அவள் அவ்வாறு உணர்ந்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் உண்மையிலேயே பற்றற்ற நிலையை அடைந்து விட்டாளா? ரஞ்சனின் உண்மையான இயல்பை அறிந்து, அவனுடனேயே தங்கி அவனது வீழ்ச்சியைப் பார்க்க அவள் தயாராக இல்லை. எனவே அவனைவிட்டுச் செல்கிறாள். கவிதை நடையில் கதை ஓடுகிறது. ரசிக்தாசின் பாத்திரம் நன்கு படைக்கப்பட்டுள்ளது. ரஞ்சனைப் பற்றி விரிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால், ராய்கமலை உருவாக்க ஆசிரியர் தமது நாட்டம் முழுவதையும் செலுத்தியுள்ளார். ரஞ்சன்பால் அவளுக்கிருந்த ஒருதலைக்காதல் நமது உள்ளத்தைத் தொடுகிறது. உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகிறது. நன்கு அமைந்துள்ள குறுநாவல் என்றே இதைச் சொல்லவேண்டும்.

ஆடிப் பாடித் திரிந்த நாடோடி மக்கள் என்றுமே தாராசங்கரைக் கவர்ந்தனர். அவர் இம்மக்களின் வாழ்க்கையை நேரில் கண்டவர். கட்டுப்பாடின்றிச் சுதந்திரப் பறவைகளாய், வானம்பாடிகளாய் வாழ்ந்த அவர்களது வாழ்க்கை, காதல், காமம் போன்று மனிதனுக்கு இயல்பாக உள்ள ஆசைகளுக்கும் பாசங்களுக்கும் அவர்கள் கொடுத்த சிறப்பிடம் ஆகியவை அவரது கதைகளுக்குக் கருவாக அமைந்தன. சாதாரண மனிதன் பற்றி, அடிப்படையாக உள்ள அவனது உணர்ச்சிகள் பற்றி எழுதுவதில் அவருக்குத் தனி ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வத்தில் திறமை கலந்திருந்தது. கிராமக் கவிஞனின் வாழ்க்கையை மையமாக வைத்து அவர் மற்றொரு நாவல் எழுதினார். கவி என்ற இந்த நாவல் வங்காள இலக்கியத்திலேயே தலை சிறந்த அகப்பொருள் இலக்கியமாகும். எழுத்தறிவில்லாத ஒருவன் நமது புராணங்கள், நாடோடிப் பாடல்கள், பழங்கதைகள், நாடோடிக் கதைகள் ஆகியவற்றுடன் உள்ள நீண்ட நாள் தொடர்பு காரணமாக மிகவும் மேலான கல்வித் திறனை அடைய முடியும் என்பதை மேற்கு வங்காள வரகவிகள் மெய்ப்பித்துள்ளனர்.

இந்தியாவில் எழுத்தறிவில்லாதவர்கள் பண்பற்றவர்கள் என்றோ கல்வி அறிவு அற்றவர்கள் என்றோ சொல்ல முடியாது. கலை, பண்பாடுடன் அவர்களுக்குள்ள தொடர்பு மிகவும் உயரிய தரத்தைச் சேர்ந்ததாகும். வரகவி என்பவர் உணர்ச்சி வேகத்தில் கவிதை புனைந்து அதனை அதே இடத்தில் இசையுடன் பாடக்கூடிய திறன் பெற்றவர். கவிகளுக்கிடையே ஏற்படும் போட்டிகள்-சச்சரவுகள் இந்தியா முழுவதும் பரவலாக இருந்து இருக்கவேண்டும். கவிகள், இரண்டு அணியாகப் பிரிந்து நிற்பர். ஓர் அணியினர் கவிதை வடிவத்திலேயே கேள்விகள் கேட்க, மற்றோர் அணியினர் அதற்குரிய மறுமொழியைக் கவிதை வடிவத்திலேயே கொடுப்பர். 1944ல் கவி என்ற நாவலை எழுதும் முன்னர் தாராசங்கர், பதினொரு ஆண்டுகள் கல்கத்தாவில் வசித்து வந்தார். நகரங்களிலும் பெரிய கிராமங்களிலும் சினிமாக் கொட்டகைகள் வேரூன்றாத காலம் அது. அப்பொழுது இந்த வரகவிகள்தான் மக்களுக்கு இன்னிசை அளித்து இன்பமூட்டினர். பீர்பும், நாடோடிப் பாடல்கள் செறிந்தது. பீர்பும் வரகவிகள் இன்றும் அம்மாவட்ட மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர்.

டாம் என்ற கீழ்ச் சாதியைச் சேர்ந்தவன் நிடாய். அவன் ஒரு கவி என்று அறிந்தவுடன் கிராம மக்கள் வியப்படைகின்ற

னர். கீழ்ச்சாதியினர் என்று அழைக்கப்பட்ட அந்த டாம் வகுப்பினர் ஒரு காலத்தில் சிறந்த போர் வீரர்கள்; போர்புரிய வழியில்லாமல் போகவே குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். இப்போது அவர்களில் சிலரைக் குற்றப் பரம்பரையினர் என்று அரசு அறிவித்துவிட்டது. டாம் சாதி அவ்வாறு அறிவிக்கப்பட வில்லை. ஆயினும் அவர்கள் பெயர் பெற்ற குற்றவாளிகள். எனவேதான் அந்த இனத்தைச் சேர்ந்த நிடாய் ஒரு கவி என்று அறிந்ததும் மக்கள் வியப்படைகின்றனர். நிடாயின் தாய்வழிப் பாட்டன் ஒரு கொலைகாரன்; மாமன் ஒரு கொள்ளைக்காரன். தந்தைவழிப் பாட்டனும் ஒரு கொள்ளைக்காரன்; தந்தை ஒரு திருடன். நல்ல உயரத்துடன் கூடிய எடுப்பான தோற்றம் நிடாய்க்கு. கல்லில் செதுக்கி வைத்தது போன்ற வைரம் பாய்ந்த உடல்; அமாவாசை இருட்டு போன்ற கறுப்பு நிறம். அவன் கண்கள் மென்மையானவை; அவன் கவி என்பதை மெய்ப்பிக்க எதிர் பாராத வகையில் அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டுகிறது.

அட்டஹாசா கிராம மக்கள் கவியரங்கம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்கின்றனர். அக்கிராமத்தின் தலைசிறந்த கவிஞரான தோடான்தாஸ் அக்கவியரங்கத்தில் கலந்து கொள்ள மறுக்கிறார். எதிர்தரப்புக் கவிஞர் குழுவின் தலைவர் மகாதேவன், கிராமத்தின் பெருமையைக் காப்பாற்றுமாறு நிடாய்க்கு அழைப்பு விடுக்கிறார். நிடாயின் திறமை எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. இதுவரையில் ராஜாராம் என்ற ரயில்வே தொழிலாளியும் அவனுடைய மனைவியும் தாகுர்ஜி என்ற அவனுடைய மைத்துனியுமே நிடாயைப் பாராட்டி வந்துள்ளனர். தாகுர்ஜிக்கு நிடாயிடம் தனி அன்பு இருந்தது. ஆனால் அவள் தன் காதலை வாய்விட்டுச் சொன்னதில்லை. அவனுக்கும் அவள் காதல் தெரியும். ஆனால் அவள் அதைக் காட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. ஏனெனில் அவள் திருமண மானவள். தான் சிறந்ததொரு கவியாக ஆகவேண்டும் என்ற ஆர்வமும் குறிக்கோளும் நிடாய்க்கு இருந்தன. எனவே அவன் அக்கிராமத்தை விட்டு வெளியேறு கிறான். தாகுர்ஜி மனமுடைந்து, தளர்வெய்தி தாங்கொணுத் துன்பமடைகின்றாள். ஆனால் அப்பாவி கிராம மக்கள், அவனைப் பேய் பிடித்துக் கொண்டது என்று நினைக்கின்றனர்.

நிடாய் தலைசிறந்த கவியாகிறான். வசந்தா என்ற பாடகியை-நாட்டியக் காரியைச் சந்திக்கிறான். அவள் ஜுமுர் குழுவைச் சேர்ந்தவள். கிராமம் கிராமமாகச் சென்று ஆடுவதும் பாடுதுமே அவர்கள் பிழைப்பு. அவர்கள் குழுவைச் சேர்ந்த பெண்கள் ஆடல் பாடல் முடிந்தவுடன் தங்களை நாடி வரும் ஆண்களை மகிழ்

விப்பர். வசந்தாவின் அழகிலும் ஆடல் பாடலிலும் நிடாய் தன் உள்ளத்தைப் பறி கொடுக்கிறான். வசந்தா எதைச் செய்தாலும் அதை ஆர்வத்துடன் செய்கின்றாள். இவ்வுலகில் தனக்குள்ள நாட்கள் மிகக் குறைந்தவை என்று நினைத்தவள்போல் எதையும் பரபரப்புடனும் ஆர்வத்துடனும் ஒருவிதமான ஆவேசத்துடனும் செய்கிறாள். நிடாய் மீது அவளுக்கு இருந்த அன்பு ஆழமானது. வெறி போன்றது. மது அருந்திவிட்டு இரவு முழுவதும் ஆடிப் பாடி அகமகிழ்கிறாள். வைகறைப் போழ்தில் ஓய்ந்து விடுகிறாள். ''அவள் கண்கள் விசித்திரமானவை; மதுவின் வெறி அவள் கண் களில் பாய்ந்து அவள் கண்கள் செவ்வரி படர்ந்து ரத்தம் படிந்த கத்தி போலக் காட்சி யளிக்கின்றன.'' அவளை அமைதியான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்ல நிடாய் துடிக்கிறான். ஆனால் தான் விரைவில், மீளாத் துயிலில் ஆழ்ந்துவிடப்போவது அவளுக் குத் தெரியும். அவளை உருக்கி வந்த நோய் அவளை அதிக நாள் விட்டுவைக்காது என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். அவள் மனம் மாறியது என்று கதை எழுத தாராசங்கர் தயாராக இல்லை. வாழ்க்கை கதை அல்லவே! வசந்தா புன்முறுவலுடன் மரணத்தைத் தழுவுகிறாள். உணர்ச்சிப் பெருக்கின் உச்சக் கட்டத் திற்கு நம்மை ஆசிரியர் அழைத்துச் செல்கிறார். வசந்தா மரணத்தின் வாயிலில் நிற்கும்போது நாம் கலங்குகிறோம்.

''காய்ச்சலின் கடுமை தாங்காமல் வசந்தா அமைதியின்றித் தவிக்கிறாள். சாவின் பிடி இறுகுகின்றது. திடீரென ஒரு அமைதி; வசந்தாவின் கண்கள் அகலமாக விரிகின்றன. ''நான் இறந்து கொண்டிருக்கிறேனா?'' என்ற வினா அவளிடமிருந்து எழு கின்றது.

வெளுத்த முகத்துடன் அவள் அருகில் அமர்ந்திருந்த நிடாய் அன்புடன் அவள் நெற்றியைத் தடவுகிறான். ''வசந்தா; கோவிந்தனின் பெயரைச் சொல்லம்மா; உனக்கு அமைதி கிடைக்கும்.'' என்று ஆதரவாகச் சொல்கிறான்.

''முடியாது.'' வில்லில் நாண் வீசிய அம்புபோல் சொல் பறந்து வருகிறது. திடீரென மறுபுறம் திரும்பிப் படுக்கிறாள். ''முடியாது, முடியவே முடியாது. நான் எதற்காகக் கோவிந்தனை நினைக்க வேண்டும்? அந்த கோவிந்தன் எனக்கு என்ன கொடுத் திருக்கிறான்? கணவனைக் கொடுத்தானா? குழந்தையைக் கொடுத் தானா? எனக்கென்று ஒரு குடும்பத்தைத் தந்தானா? எதற்காக அவனை நான் நினைக்க வேண்டும்? முடியவே முடியாது.''

நிடாய் மௌனமாகிறான். வசந்தா மீண்டும் புரண்டு படுக்கிறாள். ''கோவிந்தா! என்னிடம் கருணை காட்டு; அடுத்த பிறவியிலாவது என்னிடம் கருணை காட்டு'' என்று கதறுகிறாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது. கார்கால மழையில் அமிழ்ந்த தாமரையின் இதழ்கள் போன்று அவள் கண்கள் மிளிர்கின்றன. நிடாய், தன் வேட்டி யின் நுனியினால் அவள் கண்ணீரை மெதுவாகத் துடைக்கிறான். ''வசந்த்'' என்று குரல் கொடுக்கிறான்.

''வேண்டாம். என்னைக் கூப்பிடாதீர்கள்'' அடுத்த வினாடி அவன் மடியிலே அவள் தலை சாய்கிறது.

அவளுடைய மறைவுக்குப் பிறகு அவன் பேரும் புகழும் பெறவேண்டும் என்ற ஆர்வத்தையே இழந்து விடுகிறான். கவிதைப் போட்டியில் பதக்கம் ஒன்றை அவன் பெறவேண்டும் என்பது தாகுர்ஜியின் அவா. பலரும் விரும்பிப் போட்டியிடும் அப்பதக்கத்தையும் பெறுகிறான். தாகுர்ஜியைப் பார்க்கச் செல்கிறான். ஆனால் அவனது பிரிவாற்றாமை தாங்காது அவள் இறந்துவிட்டாள். காதலுக்காக வாழ்ந்த நிடாய், தன் காதல் ஈடேறாமலேயே காலத்தைக் கழிக்கிறான். அவனுக்குப் பெயரும் புகழும் வாங்கித் தந்த கவிதை அவன் வாழ்க்கையில் உண்மை யாகிறது.

என் நெஞ்சம் நிறைந்து நீராய் வழிய
காதலை அள்ளிப் பருக நான் விழைந்தேன்
நாள் மிகவும் குறுகியது. பாழும் விதி
பாதியிலே படுத்திவிட்டது.

அந்தோ! வாழ்க்கை ஏன் இவ்வளவு குறுகி உள்ளது?

இரண்டு பெண்களை மையமாக வைத்தே நிடாயின் குண இயல்புகள் வரையப்படுகின்றன. கீழ்ச்சாதியில் பிறந்ததால் அவனுக்குத் தாழ்மை யுணர்ச்சி ஏற்படுகிறது. அது நம் உள்ளத் தைத் தொடுகிறது. பேரும் புகழும் அவனைத் தேடிவந்த பின்னரும் தன் சாதியை மறக்க அவனுக்கு வாய்ப்புத் தரப் படுவதில்லை. அவன் தன் உணர்ச்சிப் பெருக்கைக் கவிதை வாயிலாக வெளிக் கொணருகிறான். வசந்தா, தாகுர்ஜி ஆகியோ ரின் குண இயல்புகள் அனுதாபத்தை ஈர்க்கும் வகையில் தீட்டப் பட்டுள்ளன. ஆனால் வசந்தாவின் குண இயல்புகளை உருவாக்கு வதில்தான் ஆசிரியர் முழு நாட்டத்தையும் செலுத்தியுள்ளார்.

நங்கையர் இருவரின் அன்பு வெள்ளத்திற்கிடையே நிடாயின் குண நலன்கள் நன்கு பிரதிபலிக்ககின்றன. ''கவி'' வங்காளத் கதை. நிடாயைப் போன்ற கவிஞர்கள் இந்தியாவில் பலர் இருக்கலாம். ஆனால் இந்தக் கதையின் பின்னணி, கதை அமைந்த இடம், கவிதைகள்—இவை அனைத்தும் ஆசிரியரின் தாயகமாகிய வங்காளத்தின் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவை. ''கவி'' வங்காள இலக்கியத்திலேயே தலைசிறந்த காதல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. நிடாயின் காதலும் அவனைக் காதலித்த இரண்டு பெண்களின் காதலும் துன்பியலில் முடிகின்றன. அதோடு மட்டுமல்ல. இந்தத் துன்பியல் நாடகத்தில் மற்றொரு துன்பியல் கதையும் ஊடுருவி நிற்கின்றது. கீழ்ச்சாதி என்று சொல்லப்பட்ட சாதியில் பிறந்து, தனது திறமையினாலும் உழைப்பினாலும் முன்னேறத் துடித்த ஒருவனை, சாதிப் பிரிவு—கட்டுப்பாடுகள் நிறைந்த சமுதாயம் எப்படியெல்லாம் வதைக்கிறன என்ற சோகக் கதை இந்த துன்பியல் நாவலிலே மறைந்து நிற்கிறது.

திறமையிருந்தும் உழைப்பிருந்தும் சாதியின் நிழல் அவன் வாழ்நாள் முழுவதும் அவனுக்குத் தடையாக நிற்கின்றது. தாராசங்கரின் சிறந்த நாவல்களில் வரும் கதாநாயகர்களும் கதாநாயகிகளும் பாமர மனிதர்கள். சமுதாயத்தில் நலிந்தவர்கள். வறுமையில் வாடியவர்கள்; தரித்திர நாராயணன்தானே இந்தியாவின் உண்மையான பிரிதிநிதி! வங்காளத்தின் நிழல் தாராசங்கரின் நாவல்களில் ஆங்காங்கு படிந்திருந்தாலும், இந்த ஒன்றைப் பொருத்தமட்டில் தாராசங்கரின் நாவல்களில் இந்தியாவின் முழு பிரதிபலிப்பைக் காண முடிகிறது. அவரது சிறந்த நாவல்களில் வரும் பாமர மனிதர்களை நாம் புரிந்துகொண்டால், இந்தியாவை நாம் புரிந்து கொள்ளலாம் என்பதிலே ஐயமில்லை.

அத்தியாயம்-9

ஹன்சுலி பாங்கர் உபகதா இப்போது தாராசங்கரின் சிறந்த நாவல்களுள் ஒன்றாகவும் வங்காள இலக்கியத்தில் சிறந்த நாவல்களில் ஒன்றாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பீர்பும் மாவட்டத்தினூடே ஓடும் கோபை ஆறு ஓர் இடத்தில் சட்டெனத் திரும்புகிறது. அரிவாள் வடிவத்தில்—கிராமப் பெண்கள் அணிந்துகொள்ளும் ஆரம் போன்று இந்தத் திருப்பம் காணப்படுகிறது. இந்த நகைக்கு ஹன்சுலி என்று பெயர். இத்திருப்பத்தில் மணல்திட்டு ஒன்று உள்ளது. இம் மணல்திட்டில் அடர்ந்த மூங்கிற் காடு வளர்ந்துள்ளது. வங்காளத்தில் பன்ஸ் என்றால் மூங்கில் என்று பொருள். எனவே அண்மையிலுள்ள கிராமத்திற்கு பன்ஸ்பாடி என்று பெயர். இக்கிராமத்தின் உரிமையாளர்கள் ஜங்கல் ஜமீன்தார்கள். காஹார் என்ற மலைசாதியைச் சேர்ந்த, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இந்நிலங்களில் பயிர் செய்கின்றனர்.

சுசந்த் என்னும் கிராம மூதாட்டி, பழமையின் பிரதிநிதி. அரிவாள் போன்ற திருப்பத்தின் கதையை அந்த மூதாட்டி எடுத்து உரைக்கிறாள். காஹார் மலைசாதியினர் அக்கதையை நம்புகின்றனர். அவர்களின் தலைவன் பனோரி என்பவன் பழைமையை ஆதரிப்பவன். ஜமீன்தாரிச் சட்டங்களுக்கு அவன் கீழ்ப் படிந்து நடக்கிறான். சுரண்டலையும் வறுமையையும் எதிர்த்து மக்கள் கிராமத்தை விட்டுப் போகாதவாறு கிராம மக்களைத் தடுக்கிறான்.' இரண்டாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்ததனால், வேலை வாய்ப்பு எளிதாகக் கிடைத்த காலம் அது. கராலி இளைஞன். இளைய தலைமுறையின் பிரதிநிதி. பழமையை எதிர்த்துப் போராடுகிறவன். காஹார் வாழ்க்கையில் உள்ள இன்னல்களை அவன் உணர்ந்தவன். பனோரியாவை எதிர்க்கிறான். ரயில் கூடத்தில் பணி செய்கிறான். கிராம தேவதையின் அருள் பெற்றதாகக் கிராமத்தினர் நம்பும் நாகப் பாம்பு ஒன்றைக் கராலி கொல்கிறான். இதனால் பனோரியும் கராலியும் முதன் முறையாகக் கைகலக்கின்றனர். தெய்வப் பாம்பைக் கொன்றவனைத் தெய்வம் தண்டிக்கும் என்று கிராம மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கைக்கு மாறாக, அவனது வீரச் செயலைப் பாராட்டி, போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனுக்குப் பரிசு வழங்குகிறார். கிராமத்தில் உள்ள ஒழுக்க விதிகளுக்குப் புறம்பாக பக்கி என்ற மாற்றான் மனைவியுடன் ஓடிவிடுகிறான். கராலி தனக்குப் போட்டியாக முளைத்துவிட்டான் என்று பனோரி நினைக்கிறான். கராலி-பக்கி திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் கராலியைத் தன் பக்கம் திருப்பப் பார்க்கிறான். கராலிக்கு விட்டுக் கொடுத்ததன் மூலம் கிராம மக்களின் அதிருப்திக்கு ஆளாகிறான். ஆனால் இதற்கெல்லாம் கராலி மசியவில்லை. காஹார்கள் கண் மூடித்தனமாக நம்பி, ஏமாந்து, பணிவுடன் உழைத்துக் கொண்டிருக்கும் ஜமீன்தாரி முறையை அவன் வன்மையாக எதிர்க்

கிறுன். பஞ்ஞோரி, சுசந்த் போன்ற மக்களால் உருவாக்கப்பட்டுள்ள மாயையான உலகில் கிராமத்தினர் வாழ்ந்து கொண்டிருப்பதை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

அரிவாள் வளைவு பற்றிய கதை சுசந்துக்குத்தான் தெரியும். இந்த நிலம் ஒரு காலத்தில் பிரிட்டிஷ் அவுரி நிலக்கிழார்களுக்குச் சொந்தமாக இருந்தது. காஹர்கள் அவர்களிடம் பணி செய்த தால் அவர்களுக்கு அந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. வெள்ளம் வந்து தோட்டங்களை அடித்துச் சென்றபோது, தோட்டச் சொந்தக்காரர்கள் இறந்து போனுர்கள், இறுதியாக ஜங்கலைச் சேர்ந்த கோஷ் குடும்பத்தினர் இந்தத் தோட்ட நிலத்தை வாங்கி காஹர்களைக் குத்தகைக்காரர்களாகத் தொடர்ந்து வைத்துக் கொண்டனர். காஹர்களுக்கு நிலம் எதுவும் சொந்தமாக இல்லை. நிலத்தை உழுவதற்காக அவர்களுக்குப் பணமும் நெல்லும் ஊதியமாகக் கொடுக்கப்பட்டன. அவர்கள் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்ட ஜமீன் தார்கள் பல்லக்குத் தூக்குவதற்கும் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். ஜமீன்தார்களின் சூழ்ச்சி, கராலிக்கு மட்டும்தான் புரிகிறது. காஹர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள அச்சப்படுகின்றனர். பஞ்ஞோரியின் தலைமையின் கீழ் அவர்களின் நிலப்பிரபுத்வ முறையைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்று கின்றனர்.

ஒரு நாளும் கராலி தன் துணைவஞக மாட்டான் என்பதைப் புரிந்துகொண்ட பஞ்ஞோரி மறுமணம் செய்து கொள் கிறுன். இம்முறை ஒரு இளம் விதவையை மணம் புரிகிறுன். அவள் மூலம் மகன் பிறந்தால் தனக்கு வாரிசு கிடைப்பான் என்பது அவனது அவா. அவனது முதல் மனைவி இறந்து விடுகிறுள். அவனது இரண்டாவது மனைவியுடன் கராலி ஓடிவிடுகிறுன். பஞ்ஞோரிக்கும் அவனுக்கும் சண்டை நடக்கிறது. அதில் பஞ்ஞோரி தோற்கிறுன். நோய் வாய்ப்படுகிறுன். பல மாதங்கள் நோயுடன் போராடிய பிறகு மீண்டும் நல்லுடல் பெறுகிறுன். ஆனுல் அவனது பழைய உலகம் மறைந்து விடுகிறது. அவன் எதை எதிர்த்து நின்ருனே, அதை உலகப் போர் சாதித்து விட்டது. உலகப் போருக்கான கட்டுமானப்பணி, மிகத் தொலைவிலுள்ள இந்தக் கிராமத்திற்கும் ஒப்பந்தக்காரர் களை ஈர்த்துவந்தது. 1945ஆம் ஆண்டில் வீசிய புயல் வேளாண் மைப் பயிர்களை நாசம் செய்துவிட்டது. ஜமீன்தார்கள் மக்களைப் புறக்கணிக்கின்றனர். மக்கள் விவசாயத்தைப் புறக்கணித்து விட்டு நகரங்களுக்குச் சென்று விடுகின்றனர். கராலியின்

தலைமையில் ஒப்பந்தக்காரர்கள் மரங்களை வெட்டுகின்றனர். மூங்கில் தோப்புகளை அழிக்கின்றனர். கிராம தேவதையின் திருவிடமான புனித அரச மரமும் வெட்டப்படுகிறது. பஞோரி இறக்கிறான். கராலி தலைவனாகிறான். தனித்து நின்ற காஹார்கள், தொழிலாளர் சமுதாயத்தில் சங்கமம் ஆகின்றனர். சுசந்த் பிச்சைக்காரியாக மாறுகிறாள். அரிவாள் திருப்பம் பற்றிய கதையின் முடிவைக் கதையாகச் சொல்லிக் கொண்டு நகரத்தில் பிச்சை யெடுக்கிறாள்.

இந்நாவலின் கதைச் சுருக்கம் இதுதான். இது ஒரு நாடோடிக் கதை என்று தலைப்புச் சொல்கிறது. நாடோடிக் கதை என்பது கடந்த காலத்தைச் சேர்ந்ததல்ல. நிகழ் காலத்தைச் சேர்ந்ததும் அல்ல. அரிவாள் திருப்பக் கதை உண்மையில் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும். சிறுபான்மை வகுப்பினர், வேறுவழியின்றி பெரும்பான்மை வகுப்பினருக்கு அடிபணிகின்றனர். பஞோரி, கராலி ஆகிய இருவரும் முக்கிய தலைமைப் பாத்திரங்கள். ஆனால் அப்பகுதி மக்கள் அனைவருமே இந்த நாவலின் கதாநாயகர்கள். தற்கால உலகியலை அறியாத காஹார்களின் அறியாமையைப்பயன்படுத்திக்கொண்டு ஜமீன்தார் களும் ஒப்பந்தக்காரர்களும் தொழில் உடைமையாளர்களும் அந்த அப்பாவி மக்களைச் சுரண்டுகின்றனர். இயற்கையின் நெறி முறைகள் அவர்களை நிலை கலங்க வைக்கின்றன. வாழ்க்கையிலே பாதுகாப்பையும் உறுதியையும் வேண்டி, சக்தியில்லாத தெய்வத் திடம் முறையிடுகின்றனர். சுசந்த் அவர்களது பத்தாம் பசலித் தனத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறாள்.

பஞோரி, ஜமீன்தாரர்களிடம் உண்மையாகவும் விசுவாசத் துடனும் நடந்துகொள்ளும் விவசாயியின் கடைசி பிரதிநிதி. அவனைப் பொறுத்த வரையில் தெய்வம், ஜமீன்தார். பழைய பழக்க வழக்கங்கள் எல்லாம் மாற்ற முடியாதவை. நமது நாட்டு விவசாயிகள் பழைய பழக்க வழக்கங்களை எதிர்க்கத் துணிவு இல்லாதவர்கள். ஆனால் இந்தியர்களுக்கே உரிய தன்மதிப்பு அவனுக்கு இருந்தது. சுசந்த் எலலாம் தெரிந்த மூதாட்டி. அவளுக்குப் பழங்காலத்துக் கடவுள்களின் விவகாரங்கள் நன்றாகத் தெரியும். நாகம் என்பது, அவளைப் பொறுத்த வரையில், கடவுளின் பிரிதிநிதி. புயலும் சுழற்காற்றும், பாவம் செய்த காஹார்களைத் தண்டிக்க கடவுளால் அனுப்பப்பட்டவை. நமது கிராமங்களில் இத்தகைய மூதாட்டிகள் பலர் உள்ளனர். ஆனால் வங்காள இலக்கியத்தில் இத்தகைய வலிமை வாய்ந்த குண இயல்புகள் கொண்ட பாத்திரம் உருவாக்கப்படவில்லை.

சுசந்த் என்ற பாத்திரத்தை நேரடியாக வாழ்க்கையிலிருந்தே எடுத்ததாக ஆசிரியர் கூறுகிறார்.

கராலி, இளைய பாரதத்தின் பிரதிநிதி. பனோரியை எதிர்த்தாலும், அடிப்படையில் பனோரிக்கும் கராலிக்கும் வேறுபாடு அதிகம் இல்லை. நாவலின் இறுதியில் அவன் பாழடைந்த கிராமத்திற்குத் திரும்பிப் போகிறான். அக்கிராமத்தைப் புதிதாக உருவாக்கப் போவதாகக் கனவு காண்கிறான். கணதேவதா, பஞ்சக்கிராம் போன்ற நாவலில் வரும் அனிருத்தாவைப் போன்றவன் கராலி. அனிருத்தாவைப் பொறுத்தவரையில் புரட்சி முழுமையாகிறது. ஏனெனில் தொழிலில் அவன் கருமான். மண்ணுடன் அவனுக்குத் தொடர்பு இல்லை. பழைய நடை முறைகளையும் கிராமத்தையும் அழித்த பின்னரே அதை அவன் அறிந்து கொள்ளுகிறான். தான் அந்த மண்ணில் ஊறியவன் என்பதை அவன் கடைசியில் உணர்ந்து கொள்ளுகிறான்.

காஹார்களின் வாழ்க்கை நல்ல உணர்வுடனும் பாசத்துடனும் வரையப்பட்டுள்ளது. இந்த சிறுபான்மை வகுப்பினர், வறியவர்கள். சுரண்டப்பட்டவர்கள், எனினும் அவர்களது தனித்தன்மையை—பண்பாட்டினை பல இன்னல்களுக்கிடையிலும் நழுவ விடாமல் கடைப்பிடிக்கின்றனர். தங்களுடைய இடர்களை ஆடல் பாடல்களில் மறக்கின்றனர். வேளாண்மையை மையமாகக் கொண்டே அவர்களுடைய கொண்டாட்டங்கள் அமைந்துள்ளன. ஒழுக்கம் பற்றி அவர்களுடைய கருத்துக்கள், பெரும்பான்மை வகுப்பினரின் கருத்துக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. கட்டுப்பாடில்லாத காதல் வாழ்க்கைக்கு அவர்கள் மதிப்பளித்தனர். ஆண்களும் பெண்களும் சேர்ந்தே மது அருந்தினர். பட்டினி கிடக்கும் நிலை உருவாகும்போது அவர்கள் திருடுகிறார்கள்; கொள்ளையடிக்கிறார்கள். உப்பு சப்பற்ற உழவர்களின் வாழ்க்கையினூடே பழங்குடி மக்களின் வளம் மிகுந்த பண்பாட்டினை நாம் காண முடிகிறது. வாழ்க்கையில் அவர்கள் கேள்விக் குறியாக விளங்கினர். பழைய நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றி, நாகரிக வாழ்க்கையை எதிர்க்கின்றனர். அப்படி எதிர்க்கும் வரையில் அவர்கள் தங்கள் தனித்தன்மையை இழக்கவில்லை. நாகரிக வாழ்க்கையில் அவர்கள் ஈடுபாடு கொள்ளத் தொடங்கியவுடன் தங்களது தனித்தன்மையையும் பண்டைய மரபையும் இழக்கின்றனர்.

இப்படித்தான் வாழ்க்கையில் நடக்கின்றது என்பதைத் தாராசங்கர் எடுத்துக் காட்டுகிறார். அவர் வினா எதையும் எழுப்ப.

வில்லை. இந்தியாவின் பழங்குடி மக்கள் வறியவர்கள்; சுரண்டப் படுபவர்கள்; ஆயினும் அவர்கள் பண்பாடு வளமானது. பண் பாட்டு வளம் அதிகமாக அதிகமாக அவர்கள் பழைய பழக்க வழக்கங்களில் மேலும் மேலும் ஒட்டிக் கொள்கின்றனர். ஆனால் அவ்வாறு செய்கையில் அவர்கள் அழிந்து விடுகின்றனர். அழிந்து விடக் கூடாது என்பதற்காக அவர்கள் பெரும்பான்மை சமுதா யத்தில் கலந்து விடுகின்றனர். இவ்வாறு கலப்பதனால் தங்களது தனித்தன்மையை இழந்து விடுகின்றனர். அவர்களுக்காக நாம் உள்ளம் இரங்குகிறோம். அடர்ந்த மூங்கில் தோப்பினால் கரை செய்யப்பட்ட அரிவாள் திருப்பம், ஓர் ஒளிவிளக்குப் போன்றது. மூங்கில் தோப்பு அழிக்கப்படுகையில் அவர்கள் பழமையின் எல்லை யைக்கடந்து இருபதாவது நூற்றாண்டின் கொடூரங்களை உணர்ந்து கொள்கின்றனர். காஹார்களின் மொழியைத் தாராசங்கர் பயன் படுத்தியுள்ளார். பீர்பும் மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்ட மொழிக்கும் காஹார்கள் மொழிக்கும் வேறுபாடு உண்டு. இப்படிச் செய்ததால் வங்காள எழுத்தாளர்கள் முழுவதும் புறக் கணித்துவிட்ட ஒரு பிரச்சினைக்கு, தாராசங்கர் தீர்வு கண்டார். வங்காளத்தில் அகாலத்திலிருந்தே விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், தச்சர்கள், குயவர்கள், ஏனைய தொழிலாளர்கள் தங்கள் தங்கள் தொழிலில் தங்களுக்கே உரிய சொற்களைப் பயன் படுத்திவந்தார்கள். வங்காள இலக்கிய எழுத்தாளர்கள் அனைவ ரும் மத்தியதர வகுப்பிலிருந்தும் மேல்நிலை மத்திய வகுப்பி லிருந்தும் வந்தவர்களே. எனவே எழுத்தாளர் ஒருவர், மீனவர் பற்றியோ உழவரைப் பற்றியோ எழுதும்போது அவர் மற்றவர் களிடமிருந்து தெரிந்துகொண்ட சொற்களை அல்லது அகராதியி லிருந்து அறிந்து கொண்ட சொற்களைப் பயன்படுத்தினார். மாணிக் பந்தோபாத்யாய எழுதிய பத்மா நதிர் மஜ்ஹி (பத்மா நதி யின் படகுக்காரர்) என்ற நாவல்கூட கதையும் அமைப்பும் பிற அம்சங்களும் மிக நன்றாக அமைந்திருந்தாலும் மீனவர்கள் பயன் படுத்தும் சொற்களை நல்ல முறையில் கையாளவில்லை.

வங்காள இலக்கியம் தோன்றிய காலத்திலிருந்து இக்குறை பாடு ஒரு தடையாகவே இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதி யினர் பேசிய மொழியை மட்டும் பயன்படுத்துவது போதாது. அம்மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்களையும் பயன்படுத்த வேண்டும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் காளி பிரசன்ன சின்ஹா, இருபதாவது நூற்றாண்டில் தினேந்திர குமார் ராய், அண்மை ஆண்டுகளில் அத்வைத மல்லபுராமன் ஆகியோர், வழக்கில் உள்ள மொழியை வெற்றிகரமாகப் பயன் படுத்திக் கொண்டுள்ளனர். ஆனால் இவர்களில் எவரும்

முழுமையான வளர்ச்சி யடைந்த நாவலாசிரியர்கள் அல்ல. எனவே, அவர்கள் பாராட்டப்படினும் வழக்கில் உள்ள மொழியை வங்காள இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்தாதது ஒரு குறையே. தாராசங்கர் அம்மொழி பேசிய வகுப்பினர் பற்றி எழுதியதனுல்தான், அம்மொழியைப் பயன்படுத்தினுர். நாவலின் அமைப்பு இன்னும் சுருக்கமாக அமைந்திருக்கலாம். இத்தகைய குறைகள் இருந்தபோதிலும், இந்நாவல் அவரது பெரும் சாதனைகளுள் ஒன்று; அவர் இறுதியாக எழுதிய சிறந்த நாவல் இதுதான். அவர் நேரடியாகப் பார்த்தவைகளைப் பற்றியே எழுதினுர். சுசந்த் இதற்கு எடுத்துக்காட்டு. நசுபாலா மற்ருெரு எடுத்துக்காட்டு. பெண்தன்மையுடன் பிறந்த ஆண் நசுபாலா. பெண்ணைப் போல் உடையணிந்து கொள்வதிலும் அவனுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. நேரடியாக அனுபவத்தில் கண்டவற்றைப் பற்றி எழுதுகையில் அவர் சிறந்த முறையில் எழுதுகிருர். ஏனைய பெரிய நாவலாசிரியர்களைப்போல, இவரது புகழ் கால ஓட்டத்தில் பைய பைய தேயத் தொடங்கியது.

மூத்த விமரிசகர்கள் நாகனி கன்யா கஹினி (நாகப்பெண்ணின் கதை) என்ற நாவல்பற்றியளவப் பாராட்டியுள்ளனர். நாக தேவதையின் பெண் பூசாரியிடையேயும், பாம்பு வைத்தியரிடையேயும் காலங் காலமாக உள்ள பகைமை, பாம்புகள் பற்றியும் அவற்றின் பழக்க வழக்கங்கள் பற்றியும் உள்ள அறியாமையின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். பாம்பு என்பது ஊர்வன இனத்தைச் சார்ந்தது—விலங்கினத்தில் அதுவும் ஒன்று என்று எண்ணுகிறவர்க்கு இக்கதையில் நம்பிக்கை ஏற்படாமல் போகலாம். ஆனுல் பாம்பு என்பது பலநூறு பொருள் கொண்டது. எனினும் அது ஊர்வன இனத்தைச் சார்ந்தது. என்ற நம்பிக்கை உடையவர்கள், நாகம் மாதிரி பெண் உருமாறுவதிலும் நாகம் போன்று நடந்து கொள்வதிலும் நம்பிக்கை வைப்பார்கள்.

சாந்திபன் பாடசாலா என்பது மற்ருெரு முக்கியமான கதை. சீதாநாத் என்ற ஏழை ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் கதை. நாட்டிற்கு அறிவு புகட்டும் ஆசிரியர்களில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்பட்டது கண்டு தாராசங்கர் மனம் வருந்தினுர். 1946ல் முதல் பதிப்பிற்கு முகவுரை எழுதுகையில் 'பாடசாலை ஆசிரியர்கள் பற்றி ஒன்றும் சொல்வதிற்கில்லை. அவர்கள் தேவை, மகிழ்ச்சி அனைத்தும் புறக்கணிக்கப்படுகின்றன. அவர்களைப்பற்றி கிண்டல் கதைகளே எழுதப்பட்டுள்ளன.

......சீதாநாத், என்னைப் பொறுத்தவரையில் உண்மையில் வாழ்ட வர். அவரை எனக்கு நன்றாகத் தெரியும்' என்று குறிப்பிட்டுள்ளார். நாவலின் கதை 1893/94ல் தொடங்குகிறது. சீதாநாத் விவசாயி ஒருவரின் மகன். மெட்ரிகுலேஷன் தேர்வில் தோற்று விடுகிறார். ஆனால் கிராமங்களில் கல்வி ஒளி பரப்ப தமது வாழ் நாளை அர்ப்பணிக்க முடிவு செய்கிறார். 1919ல் அவர் ஒரு பாடசாலை தொடங்குகிறார். பாடசாலையை நடத்த அவர் செய்த முதல் முயற்சியைக் கிராமத்தில் உள்ள மேல்குடி மக்கள் தகர்த் தெறிகின்றனர். அவர்களுக்கு அவரிடத்தில் உள்ள பொருமையினாலே அவர் நூல்நூற்கும் காந்தியவாதி என்றும் தேசீயக் கருத்துக்களைப் பரப்புபவர் என்றும் போலீசிடம் புகார் செய்கின்றனர். கீழ்க்குடியில் பிறந்த ஒருவர் கல்வி கற்பிக்க வருவதா என்று அவர்கள் வெகுண்டெழுகின்றனர். ஜமீன்தாரின் விதவை மனைவி ஒருவர்தான் சீதாநாத்தை ஆதரிக்கிறார். ஏனெனில் அவர் மகன் தீரானந்தா சீதாநாத்தின் முன்னாள் மாணவர். 1921ல் கைதானவர்.

பாடசாலையை மூடும்படி சீதாநாத்தைபோலீஸ் நெருக்குகிறது. எனவே சீதாநாத் திறந்தவெளி பாடசாலை ஒன்றைத் தொடங்கு கிறார். ஏழை எளியவர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அவர் பாடசாலையில் படிக்க வருகின்றனர். அவருடைய மாணவர் ஒருவருக்கு படிப்பு உதவித் தொகை கிடைக்கின்றது. பல இடர்ப் பாடுகளுக்கிடையேயும் கடுமையான வறுமையை எதிர்த்துப் போராடியும் சீதாநாத் தனது பள்ளியை நடத்துகிறார். அவர், தம் சொந்த வாழ்க்கை பற்றி கவலைப்படவே யில்லை. ஆனால் காலம் மாறுகிறது. 1930ல் நடந்த மாநாடு ஒன்றில் கிராமங்களில் இல வசத் தொடக்கப்பள்ளிகளை நடத்த வேண்டுமென முடிவு செய் யப்படுகிறது. தன்னுடைய கொள்கையும் உழைப்பும் வெற்றி பெற்றன என்று உவகை அடைகிறார் ஆனால் அவர் கண்களில் கோளாறு ஏற்படுகிறது. கல்வி ஒளி பரப்பிய அவர், தம் கண்ணொளியை இழந்து விடுகிறார். அவர் மனைவியும் இதற் கிடையில் இறந்துவிடுகிறார். அவரது ஒரே பெண், விதவையாகி விடுகிறார். எல்லாம் விதிப்பயன் என்று தன்னைத் தேற்றிக் கொள் கிறார் சீதாநாத்.

1947ம் ஆண்டு பாரதத்தின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. சீதாநாத்தின் மாணவர் தீரானந்தா இப்பொழுது தலைசிறந்த எழுத்தாளர். அவர் சீதாநாத்தைப் பார்க்க வரு கிறார். சீதாநாத்தைக் கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்று, கண் சிகிச்சை செய்வதாகவும் தம்முடன் வரும்படியும் அவர் வேண்டிக்

கொள்கிறார். ஆனால் சீதாநாத் மறுத்து விடுகிறார். தம்முடைய விதியின் பயனைத் தாம் அனுபவிப்பதாகவும் அது கடவுளின் விருப்பம் என்றும், தாம் மன அமைதி அடைந்து விட்டதாகவும் அவர் கூறுகிறார். தமது ஆசிரியரின் தலைசிறந்த பண்பை, தியாகத்தை மாணவர் உணர்கிறார். சிரம் தாழ்த்திக் கரங்கூப்பி ஆசானை வணங்குகிறார். தாழ்ந்த குடியில் பிறப்பினும் தாயகத் திற்குத் தான் செயய வேண்டிய தியாகத்தை உணர்ந்தவர் சீதாநாத். இது இந்தியர்களுக்கே உரிய தனிப் பண்பாகும்.

தனது இறுதி மூச்சுவரையில் தாராசங்கர் ஜமீன்தார்களுக் கும் அந்தணர்களுக்கும் உண்மையாக நடந்து கொள்கிறார். வாழ்க்கையில் தான் நேரில் கண்டவற்றை அடிப்படையாக வைத்துத்தான் அவர் எழுதுகிறார். சீதாநாத்தின் கதை நெஞ்சை உருக்கும் கதை. தன்னுடைய இயல்புக்கு மாறாக மிகவும் நிதானமாகவே தாராசங்கர் இக்கதையை வரைந் துள்ளார். கிராமங்களில் தொடக்க நிலைக் கல்வி இருந்த நிலை பற்றி தாராசங்கருக்கு நன்கு தெரியும். எனவே அது உண்மைக் கதையாகிறது. தொடக்கக் கல்வியைப் போதித்து வந்த பாட சாலைகள் தொடக்கப் பள்ளிகளாகின்றன. அவை தவிர, புதிய பள்ளிகளும் தொடங்கப் படுகின்றன. தொடக்கக் கல்வியின் முன்னேற்றத்தை, அரசாங்கத்தின் சட்டங்களையும் திருத்தங் களையும் படித்து அறிந்து கொள்கிறார். தொடக்கப் பள்ளி ஆசிரியர் வாழ்க்கை பற்றி பின்னர் வந்த நாவலாசிரியர்கள் யாரும் எழுதவில்லை. தொடக்க நிலை ஆசிரியர்கள் இன்றுங்கூட புறக்கணிக்கப்படுகிறார்கள். வறுமையும் துன்பமும் அவர்களை வாட்டிய போதும், நாட்டில் கல்வி அறிவைப் பரப்பி வரு கின்றனர். நன்கு படைக்கப்பட்ட பாத்திரமாக இந்நாவலில் சீதாநாத் விளங்குகிறார். மற்ற பாத்திரங்கள் இதைச் சுற்றி வரும் இரண்டாந்தர பாத்திரங்களே. தீரானந்தாவின் மீது ஆசிரியருக்குள்ள இரக்கத்தை நன்கு அறியலாம். இதற்குக் காரணம் அப்பாத்திரத்தின் கூறுகளில் அவரையே காண்கிறோம். தீரானந்தாவின் பாத்திரம் நாவலில் ஆற்றும் பங்கு மிகவும் சொற்பம்.

ஆரோக்கிய நிகேதன் (மருத்துவ மனையின் பெயர்) என்ற நாவல் பற்றி வெகுவாகப் புகழ்ந்து சொல்லப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறாத போதிலும் மருத்துவப் பணிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கிராம மருத்துவர் ஒருவர் பற்றிய கதை இது. இந்த நாவலின் கதாநாய கர் ஜீபன் மஷாய். நாடி பார்ப்பதில் நிபுணர். சாவின் வரவை

முன்கூட்டியே அறிந்துகொள்வதில் அவருக்கிருந்த திறமை, நம்ப முடியாத அளவுக்கு இருந்தது. மருத்துவர் என்ற முறையில் அவரது கடமை சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதாகும். கற்பனைவளம் நிறைந்தவர் என்ற முறையில் அவர் சாவின் சாய லிலே மையல் கொண்டிருந்தார். சாவு என்பது அவருடைய கற்பனையில் மதியை மயக்கும் மங்கை. கதாநாயகனின் நினைவுச் சுழல்கள் அவரது கடந்தகால வாழ்க்கைக் குறிப்புகளை நமக்குத் தருகின்றன. இளமங்கை மஞ்சரியின்பால் அவருக்குள்ள மயக்கம் நாவல் முழுவதும் சித்திரிக்கப்படுகிறது. மஷாயின் நினைவுச் சுழல்களில் சுழன்று வருகையில் மஞ்சரியின் இளமை அழகு மறைந்து, மூதாட்டியாகவும் அவர் காட்சி யளிக்கிறார்

மஷாயின் சொந்த வாழ்க்கை மற்றொரு கதையாகும். அவரு டைய மனைவி கூர்மையான நாக்குப் படைத்தவள். பொறாமை பிடித்தவள். எனவே அவர்களுக்கிடையே பெரிய இடைவெளி இருந்ததில் வியப்பில்லை. அவர்களது ஒரே மகன் இறந்தபோது அவர் நிதானமிழக்காது இருந்ததை அவளால் இன்றும் மறக்க முடியவில்லை. மன்னிக்கவும் முடியவில்லை. ஜீபன் மஷாயின் கதை மட்டும் இந்த நாவலில் வரவில்லை. பழைய ஆயுர்வேத மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்ட நாவலாசிரியர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார். இந்த இரண்டு மருத்துவ முறைகள் பற்றியும் தம்முடைய சொந்தக் கருத்துக்களை நம்முன் தெளிவாக வைக் கிறார். விதியின் வலிமையையும் கடவுளின் கருணையையும் ஆயுர்வேத மருத்துவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். ஆனால், நவீன மருத்துவர்கள் அவற்றை உணர்ந்து கொள்ளவில்லை என்பது தாராசங்கரின் ஆழ்ந்த, தீவிரமான கருத்தாகும். ஆயுர் வேத மருத்துவமுறை உடலிலுள்ள நோயை அகற்றுவதுடன் மனதிலுள்ள மாசினையும் மாற்றுகிறது. ஆனால் நவீன மருத்துவ முறை உடலிலுள்ள நோயை மட்டும் அகற்றுகிறது. அறிவியல் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட சக்தி எதனையும் நவீன மருத்துவ முறை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இத்தகைய பொதுக் கருத்துக்களுக்கு இந்த நாவலில் பஞ்ச மில்லை. ஜீபன் மஷாய் பழைய கருத்துக்களின் பிரதிநிதி. இளம் வயதினரான மற்றொரு மருத்துவர் புதிய கருத்துக்களின் பிரதி நிதி. இருவருடைய கருத்துக்களும் மோதுகின்றன. ஆனால் ஆண்டு கள் செல்லச் செல்ல அவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்கின்றனர். இறுதியில் இருவருக்கும் இடையில் முதிர்ந்த பக்குவமான நட்புறவு நிலவுகிறது. சாவு நெருங்கு

கையில் பலர் பலவிதமாக நடந்து கொள்கின்றனர். ஜீபன் மஷாயைப் பொறுத்தவரையில் இது ருசிகரமான ஆராய்ச்சி. இறக்குந் தருவாயில் உள்ளவர்கள் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதைக் கவனிப்பதில் அவருக்கு அலாதியான ஈடுபாடு உள்ளது. தன்னுடைய முடிவுக்காகவும் அமைதியாகக் காத்திருக்கிறார். மஞ்சரியின் நினைவை அவரால் மறக்க முடியவில்லை. எனவே அவர், தனது மனைவியுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. வயோதிக வயதில் இருவரும் வாடுகின்றனர். வஞ்சனையும் வருத்தமும் அவரைச் சுற்றிச் சிறையாக அமைகின்றன. இது அவரே கட்டிக் கொண்ட சிறை. சாவு ஒன்றுதான் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவருக்கு வழி காட்ட முடியும்.

ஜீபன் மஷாய் மட்டும்தான் இந்த நாவலில் ஆசிரியரின் புதிய படைப்பு. மற்றைய அனைவரும் தாராசங்கர் முந்திய நாவல்களில் படைத்த படைப்புகளின் புதிய படைப்புகள். அத்தர், தத்ரி தேவதாவில் வரும் கௌரியின் மறு அவதாரம். நாவல் முழுவதிலும் தாராசங்கரின் நினைவுச் சுழலே நிறைந்துள்ளது. இந்தியர்கள் சாவை விரக்தியுடன் விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களுடைய தத்துவ மனப்பான்மையை இந்த நாவல் விளக்குகிறது. இந்த தத்துவத்தை இக்காலத்திய வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது அவர்களைக் கேட்டால்தான் தெரியும். எதைப் பற்றியும் கேள்வி கேட்கும் மனப்பான்மை உடையவர்களுக்கு இக்கருத்தை ஏற்றுக் கொள்வது கடினமாகத் தான் இருக்கும். ஆனால் ஜீபன் மஷாயையும் ஒருசில நிகழ்ச்சிகளையும் நம்மால் எளிதில் மறக்க முடியாது. குறிப்பாக மஷாய்-மஞ்சரி, கடைசிச் சந்திப்பை நம்மால் மறக்கவே முடியாது. சாவின் கட்டியங்காரியாக மஞ்சரி வருகிறாள். ஏனெனில் அவர் அதன் பின்னர் வெகுநாட்கள் உயிருடன் இல்லை. சாவு அவருக்கு அமைதியையும் ஆத்ம சாந்தியையும் அளிக்கின்றது.

குற்றமும் தண்டனையும்; குற்ற மனப்பான்மையும் கழுவாயும்; சட்டமும் குற்றவாளியும் என்றைக்குமே தாராசங்கரை ஈர்த்தன. அவரது படைப்புக்களில் எல்லாம் இக் கருத்துக்களைக் காணலாம். பிசாரக் (நீதிபதி) என்ற நாவலில், கதாநாயகன் ஒரு நீதிபதி. அசாதாரணமான ஒரு சூழ்நிலையில் தன் சகோதரனைக் கொன்ற குற்றத்திற்காக குற்றவாளி ஒருவனுக்குத் தண்டனை விதிக்கிறார். ஆனால் அதே சமயத்தில் அக்குற்றவாளியிடம் கழிவிரக்கம் கொள்கிறார். அவரது மனைவி தீ விபத்தில் சிக்கித் தவிக்கும்போது அவர் அவளைக் காப்பாற்ற

வில்லை. இந்த நினைவுகள் அவரை வாட்டுகின்றன. கைதியின் கதையும் அவரது கதையும் ஒன்றுபோல் உள்ளன. தாகூருடைய ஓரிரண்டு கதைகள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. குற்ற நிகழ்வும் தண்டனையும் கலந்த இக்கதையில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. நன்கு பின்னிப் பிணைக்கப்பட்ட கதையில் ஆழமான நீதிகள் பதிந்து கிடக்கின்றன. நீதி போதனை கள் இந்த நாவலில் நிறைந்து கிடக்கின்றன.

சப்தபதி (ஏழு அடிகள்) என்பது, ஆசிரியருக்கு 1916ஆம் ஆண்டு தொடக்கத்தில் அறிமுகமான ஒருவரின் நினைவை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பட்டது. அவர் ஒரு இந்து. படிப்புக் காக கல்கத்தா வருகிறார். கல்வி கற்க வந்த அவர் காதல் மயக் கத்தில் ஆழ்ந்து விடுகிறார். அவர் காதல் கொண்டது ஆங்கிலோ-இந்தியப் பெண்மணியிடம். தானும் கிறித்தவராக மதம் மாறி அவளைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்கிறார். நாற்பது ஆண்டுகள் கழித்து அதே மனிதரைத் தாராசங்கர் இமயமலையின் அடிவாரத்தில் ஒரு மாதா கோயிலில் சந்திக்கிறார். ஒரு பெண்ணுக் காகத் தன் மதத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ள மனித ரைத் திருமணம் செயதுகொள்ளத் தயாராக இல்லை என்றுகூறி அப்பெண் தம்மை நிராகரித்துவிட்டதாகவும் அப்பெண்ணின் அச்செய்கை தம் கண்களைத் திறந்துவிட்டதாகவும் அவர் தாரா சங்கரிடம் சொல்கிறார். அதிலிருந்து கடவுளின் பணியில், தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதாகக் கூறுகிறார். ஒரு கன்னி தரும் காதலைவிடக் கடவுள் தரும் காதலே பன்மடங்கு உயர் வானது என்பதை உணர்ந்ததாகவும் அவர் இயம்புகிறார். அந்த மனிதரின் வாழ்க்கையை யொட்டி புனிதர் கிருஷ்ணசாமி யின் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உலகப் போரில் பணிபுரிந்த ஒரு பெண், இந்த நாவலின் கதாநாயகியாக மலர்கிறாள். இந்நூல் சுருங்கச் சொல்லி நன்கு விளங்க வைக் கிறது. படிப்பதற்கு ஏற்ற நடையிலே உள்ளது. இன்றுவரை அனைவராலும் விரும்பப்பட்டு வருகிறது. கிராமம்—கிராம மக்கள்—பற்றியே எழுதும் தன் பாணியிலிருந்து இந்நூலில் மாறுகிறார்.

கடவுளிடம் நம்பிக்கையில்லாத நாத்திகன் ஒருவன், காம வெறி கொண்டு அலைகிறான். இறுதியில் இறக்கிறான். இது யோக பிரஷ்டா என்ற நாவலின் கதை. கதாநாயகன் சுதர்சன் கடவுள் பற்றிய ஆராய்ச்சியில் தொடங்கி கடவுள் சிலையை—தங்கச் சிலையை உருக்குவதில் முடிகிறான். அவன் செய்கையைக் கண்டு திடுக்கிடுகிறாள் அவன் காதலி. விபரீதமான பல நிகழ்ச்சிகள்

நடைபெறுகின்றன. அவன் கொலைகள் பல செய்கிறான். இறுதியில் கைதாகிறான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. சிறையில் அவன் தன் கதையை எழுதுகிறான். அவனது வீழ்ச்சிக்குக் காரணம் அவனது நாத்திகக் கொள்கைகளே என்பது தாரா சங்கரின் வாதம். கடவுள் இல்லை என்று கூறத் தொடங்கியவுடன் அவன் வீழ்ச்சி தொடங்குகிறது. ஆசிரியரின் நீதிபோதனை ஒரு புறம் இருக்க, சுதர்சன் குண இயல்பு நம் மனதுக்குப் பிடிக்கிறது. வாழ்க்கையில் உற்சாகம், இன்பவெறி, சக்தி, பேராசை, ஆர்வம் இவை அனைத்தும் அவனிடம் நிரம்ப இருக்கின்றன. குற்றவாளியின் வாழ்க்கை அவனுக்குப் பிடித்திருக்கிறது. ஏனெனில் அவ்வாழ்க்கையில் சுதந்திரம் இருக்கிறது. முற்றாத இளமை—ஐம்புல நுகர்ச்சியில் ஆழ்ந்து திளைக்கும் வாழ்க்கை உடையவர்கள் — மாற்றங் காண விரும்பாத—அகமும் புறமும் ஒத்தில்லாத இச் சமுதாயத்திலே இணைந்து வாழ முடியாது. சுதர்சனைப் போன்ற இத்தகைய மனிதர்களிடம் பழகியதைத் தாராசங்கர் மறக்கவில்லை என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

ஆனால் இந்நாவல்களும், பின்னர் அவர் எழுதிய நாவல்களும் நாவலாசிரியர் என்ற முறையில் அவரது சரிவைத் தெரிவிக்கின்றன. ஹன்சுலி பாங்கர் உபகதா என்பதுதான் அவர் எழுதிய கடைசி சிறந்த நாவலாகும். அவர் தம் வாழ்க்கையில் கண்ட காட்சிகளுக்குத் தம் படைப்புக்களில் உருக் கொடுத்தவர். நகரத்தில்அவர் கால்கள் ஊன்றவில்லை. படித்து அறிந்தவற்றைப் பற்றி எழுதும் பாங்கு அவருடைய போக்கில் இல்லை. எனவே, நகரத்துப் பிரச்சினைகள் பற்றி எழுத அவர் செய்த முயற்சி தோல்வியடைந்தது. ஒழுக்கமின்மை, நாத்திகக் கொள்கை, நம்பிக்கையின்மை ஆகியவை பற்றி அவர் அடிக்கடி எழுதினார். ஹன்சுலி பாங்கர் உபகதாவுக்குப் பிறகு அவர் எண்பத்து எட்டு நாவல்கள் எழுதினார். ஆனால் அவற்றில் எதிலும் அவருடைய பழைய எழுத்து வன்மையை நாம் காண முடியவில்லை.

அத்தியாயம்-10

நாவலாசிரியர் என்ற முறையில் தாராசங்கரின் சாதனை என்ன? அவருடைய வெற்றியின் ரகசியம் என்ன? அவருடைய

தோல்வியின் காரணம் என்ன? தாகூருக்குப் பிந்திய கால வரலாற்றில் மூன்று பானர்ஜிகள் அதாவது தாராசங்கர், பிபுதி பூஷன், மாணிக் ஆகிய நாவலாசிரியர்கள் மூன்று மைல் கற்களாக விளங்கினார்கள். சரத் சந்திரரைத் தவிர தாராசங்கர்தான் அந்த மூவரில் தலைசிறந்த நாவலாசிரியர். தாராசங்கரின் சாதனையை அறிவார்ந்த திறனாய்வு முறையில் விமர்சனம் செய்வது அவசிய மாகும். ஏனெனில் இத்தகைய ஆய்வு வங்காளத் திறனாய்வில் இன்று காணப்படுவதில்லை. கடந்த இருபது ஆண்டுகளாக, ஆண்டு தோறும் வங்காள ரோமைன் ரோலண்டு ஒருவர் தோன்றுகிறார். வங்காள தாஸ்தோவெஸ்கி ஒருவர் நமக்கு அறிமுகமாகிறார். அல்லது டால்ஸ்டாய் ஒருவர் வங்காள இலக்கிய வானில் உதய மாகிறார். இலக்கிய உலகிலும் பல்வேறு சாரார் போட்டி போட்டுக் கொண்டு உருவாகினர். ஒவ்வொரு சாராரும் தத்தம் சாராரைச் சேர்ந்த எழுத்தாளர்களைக் கோபுரத்தில் ஏற்றிப் புகழ்ந்தனர். இத்தகைய ஒருதலையான விமர்சனம் உண்மையான சிறந்த எழுத்தாளருக்கு எத்தகைய தீங்கு விளைவிக்கக் கூடும் என்பதற்கு மாணிக் பானர்ஜி சிறந்தொரு எடுத்துக்காட்டு. அவரது தலைசிறந்த நாவல்களான பத்மா நாதிர் மாஞ்ஹி, புதுல் நாசெர் இதிகதா ஆகிய இரண்டும் இரண்டாவது உலகப் போருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிடப்பட்டுவிட்டன. 1930-40ஆம் ஆண்டுகளில் தலைசிறந்த நாவலாசிரியர்களில் ஒருவர் என்று அவர் புகழப்பட்டார். ஆனால் போர்க்காலத்தில் அவர் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்தார். அவர் பின்னர் எழுதிய நாவல்கள் முதல் இரண்டு நாவல்களைப்போல சிறப்பாக அமைய வில்லை. முன்னர் அவரைப் புகழ்ந்த திறனாய்வாளர்கள் இப்போது மௌனிகளாகி விட்டனர். இதுவும் தவறான போக்காகும். அவரது பின்னைய நாவல்களைப் புகழுவதற்கென்று மற்றொரு சாரார் தோன்றினர். ஆனால் அவை முதல் இரண்டு நாவல் களுக்கு இணையாகா. இன்றும் அதே நிலைதான். ஒரு சாரார் முதல் இரண்டு நாவல்களைப் போற்றுகின்றனர். மற்றொரு சாரார் பின்னே வந்த இரண்டு நாவல்களைப் போற்றுகின்றனர். இக்கருத்துக்கள் பற்றி மாணிக் பானர்ஜி என்ன நினைத்திருப்பார்? என்பதை எண்ணிப் பார்க்காமல் இருப்பது நல்லது. ஏனெனில் அவருடைய கருத்துக்கள் சுதந்திரமானவை — வன்மை வாய்ந்தவை.

தாராசங்கரை மற்ற இரண்டு எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டு மதிப்பிடுவது சாத்தியம் அல்ல. மூவரும் மூன்று கோணங்களில் இருக்கின்றனர். எந்த ஒரு அம்சமும் பொதுவாக இல்லை. தாராசங்கர், முன்னர் குறிப்பிட்ட மாணிக் பானர்ஜியின் இரு

நூல்களில் காண்பதைப் போன்று சமுதாயத்தை அரித்துக் கொண்டிருந்த நோயின் தன்மையை அறியக்கூடிய திறனுள்ளவராகவோ, விதியில் நம்பிக்கை கொண்டவராகவோ இல்லை. பிபூதி பூஷனுடன் அவரை ஒப்பிட முடியாது. பின் யாருடன் தான் ஒப்பிட முடியும்? வாழ்க்கையின் ரகசியம், இயற்கையின் புரியாத தன்மை ஆகியவற்றுடன் மையல் கொள்ளும் உள்ளப் பாங்கும் மன வன்மையும் பிபூதி பூஷன் ஒருவருக்குத்தான் உண்டு. பதர் பாஞ்சாலியில் வரும் அப்புவின் பிள்ளைப் பருவத்தின் வறுமையையும் துன்பத்தையும் இன்னலையும் யார் நினைத்துப் பார்க்கிறார்கள்? குழந்தைகளின் கண்களில் தெரியும் மந்திர உலகம்தான் வாசகர்களின் மனதில் பதிகின்றது. மனித உணர்ச்சிகளின் உண்மையான நிலையை, பெருமையை, பேராற்றலைத் தனக்குக் காண்பித்ததற்காக-எழில்மிகுந்த அடவி மலர் இதழ் விரித்திருப்பதைக் காணத் தன்னை அழைத்துச் சென்றதற்காக வாசகர் ஆசிரியருக்கு நன்றி செலுத்த வேண்டும். பிபூதிபூஷனின் சலை வன்மை, வங்காள இலக்கியத்தில் எவருக்கும் முன்பும் இல்லை, பின்பும் இல்லை. வங்காள இலக்கியத்தில் காலங் காலமாக இருந்துவரும் எழுத்தாளர்களின் அடிச்சுவட்டை அவர் பின்பற்றவில்லை. கிராமத்திலுள்ள சிறுவனுக்காக வேறு எந்த எழுத்தாளரும் பதர் பஞ்சலியையோ ஆரண்யகா (அடவி) வையோ எழுதியிருக்க முடியாது. அடர்ந்து பரவியுள்ள அடவியின் அழகை மையமாக வைத்து அரும்பெரும் நாவல் எழுத வேண்டுமென்று வேறு எவருக்கும் தோன்றியிருக்காது. அவரது படைப்புகளில் வேறு எந்த எழுத்தாளரின் சாயலையும் காண முடியாது. மனிதனின் அகத்தின் ஆழத்திலே மறைந்திருக்கும் மாசு மறுக்களை வெளிக் கொணர்வதில் மாணிக் பானர்ஜியின் பெருங்கதைகளில் ஜெகதீஷ் குப்தாவின் கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன. இக்குறை இல்லையெனில் மாணிக் பானர்ஜியையும் வங்காள இலக்கியத்தின் புதுமை எழுத்தாளர் என்று தயங்காமல் சொல்லலாம்.

ஆனால், தாராசங்கரைப் பற்றி இப்படிச் சொல்ல முடியாது. கதையின் கருத்துக்களைக் கண்டறிவதில், பழைய மரபுகளுக்கும் நடைமுறைகளுக்கும் மதிப்பினைக் கொடுப்பதில், புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் சிறப்பிடம் அளிப்பதில் பழைய எழுத்தாளர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றுகிறார். ஆனால் பிபுதி பூஷனும் மாணிக் பானர்ஜியும் அப்படி அல்ல. பிபுதி பூஷனுக்குப் பெருங்காப்பியங்களில் ஆழ்ந்த அறிவிருப்பினும் அவருடைய படைப்புகளில் அது காணப்படவில்லை. பின்னர்

ஏன் தாராசங்கரை வாசகர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்? நாவல் எழுவதற்காக அவர் தேர்ந்து எடுத்த விஷயங்கள் எப்படி எல்லோராலும் விரும்பப்பட்டன? ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியோ ஒரு குடும்பத்தைப் பற்றியோ எழுதுவதைக் காட்டிலும் மக்கள் அனைவரைப் பற்றியுமே எழுதுவதன் மூலம் ஏராளமான வாசகர்களின் மனதைக் கவர முடியுமென அவரது மூன்று பெரிய நாவல்களும் மெய்ப்பித்தன. இரண்டாவதாக மற்றவர்கள் மறுக்கக்கூடிய கருத்துக்களை மையமாக வைத்து அவர் எக்கதையையும் எழுதவில்லை. மனித இனத்தின் முன்னேற்றத்தைப் பற்றி அவர் எழுதினார். ஆனால் பாரம்பரியத்தை அவர் மிகவும் விரும்பினார். கடைசியாக வங்காளத்தின் கிராமங்களைப் பற்றி அவர் எழுதினார். கிராமங்கள் பற்றி அவர் நேரிடையாகத் தெரிந்து கொண்டிருந்தார். எனவே 1930 - 1940 ஆண்டுகளில் கிராமங்களில் வேரூன்றியிருந்த மக்கள், அவரைப் பெரிதும் விரும்பினர். பிற்காலத்தில்தான் அறிவாளிகள் நகரங்களை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். மேலும் கிராமங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட கதைகளே வங்காள இலக்கியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தாகூரின் நாவல்கள் நீங்கலாக ஏனைய வங்காள நாவல்கள் அனைத்தும் கிராமங்களை நிலைக்களனாக வைத்து எழுதப்பட்ட கதைகளே. தற்காலத்திய நாவலாசிரியர்கள்கூட பெரிய கதைகள் எழுத முயலும்போது கிராமக் கதைகளை எழுத முற்படுகின்றனர். நான்கு தலைமுறைகளாக கல்கத்தாவில் வசிப்பவர்களாயினும் ''நான் இந்து......கிராமத்தைச் சேர்ந்தவன்'' என்று ஒரு கிராமத்தின் பெயரைப் பெருமையாகச் சொல்லிக் கொள்வது வழக்கமாகி விட்டது.

கிராமங்களையும் கிராம மக்களையும் பற்றி எழுதுகையில் அவர் தனக்கென்று புதிய பாதை எதையும் வகுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் சரத் சந்திர சட்டர்ஜியும் இன்னும் சில எழுத்தாளர்களும் கிராமங்களைப் பற்றி எழுதியுள்ளனர். ஆனால் தாராசங்கரது பொருளறிவும் பரந்த கண்ணோட்டமும் சரத் சந்திரருக்குக்கூட இல்லை எனலாம்.

நாவலின் கருப்பொருள் பற்றித் தாராசங்கர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். அதுவே அவருக்கு வெற்றிப் பாதையை வகுத்துக் கொடுத்தது. அதுவே அவரது அணுகு முறையாகவும் அமைந்திருந்தது. அவர் கிராமத்தைச் சேர்ந்தவர். நகரப் பொருளாதாரத்தின் தாக்குதல் காரணமாக கிராமப் பொருளாதார நிலை பெருத்த மாற்றத்துக்கு உட்பட்டு வருகிறது என்பதை அவர் உணர்ந்து கொண்டார். கல்கத்தாவும், சுற்றியுள்ள

தொழிற்சாலை நகரங்களும் பெரிய அளவுக்கு வளர்ந்ததே கிராமங்கள் அழிந்ததற்குக் காரணமாகும் என்பதை அவர் கண்டார். கிராமப் பொருளாதார நிலை புறக்கணிக்கப்பட்டதை யும் அவர் கண்டார். வேளாண்மையை நம்பியிருக்கும் இந்தியா போன்ற நாட்டிற்கு அது கேடு விளைவிக்கும் என்பதை அவர் தெரிந்து வைத்திருந்தார். ஏழை விவசாயிகளை, நிலக்கிழார்களும் வட்டிக்காரர்களும் எப்படிச் சுரண்டினர் என்பதையும் அவர்கள் வேலை வாய்ப்பைத் தேடி, கிராமங்களைக் கை விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்பதையும் அவருடைய நாவல்கள் தெள்ளத் தெளிவாக்குகின்றன.

இத்தகைய ஆழ்ந்த அறிவும் நேரடி அனுபவமுமே அவரது அணுகுமுறையை முடிவு செய்தன. தான் எடுத்துக் கொண்ட பொருளை அணுகுவதற்கு முன் முகலாயர் காலம் முதற்கொண்டு இன்றைக் காலம் வரை, நில அமைப்புப் பற்றி ஆர்வத்துடன் படித்து அறிந்துகொண்டார். வரலாற்று நூல் களையும் நிலம் தொடர்பான ஆவணங்களையும் ஆழ்த்து படித்து அறிந்துகொண்டது உண்மையிலேயே போற்றத்தக்கது, ஏனெ னில் இதில் ஆழ்ந்த அறிவு இருந்ததால்தான் நாவல்களில் காணப் படும் பெயர்கள் கற்பனையாக இருப்பினும் நிகழ்ச்சிகள் உண்மையை ஒட்டியும் மறுக்க முடியாத வகையிலும் அமைந்தன. நிலவரி விதிப்பு முறை, நிலப் பங்கீட்டு முறை, பர்கதாரி முறை, நில வரி விதிப்புச் சட்டம், நில அளவை ஆகியவற்றைப் பற்றி அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். கயிறு அளவை என்ற முறை எப்பொழுது நிறுத்தப்பட்டது? சங்கிலி அளவை முறை எப்பொழுது கொண்டு வரப்பட்டது? நில அளவையில் திகர் என்ற சொல் (ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு) புழக்கத்திற்கு வந்தது எப்போது? குதா, குதாபா என்ற சொற்கள் விடப்பட்டது எப்போது? என்பன போன்றவற்றையெல்லாம் அவர் தெரிந்து வைத்திருந்தார். நிலவரி செலுத்துவதில் எத்தனை நடைமுறைகள் வங்காளத்தில் இருந்தன என்று அவருக்குத் தெரியும். இத்தகைய ஆழ்ந்த அறிவு அவருக்குச் சாதகமாக அமைந்திருந்தது. நாடு என்பது மக்கள், பூமி, பயிர், சாகுபடி, வரிவிதிப்பு, வருவாய், வேளாண்மைக் கடன், பாசன வரி, பயிர்கள் சாவியாயப் போதல், பஞ்சம், வெள்ளம், விவசாயிகளை முதுகொடியச் செய்யும் உழைப்பு ஆகியவை அனைத்தும் அடங்கியது என்பதை உணர்ந்திருந்த பெருமை அவரையே சாரும்.

அவர் வேதங்களையும் இதிகாசங்களையும் புராணங்களையும் நன்கு கற்றிருந்தார். அத்துடன் அவர் யாரை மையமாக

வைத்து நாவல்களை எழுதினுரோ அம்மக்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். இவ்விரண்டு அறிவும் அவருக்குச் சாதகமாக அமைந்தது. அவருடைய நாவலில் வருபவர்கள் உண்மையில் வாழ்ந்தவர்கள். வயலில், வளமான நெற்கதிர்கள் முற்றி தென்றலில் அசைந்தாடி அறுவடை செய்யுமாறு அழைப்பு விடுத்தபோது அறுவடை செய்ய இயலாத நிலையில், முகுந்த பாலைப் போன்ற உழவனின் மனம் என்ன பாடுபடும்? என்பதை அறிவார். சூனியக்காரி என்று எல்லோராலும் எண்ணப்பட்டு, தன்னந்தனியே சாவை எதிர்நோக்கி ஏங்கியிருக்கும் நிலை ஒரு கிராமப் பெண்மணிக்கு ஏற்படுகையில் ருசுபாலா போன்ற விசித்திரமான கிராமவாசி எப்படி நடந்து கொண்டிருப்பார் என்பதையும் அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

அவர் எழுதத் தொடங்குமுன் எழுத வேண்டிய பொருளைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்ததால்தான் நாவலாசிரியர் என்ற முறையில் அவருக்கு வெற்றி கிட்டியது என்று சொன்னுல் அது மிகையாகாது. அத்தகைய அறிவு, எழுத்தாளர் ஒருவருக்கு மிக அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது, அவர் இறந்த பின்னர் வெளியாகிய சதப்திர் மிருத்யு என்ற அவரது நாவலிலிருந்து தெளிவாகிறது. இந்த நாவலில் அவர் தமக்கு மிகவும் பிடித்த பீர்பும் கிராமத்தைப் பற்றி எழுதவில்லை. கல்கத்தாவுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து கல்கத்தாவுக்குப் படிக்க வருகிற ஒரு பையனைப்பற்றிய கதை அது. ஒரு நகரம் வளர்ச்சியடைந்து விரிவடைகிற நிலையில் எழுதப்பட்ட கதை.

ஜமீன்தார் குடும்பங்களில் உள்ள ஊழல்களைப் பற்றி மட்டும் எழுதினுல் போதாது என்பதையும் வாணிகமும், தொழிலும் கல்கத்தாவை எப்படி செழிப்பாக்கின என்பதையும் நேரில் பார்த்து அறிந்திருந்த தாராசங்கர், வாணிகத்தாலும் தொழிலாலும் செல்வம் கொழித்த மக்கள், ஜமீன்தார்கள் போன்று எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் ஆனுல் அம்மாநகரின் வளர்ச்சிக்கு உதவாமல் வீழ்ச்சிக்கே உதவினர் என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கிருர். இப்பொருள் மிகவும் ருசிகரமானது. பதினெட்டாவது நூற்ருண்டின் இறுதியிலும் பத்தொன்பதாவது நூற்ருண்டின் தொடக்கத்திலும் வங்காளிகள் தொழில், வாணிபம் நடத்துவதில் எவ்வளவு ஆர்வமாக இருந்தார்கள் என்பதை வரலாற்று ஆராய்ச்சி நமக்கு விளக்குகிறது. பல வணிக நிறுவனங்கள் அவர்களால் உருவாக்கப்பட்டன. தொழில் உரிமையாளர்கள், முதலாளிகள் என்ற நிலையிலிருந்து விலகி, ஜமீன்தார்கள் போன்று நடந்துகொள்ள முற்

படுகையில், நாட்டில் தொழில்வளம் வாயிலாகப் பொருளாதார முறையை வலுப்படுத்தத் தங்களுக்குக் கிடைத்த பங்கினை, வாய்ப்பினை அவர்கள் இழந்து விட்டனர். அரும்பாடுபட்டுச் சேர்த்த செல்வத்தினைக் காமக் களியாட்டங்களில் சீரழித்துத் தங்கள் வீட்டுப் பெண்களுக்கு எவ்வித உரிமையோ சுதந்திரமோ இன்றி அடக்கி வைத்த அழிவு மனப்பான்மைக்காரர்களால் பத் தொன்பதாவது நூற்றுண்டின் மறுமலர்ச்சி உருவாகவில்லை என்று தாராசங்கர் சரியாகச் சுட்டிக் காட்டுகின்றுர். தாம் இதுவரை எழுதாத ஒரு பொருள் பற்றி எழுதப் போவதை நன்குணர்ந்து, அம்மாநகரின் வளர்ச்சி பற்றி நன்கு படித்து அறிந்த பின்னரே அப்புதிய முயற்சியில் இறங்கினுர்.

இதுதான் அவரது வெற்றிக்கு, நாவலாசிரியர் என்ற முறையில் அவரது சாதனைக்குக் காரணமாகும். கதை சொல் வதற்காக அவர் மேற்கொண்ட நடையும், அவருக்கு உதவியாக அமைந்தது. மனித உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கு, கோர மான மனப்பான்மை, சிந்தனைப் போக்கு ஆகியவற்றினுல் ஈர்க்கப் பட்ட அவர், கதையை எடுத்துச் சொல்வதில் தமக்குள்ள திறமை கரரணமாக வாசகர்களை மகிழ்வித்தார். அவரது கதைகள் சுவையாக இருந்தபடியால் மக்கள் அவரது நாவல்களைப் படித் தனர். பின்னர் அவர்களில் சிந்தனை மிக்கவர்கள், அவரது படைப்புகளில் ஆழ்ந்த கருத்துக்கள் இருப்பதை அறிந்தனர். அக் கதைகளிலும் நாவல்களிலும் வருபவர்களை வாசகர்கள் நேரில் கண்டவர்கள், ஆனுல் தாராசங்கர் நாவல்களைப் படிப்பதற்கும் முன்பு, தாங்கள் இதுவரை கற்றறிந்தது கைம்மண்ணளவு என் பதையும் கல்லாதது உலகளவு என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டனர்.

தாராசங்கரது எழுத்து நடை அழகு மிகுந்தது; நேர்த்தி வாய்ந்தது; புதுமை நிறைந்தது; கவின்மிகு எழில் செறிந்தது. விரைந்த ஓட்டமுடையது. வன்மையுடையது. விறுவிறுப்பானது. செழிப்பானது. வட மொழியை அடிப்படையாகக் கொண்ட சொற்களை வங்காள மொழியில், பேச்சு வழக்குச் சொற்களுடன் கலந்து பயன்படுத்திய முறை பதினுருவது நூற்றுண்டின் கவிஞ ராகிய கவிகனகன் முகுந்தராம் சக்கரவர்த்தியின் நடையை நமக்கு நினைவூட்டுகிறது. இத்தலைசிறந்த கவிஞர், சமஸ்கிருத மொழியையும் கிராம வழக்குச் சொற்களையும் கலந்து பயன் படுத்தி தனிப்பட்ட நடையைக் கையாண்டார். நமது கிராம மக்கள், அவர்களுள் கல்வி அறிவில்லாதவர்கள் கூட சமஸ்கிருதம் கலந்த சொற்களைத் தங்களது அன்றுட உரையாடல்களில்

எளிதாகப் பயன் படுத்துகின்றனர். அவர்கள் தலைமுறை தலைமுறையாக இதிகாசங்களுடனும் புராணங்களுடனும் வளர்ந்தவர்கள். சாதாரண மக்கள் அன்றுடம் பயன்படுத்தும் சொற்களையும் சொற்றொடர்களையும் முதன் முதலில் எழுத்தில் பயன் படுத்தி வெற்றிகண்ட பெருமை தாராசங்கரையே சாரும். அவரைப் பொறுத்த வரையில் அது உயிருள்ள மொழி. அந்த உயிருள்ள மொழியைப் பலமாக எழுத்தில் எவரும் பயன்படுத்தாது இருந்த நிலை மாறி, தாராசங்கர் பயன்படுத்தத் தொடங்கியதும், இதுவரை வலுவிழந்து கிடந்த வங்காள இலக்கியம் புத்துயிர் பெற்று எழுந்து, இலக்கிய வானில் புதிய ஒளிச்சுடருடன் மிளிர்ந்தது. விவசாயியோ மீனவரோ அன்றுட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்களை எழுத்தாளர் பயன்படுத்த வேண்டும் என்றால், அவர் விவசாயியாகவோ, மீனவராகவோ இருக்க வேண்டும் என்று அவசியமல்ல. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவருக்கு, கிராமத்தைப்பற்றி தாராசங்கருக்கு இருந்த அறிவும் அனுபவமும் இல்லாதிருக்கலாம். ஆனால், சாதாரண மக்கள் பற்றி எழுத முற்படுகையில் அவர்கள் அன்றுடம் பயன்படுத்தும் சொற்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு எழுதுவது சிறந்த முறையாகும். நமது இன்றைய எழுத்தாளர்கள், இத்தகைய அறிவு தேவையில்லை எனக் கருதுகின்றனர். அனுபவம் இருந்தால் போதும் என நினைக்கின்றனர். அந்த அனுபவமும் மிகக் குறைந்ததே. எனவே, அவர்கள் படைப்புகளுக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் தொடர்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இறுதியாக, கதை சொல்லும் கிராமவாசியைப் போல தாராசங்கர், தம்முடைய கதைகளை மூன்று பெரிய நாவல்களில் கூறியுள்ளதுபோல, உணர்ச்சியில் தோய்ந்தும் கோட்பாட்டினின்று விலகாமலும் நின்று சொல்கிறார். அதனால் வரலாற்றுக் கதைகளைப் படிப்பது போன்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. ஐந்து கிராமங்கள் பற்றியும் காஹார் மக்கள் பற்றியும் நாம் படிக்கும் போது ஒரு மக்களின் எழுச்சி, வீழ்ச்சி, விழிப்பு ஆகிய நிலைகளை எடுத்துக் காட்டும் வரலாற்றினை நாம் படிக்கிறோம் என்ற உணர்வுதான் நமக்குத் தோன்றுகிறது.

இவைதான் அவருடைய சாதனைகள். அவர் கண்ட தோல்விகள் யாவை? அவர் பிறந்து வளர்ந்த சூழ்நிலையை, அவர் நேரில் கண்ட அனுபவங்களிலிருந்து பிறழ்ந்து, வேறுபட்ட பொருள்பற்றி எழுதத் தொடங்குகையில் அவர் வாசகர்களின் உள்ளங்களைத் தொடுவதில்லை. பிற்காலத்தில் நகர வாழ்க்கையில், தான் நேரில்

கண்டதை அவர் எழுதுகிறார் என்பது உண்மைதான். நாட்டில் ஏற்பட்ட கலகம், புரட்சி, நாட்டின் பிரிவினை, இந்திய சுதந்திரம் போன்ற நிகழ்ச்சிகளினால் உந்தப்பட்டு அவர் அவைபற்றி எழுத முற்பட்டார். ஆனால் தொடக்கக் காலத்தில் அவர் எழுதிய பொருள்களில் இருந்த ஆழ்ந்த அறிவு இத்தகைய நிகழ்ச்சிகள் பற்றி எழுதுகையில் வெளியாகவில்லை. 1933ஆம் ஆண்டில் அவர் கல்கத்தாவில் வசிக்க வந்தார். அப்பொழுது அவருக்கு முப்பத்தைந்து வயது. அச்சமயத்தில் அவரது மனம் ஒரு வடிவத்தை எய்திவிட்டது.

வேளாண்மையைப் பற்றி அவர் தெரிந்து வைத்திருந்த அளவுக்கு நாட்டின் வளர்ச்சியில், தொழில் வளத்தின் சிறப்பிடம் பற்றி அவர் தெரிந்து சொள்ளவில்லை. இதுதான் அவரது பெரிய நாவல்களில் கூட நாம் காணும் குறையாகும். பீர்பும் மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலை எதுவும் இல்லை என்பது அரசுப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். அம்மாவட்டத்தில் அரிசி ஆலைகள் பல இருந்தன. ரயில்வே நிலையங்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் பண்டகசாலைகள் இருந்தன. அப்படி இருக்கையில், அவர் நாவல்களில் வருபவர்கள் அதே மாவட்டத்தில் வரும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளுக்கு எவ்வாறு குடியேறி இருக்கமுடியும்? விவசாயிகளைத் தொழிற்சாலைகள் ஈர்த்தன என்பது உண்மைதான். ஆனால் பீர்பும் மாவட்டத்தில் அவ்வாறு நடக்கவில்லை. அங்கு மக்கள் பட்டினி கிடந்தாலும் சொந்த மாவட்டத்தை விட்டு வெளியேறவில்லை என்பதுதான் அரசு அறிக்கைகளிலிருந்து தெரியவரும் தகவலாகும். விவசாயிகள் வேளாண்மையை விட்டுவிட்டு நகரங்களுக்கு வயிற்றுப் பிழைப்பைத் தேடிச் சென்றதைத் தாராசங்கர் நேரில் கண்டிருக்கலாம். அக்கருத்தைத் தம் நாவல்களில் புகுத்தியிருக்கலாம் அல்லது தனது சொந்த மாவட்டத்தில் நடப்பதைப் புரிந்து கொள்ளத் தவறியிருக்கலாம்.

அவரது நடையில் உள்ள' குறைபாடு பற்றி பெரிதும் சொல்லப்பட்டுள்ளது. பிரேமேந்திர மித்ரா தனது சிறுகதைகளில் கையாளும் நடையையோ மாணிக் பானர்ஜி புதுல் நாச்சர் இதிகதா என்ற நாவலில் பயன்படுத்தும் நடையையோ தாராசங்கர் நாவல்களில் காணமுடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவரது நடைக்காக மட்டும் அவருடைய நாவல்களை நாம் படிப்பதில்லை. மற்ற நாவலாசிரியர்கள் தங்களது இலக்கியச் சிந்தனைகளுக்கு மெருகூட்டி அழகிய நடையில் வடித்துக் கொடுக்கின்றனர். ஆனால், தாராசங்கரின் படைப்புகளில் உணர்ச்சிப்

பெருக்கு வெள்ளம்போல் பாய்ந்தோடுவதைக் காண்கிறோம். உணர்ச்சி அலைகளைப் பதிவு செய்யும் நடையைப் பற்றி அவர் கவலைப் படவில்லை. அவரது எண்ணக் சோவை சீரிய முறையில், அமைந்திருந்தது. குறிப்பாக அவரது பெரிய நாவல்களில் அவரது சிந்தனைக் கோவை, செவ்விய முறையில் அமைந்திருப் பதைப் பார்க்கிறோம். ஆனால் அவரது நடையும், கதைகளை எடுத்தாலும் முறையும், கிராமச் சூழ்நிலைகளை மையமாக வைத்து எழுதுகையில் வெளிப்படுவதில்லை. பஞ்சம், போர், வகுப்புக் கலவரம், நாட்டுப் பிரிவினை, ஆகியவை பற்றி எழுதுகையி லும் வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் செல்லும் பாத்திரங்களை உருவாக்குகையிலும் புராணங்கள் பற்றியும் இதிகாசங்கள் பற்றி யும் எழுதுவது ஏற்புடையது அல்ல. தாராசங்கரின் கருத்தோட் டம் காலத்துக்கு உகந்ததாகவே இருந்தது. ஆனால் அவரது நடை காலத்தை யொட்டி அமையவில்லை. அவரைப் போன்ற எழுத்து வன்மை நிறைந்த எழுத்தாளர் ஒருவர், பல ஆண்டுகள் தமது நடையைப் பற்றிக் கவலைப்படாமல், தாம் எழுதும் பொருளுக் கேற்ப தமது நடையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை இல்லாமல், தமது போக்கிலேயே எழுதி வந்தது வருத்தத்திற் குரியதாகும்.

நாவல்களின் அமைப்புப் பற்றியும் கட்டுக்கோப்புப் பற்றியும் அவர் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. கதையின் அமைப்புப் படி பார்த்தால் கணதேவதா, பஞ்சக் கிராம், தத்ரிதேவதா ஆகியவை சிறந்த நாவல்களாகும். ஹன்சுலி பாங்கர் உபகதா உட்பட ஏனைய நாவல்கள் மிகவும் பெரியவை, ஆனால் கதையின் அமைப்பு ஒழுங்காக அமையவில்லை. ராதா, பஞ்சரி ஆவரா, நாகினி கன்யா சஹினி, ஆரோக்கிய நிகேதன், யோகபிரஷ்டா ஆகிய நாவல்களில் ஏராளமான கதைகளும் துணைக் கதைகளும் வருகின்றன. நேரடியான ஒரு கதையை நாம் பார்க்க முடிவ தில்லை. மையமாக உள்ள கதையைச் சுற்றித் துணைக் கதைகளும் குட்டிக் கதைகளும் ஏராளமாக வருகின்றன. இதனால் சில இடங் களில் ஒரே பொருளை பல முறை மீண்டும் மீண்டும் எழுதுகிறார். அவசியமற்ற கருத்துக்களை எடுத்தியம்புவதனால் அவரது படைப் புகள் சுவை குன்றியுள்ளன. ஆனால் அவரது முக்கிய சிறுகதை களில் இக்குறைபாடுகள் காணப்படவில்லை.

இவைதாம் அவர் நாவல்களின் அமைப்பில் காணப்படும் குறைபாடுகள். ஆனால் அவரது நாவல்களின் கருப் பொருள்களில் குற்றம் காண முடியாது. அவ்வாறு குறை கூறப்புகின், தாரா சங்கரைத் தனிப்பட்ட முறையில் குறை கூறுவதாகும்.

அவருடைய நெறிமுறைக் கோட்பாடுகளும் பழமைக் கருத்துக் களுமே தற்காலத்திய வாசகர்களுக்குப் பிடிக்காதவையாகும். அவர் பழமை விரும்பி என்பதையும் அந்தணர் வாழ்க்கை முறை களுக்கு மதிப்புக் கொடுப்பவர் என்பதையும் ஒப்புக் கொண்டா லும், சமூகத்தில் உள்ள கேடுகள் அனைத்தும் மேலை நாடுகளின் நாகரிகத்தினுல் விளைந்தவை என்று கூசாமல் அவர் எழுதுவது நமக்கு வியப்பாக உள்ளது. மேலை நாடுகளின் பழக்க வழக்கங் களைக் கண்டிக்கும் ஆர்வத்தில், சப்தபதி என்ற நாவலில் வரும் கதாநாயகனை அவர் மூன்ருவது முனிசீப்பாக மட்டுமே இருந்த போதிலும் மேலைநாட்டு நாகரிகத்தின் மோகத்தில் மூழ்கியிருப்ப வராகச் சித்திரிக்கிருர். வாழ்க்கை நடைமுறையையொட்டி அவர் நடந்திருந்தால், மூன்ருவது முனிசீப்பாகிய அவர் தமது சம்பளத் தில் மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பது கடினம் என்பதை உணர்ந்திருப்பார். நமது கல்வி முறையில் ஆங்கில மொழியின் அறிமுகமும் நவீன முறைகளும் நாட்டு மக்களின் நலிவுக்கு வழிகோலின என்று தாராசங்கர் உண்மையில் நம்பினுரா?

நவீன கால மனிதனை அவர் மேலெழுந்த வாரியாகத் தான் புரிந்து கொண்டார் என்று தோன்றுகிறது. நன்கு கற்றுத் தேர்ந்த ஒருவன் எப்படி நடந்து கொள்ள முடியும் என்பதை அவர் உணர்ந்து கொள்ளவே யில்லை. நவீன மனிதன் நாத்திகன். அதனுல்தான் அவன் இன்னலுறுகிருன் என்பது அவரது சித்தாந்தம். வேலையின்மை, வறுமை, பசி, பட்டினி, விலைவாசி ஏற்றம் போன்ற பல காரணங்களினுல் இக்கால மனிதன் இடர்ப் படுகிருன் என்பதையோ இவற்றுக்கும் நாத்திகத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதையோ, கடவுள் பெரிய செல்வந்தர் களுடைய உடைமை என்பதையோ, கடவுளையே நம்பியிருக்கும் மக்கள் நிறைந்த இந்திய நாட்டில்கூட மிகவும் வறியவர்கள், தரித்திர நாராயணர்கள், கடைசியாகத்தான் தாம் கடவுளிடம் முறையீடு செய்து கொள்கின்றனர் என்பதையோ, தாராசங்கர் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியாவில் 'படித்த இளைஞனுக்குக் கடவுளைப் பற்றி நினைக்க நேரம் ஏது? செல்வமோ அது? அவர் தம் தீமையோ இது? என்று வியக்கும் வண்ணம் தலைமுறை ஒன்று தலைதூக்கிவிட்டது என்று தாராசங்கர் நினைத்தால் அது, அத்தகைய கருத்துக்களை மையமாகக் கொண்ட அவரது படைப்புகளில் தெளிவாகத் தெரியவில்லை. அப்பட்ட மான உண்மை யாதெனில், அத்தகைய தலைமுறை இந்திய மண்ணில் வேருன்றவில்லை.

இவைதாம் அவரிடம் உள்ள குறைபாடுகள். ஆனல் அவருடைய குறைகளை விட நிறைகள் அதிகம். அவருடைய படைப்புகளை மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு, அவரது ஆழ்ந்த கருத்துக்களைப் புரிந்து கொள்ளாவிட்டால் அது வருந்து தற்குரியதாகும். அவரது மூன்று பெரிய காப்பிய நாவல்களில் இந்திய நாட்டின் - இந்திய மக்களின் வரலாற்றை, கிராமங்களின் வறிய நிலையை, தளையுண்டு கிடந்த நிலையை நாம் காண்கிருேம். இதன் மூலம் அவர் ஏனைய நாவலாசிரியர்களை வென்று விளங்கு கிருர். மற்ற எழுத்தாளர்களைவிட அவர் மக்களின் உள்ளங்களில் பசுமையாக இருப்பதற்கு இத்தனிச் சிறப்பே காரணமாகும். இன்றைய நாள் வரையில் வங்காள இலக்கியம் நமக்குத் தந் துள்ள தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் அவர்.

அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி மற்றவர்கள் செல்ல முடியுமா என்ற வினவிற்கு விடை காண்பது கடினம். ஏனெனில் அத்தகைய பாதையைப் பின்பற்றிச் செல்ல வேண்டுமாயின், அவரது துணிவும் மனத்திண்மையும், தமது தொழிலில் அவருக் கிருந்த கட்டுப்பாடும், ஈடுபாடும் வேண்டும். இது அவ்வளவு எளிதான செயல் அல்ல. உயர்ந்த லட்சியங்களுடனும், உன்னத மான குறிக்கோள்களுடனும் மனிதர்கள் வாழ்ந்த காலம் மறைந்து விட்டது. மேற்கு வங்காளத்தில், புதிய தலைமுறை ஒன்று உருவாகி—புதிய எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள், தங்களை அறியாமலேயே தாராசங்கரின் அடிச்சுவட்டில் சென்று, மக்களின் துயர் பற்றி, நாட்டில் நடக்கும் போராட்டம் பற்றி, நிச்சயமாக எழுதுவார்கள். இத்தகைய எழுத்தாளர் தலைமுறை தோன்றும் போது, தாராசங்கரின் சாதனைகள் நிறைந்து ததும்பும். அதற்கு முன்பு இல்லை.

தாராசங்கர் பந்த்தோபாத்யாவின் படைப்புகள்

1. திரிபத்ரா (மூன்று இலைகள்) கவிதைத் தொகுப்பு 1926.
2. சைதலி கர்னி (ஏப்ரல் சுழல் காற்று) நாவல் 1932.
3. பசன்பூரி (சிறை) நாவல் 1933.
4. நீலகண்டா (சமுத்திரத்திலிருந்து நஞ்சைக் குடித்து தொண்டை நீலநிறமாகிவிட்டதனால் சிவனுக்கு ஏற்பட்ட ஒரு பெயர்): நாவல் 1933.
5. ராய்கமல் (கதாநாயகியின் பெயர்): நாவல் 1935.
6. பிரெம் ஓ ப்ரயோஜன் (காதலும் தேவையும்) நாவல் 1936.
7. சலனமயி : (கைக்கு அகப்படாமல் தப்பித்துக் கொள்ளுதல்) சிறுகதைகள் 1937.
8. ஜலசாகர் (விருந்துக்கூடம்) சிறுகதைகள் 1938.
9. அகன் (நெருப்பு) நாவல் 1938.
10. ரசகலி (வைஷ்ணவர் ஒருவரின் நெற்றியில், மூக்கில், கழுத்தில் உள்ள சந்தனப்பொட்டு அல்லது திருமண் அடையாளம்) கதைகள் 1939.
11. தத்ரிதேவதா (தெய்வத்தாய்) நாவல் 1939.
12. காளிந்தி : (ஆறு ஒன்றின் பெயர்) நாவல் 1940.
13. தீன் ஸுன்யா (மூன்று பூஜ்யங்கள்) சிறுகதைகள் 1942.
14. காளிந்தி : நாடகம் 1942.
15. த்விபுருஷ் : நாடகம் 1943.
16. ஞான தேவதா (மக்கள், கடவுள்): நாவல் 1943.
17. பத்தர் டாக் (வழிகள்): நாவல் 1943.
18. ப்ரதித்வனி (எதிரொலி) சிறுகதைகள் 1943.
19. பீதனி (குறத்தி) சிறுகதைகள்) 1943.
20. தில்லி கா லட்டு (டெல்லியிருந்து இணைப்பு): சிறுகதைகள் 1943.
21. மன்வந்தர் (பஞ்சம்): நாவல் 1944.
22. பஞ்ச்கிராம் (ஐந்து கிராமங்கள்): நாவல் 1944.
23. ஜாதுகரி (மயங்க வைப்பவள்): நாவல் 1944,
24. ஸ்தல பத்மா (ஹைபிஸ்கஸ் இனத்தைச் சேர்ந்த ஒருமலர்): சிறுகதைகள் 1944.
25. கவி (பார்ட்): நாவல் 1944.
26. திரோஷ் பஞ்சாஷ் (1350) சிறுகதைகள் 1944.
27. பிங்ஷா ஷதாப்தி (20ஆம் நூற்றாண்டு) 1945.
28. சுக்மகி (சக்கிமுக்கி): நகைச்சுவை நாடகம் 1945.
29. த்விபந்தர் (வாழ்க்கைக்கான போக்குவரத்து வசதிகள்) நாடகம் 1945.

30. பிரஷாத்மாலா (மாலை): சிறுகதைகள் 1945.
31. ஹறானோ சூர் (அபஸ்வரம்) சிறுகதைகள் 1645.
32. சாந்திபன் பாடசாலா (கடவுள் கிருஷ்ணனின் ஆசிரியர், துறவி சாந்திபனிக்குப் பின் பெயரிடப்பட்ட ஒரு தொடக்கப் பள்ளி).
33. ஜார் ஓ, ஜராபட்டா (புயலும் அதனால் வீழ்ந்த இலைகளும்) நாவல் 1946.
34. அபிஜான் (சுற்றுப்பயணம்) நாவல் 1946.
35. இமாரத் (அரண்மனை) சிறுகதைகள் 1946.
36. இராமதனு (வானவில்) சிறுகதைகள் 1947.
37. தாராசங்கர் சிரேஷ்ட கல்ப : (தாராசங்கரின் சிறந்த கதைகள்) சிறுகதைகள் 1947.
38. ஸ்ரீபஞ்சமி (அறிவுக் கடவுள் சரஸ்வதி தேவியை வணங்கும் நாளான, மாக்திங்களின் பௌர்ணமி நாளின் ஐந்தாவது நாள்.
39, சாந்திபன் பாடசாலா ; குழந்தைகளுக்காக கூறப் பட்டவை ; நாவல் 1948.
40. காமதேனு (தெய்வப் பசு): சிறுகதைகள் 1949.
41. பாத சின்னம் (பாத அடையாளங்கள்) நாவல் 1950.
42. தாராசங்கர் பந்த்தோபாத்யாயர் சிரேஷ்ட கல்ப (தாரா சங்கர் பானர்ஜியின் சிறந்த கதைகள்) சிறுகதைகள் 1950.
43. உத்தராயன் (வடக்கு நோக்கி சூரியன் செல்லும் நாள்) நாவல் 1950.
44. மதி (பூமி) சிறுகதைகள் 1950.
45. அமர் கலேர் கதா (என்னுடைய நேரத்தில்) வாழ்க்கைக் குறிப்புகள் 1051.
46. ஹன்சூலி பாங்கர் உபகதா (சிக்கில் பெண்டின் கட்டுக் கதை) நாவல் 1951.
47. யுகபிப்லேப் (புரட்சிக்காலம்) நாடகம் 1951.
48. ஷிலாஷன் (பாறை இருக்கை) சிறுகதைகள் 1952.
49. தாமஸ் தபஸ்யா (வழிபாடு) நாவல் 1952.
50. நாகினி கன்யா கஹினி (பாம்புப் பெண்ணின் கதை) நாவல் 1952.
51. பிசித்ரா ஸ்ம்ரதி கஹினி : (பழைய நினைவுகள்) வாழ்க்கைக் குறிப்புகள் 1953.
52. ஆரோக்ய நிகேதன் (மருத்துவ மனை ஒன்றின் பெயர்) நாவல் 1953.
53. அமர் சாகித்ய ஜீபன் (என்னுடைய இலக்கிய வாழ்க்கை) வாழ்க்கைக் குறிப்புகள் 1953.

54. தாராசங்கர் பந்த்தோபாத்யாயர் பிரிய கல்ப (தாராசங்கர் பானர்ஜிக்கு விருப்பமான கதைகள்).
55. ஸ்வநிர்பசதா கல்ப (ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்) சிறுகதைகள் 1954.
56. சம்பாதன்கர் பௌ (சம்பாதன்காவின் மணப்பெண்) நாவல் 1954.
57. கல்ப சன்சயன் (கதைத் தொகுப்பு) சிறுகதைகள் 1955.
58. பிஷ்போரன் (வெடிப்பொலி) சிறுகதைகள் 1955.
59. கோயிஷோர் ஸ்மிர்தி (சிறுவயது நினைவுகள்) வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை 1956.
60. பஞ்ச புத்தலி (ஐந்து பொம்மைகள்) நாவல் 1956.
61. சோட்டாதர் சிரேஷ்ட கல்ப (குழந்தைகளுக்கான சிறந்த கதைகள்) சிறுகதைகள் 1955.
62. காலாந்தர் (ஒரு காலம் முடிந்து இன்னொரு காலம் ஆரம்பித்தல்) சிறு கதைகள் 1956.
63. கவி : நாடகம் 1957.
64. பிசாரக் (நீதிபதி) நாவல் 1957.
65. காலராத்ரி (விதி விளையாடிய இரவு) நாடகம் 1957.
66. பீஷ்பத்தர் (பாம்பின் விஷத்தை ஈர்த்துக் கொள்ளும் தன்மையுடையதாகச் சொல்லப்படும் கல். இது பாம்புக் கடி மருத்துவர்களால் பயன்படுத்தப்படுகிறது) சிறுகதைகள் 1957.
67. சப்தபதி (ஏழு அடிகள்) நாவல் 1958.
68. பிபாஷா (பஞ்சாபிலிருந்து ஓடிவந்த அகதிப் பெண். கதாநாயகி. அவளுடைய காதலன் பியாஸ், நதியின் பெயரை அவளுக்குச் சூட்டுகிறான்). நாவல் 1959.
69. ராதா (கதாநாயகியின் பெயர்) நாவல் 1959.
70. மன்ஷூர்மன் (மனிதனின் மனம்) நாவல் 1959.
71. டாக் ஹர்கரா (அஞ்சல் எடுத்துச் செல்பவர்) நாவல் 1959.
72. ரச்னு ஸங்ரஹா (தொகை நூல்) முதல் பகுதி 1959.
73. ரபிபேரர் அசார் (ஞாயிற்றுக் கிழமைக் கூட்டம்) சிறுகதைகல் 1959.
74. மாஸ்கோ தி கைத்தின் (மாஸ்கோவில் சில நாட்கள்)
75. மஹஸ்வேதா (பானபட்டரின் இரண்டாவது கதாநாயகியான காதம்பரியின் தூய்மையான மனத்தைப் புகழ்தல்) நாவல் 1961.
76. யோகபிரஷ்தா (தேர்ந்தெடுத்த பாதையிலிருந்து விழுந்து விடுதல்) நாவல் 1961.
77. பிரேமர் கல்பா (காதல் கதைகள்) சிறுகதைகள் 1961,

78. பௌஷ லட்சுமி (செல்வக் கடவுள் இலட்சுமி, குளிர்கால திங்களில் வணங்கப்படுவது குறித்து) சிறுகதைகள் 1961.
79. ஆலோக் பிஷார் (ஒளி நோக்கிப் பயணம்) சிறுகதைகள் : வெளியிடப்பட்ட காலம் தெரியவில்லை.
80. நா (இல்லை) நாவல் 1961.
81. சாஹித்ய சத்யா (இலக்கியத்தின் உண்மை) கட்டுரை 1964.
82. நாகரிக் (குடிமகன்) நாவல் 1961.
83. நிஷிபத்மா (இரவில் மலரும் தாமரை) நாவல் 1962.
84. சிரந்த்னி (சாசுவதமான) சிறுகதைகள் 1962.
85. யதிபங்கா (தடை) நாவல் 1962.
86. ஆக்ஸிடெண்ட் : சிறுகதைகள் 1962.
87, சங்காத் (மோதல்) நாடகம் 1962.
88. சோபடாதர் போலோ போலோ கல்ப (குழந்தைகளுக்காக தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள்) சிறுகதைகள் 1962.
89. அமர் சாகித்ய ஜீபன் (என்னுடைய இலக்கிய வாழ்க்கை) வாழ்க்கைக் குறிப்புகள் பாகம்—2 : 1962.
90. கன்னு (கண்ணீர்) நாவல் 1962.
91. தமாஷா (சிரிப்பு) சிறுகதைகள் 1963.
92. கால்பைஷாகி (கோடைக்கால புயல்) நாதல் 1963.
93. கல்ப பன்சஷத் (ஐம்பது கதைகள்) சிறுகதைகள் 1963.
94. யுக்தி சோருயி பகி ஓ காலோமயி (ஒரு குருவியும் கருப்புப் பெண்ணும்).
95. ஆயினு (கண்ணுடி) சிறுகதைகள் 1963.
96. ஜங்கல்கட் (காட்டில் உள்ள கோட்டை) நாவல் 1964.
97. சின்மோயி (ஒரு பெண்ணின் பெயர்) சிறுகதைகள் 1964.
98. மன்ஜரி ஓபரா (குழுவின் உரிமையாளரான கதா நாயகிக்குப் பின் பெயரிடப்பட்ட ஒரு இசை நாடகக் குழு) நாவல் 1964.
99. சங்கேத் (எச்சரிக்கை) நாவல் 1964.
100. பூபன் பரர் ஹாட் (பூபேன்பூரரில் உள்ள கிராம அங்காடி)
101. பசன்த்ராக் (இந்திய இசையில் வசந்தராகம்) நாவல் 1964.
102. ஏக்தி பிரேமர்கல்ப (ஒரு காதல் கதை) சிறுகதைகள் 1965
103. ஸ்வர்க்க மார்டியா (சொர்க்கம், பூமி) நாவல் 1965.
104. பிசித்ரா (பல்வகை) நாவல் 1965.
105. ஞானபீகம் (பீகத்தின் பெயர்) நாவல் 1965.
106. ஆரண்யபன்ஹி (காட்டில் தீ) நாவல் 1966.

107. ஹீராபன்னு (வைரமும் மரகதமும்) நாவல் 1966.
108. கிஷோர் ஸன்சயன் (சிறுவர்களுக்கான தொகை நூல்) சிறுகதைகள் 1966.
109. மஹான கரி (தலைநகரம்) நாவல் 1966.
110. குருதஷிணு (குரு காணிக்கை) நாவல் 1966.
111. தபோபங்க் (தியானத்தில் தடை) சிறுகதைகள்: நாள் தெரியவில்லை.
112. தீபார் பிரேம் (தீபாவின் காதல்) சிறுகதைகள் 1966.
113. நாரி ரஹஸ்யமோயி (என்றும் புதிரான பெண்) சிறுகதைகள் 1967.
114. பஞ்சகன்யா (ஐந்து பெண்கள்) சிறுகதைகள் 1967.
115. ஷூகஷரி கதா: நாவல் 1967.
116. ஷிபானீர் அதிர்ஷ்டா (ஷிபானியின் விதி) சிறுகதைகள் 1967.
117. ஷாக்கர்பாய் (கதாநாயகியின் பெயர்) நாவல் 1967.
118. சோபின்சிங்கர் கோரா (கோபின் சிங்கின் குதிரை) சிறுகதைகள் 1968.
119. ஜெயா (ஒரு பெண்ணின் பெயர்) சிறுகதைகள் 1968,
120. ஆரோக்ய நிகேதன் (நாடகம் 1968.
121. ஏக் பாஷீலா ப்ருஷ்டி (மழைத்தூறல்) சிறுகதைகள் 1969.
122. மோனி - பௌதி (மோனி - மைத்துனி) நாவல் 1969.
123. சோட்டாதர் சிரேஷ்டகல்ப (குழந்தைகளுக்கான சிறந்த கதைகள்) சிறுகதைகள் 1969.
124. மிசில் (ஊர்வலம்) சிறுகதைகள் 1969.
125. சாயாபாத் (பால்வழி) நாவல் 1969.
126. காலராத்திரி (விதி விளையாடிய இரவு) நாவல் 1970.
127. ரூபஷி பிஹங்கினி (அழகான பறவை) நாவல் 1970.
128. அபினேத்ரி (நடிகை) 1970.
129. பரியாத் (புகார்) நாவல் 1971.
130. ரபீந்தரநாத் ஓ பங்காளர் பள்ளி (ரபீந்தரநாத் - வங்காள கிராமங்கள்) கட்டுரை 1971.
131. உன்னீஸ்ஸௌ இக்ஹத்தர் (1971)
132. ஷதாப்திர்ம்ருத்யூ (நூறுண்டு முடிவடையும் காலம்) நாவல் 1971.
133. கிஷ்கின்த்யா காண்டோ (கிருஷ்கிந்தியா காண்டம்) நாவல் 1972.

வாழ்க்கைக் குறிப்பு

தாராசங்கர் பந்த்தோபாத்யாயர், பீர்பும் மாவட்டத்தில் உள்ள லப்பூரில், அவருடைய முன்னோரின் இல்லத்தில் 1898 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 23ம் நாளன்று பிறந்தார். அவருடைய தந்தை ஹரிதாஸ் பந்த்தோபாத்யாய் 1905ஆம் ஆண்டிலும், தாயார் பிரபாவதி தேவி 1969ஆம் ஆண்டிலும் மறைந்தார். அவர் 1916ஆம் ஆண்டில் லப்பூர் ஜாதப்லால் உயர் கல்விப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் தேறினார். அவர் முதலில் கல்கத்தா புனித சூசையர் கல்லூரியில் சேர்ந்தார். பின் கல்கத்தா தெற்குப் புறநகர் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார். ஆனால் உடல் நிலை சரியில்லாததாலும், அரசியல் ஈடுபாட்டினாலும் தன்னுடைய படிப்பை முடிக்க இயலவில்லை.

அவர் 1916ஆம் ஆண்டு உமா சசிதேவியை மணந்தார். அவருடைய மூத்த மகன் சனத்குமார் 1918ல் பிறந்தான். கடைசி மகன் சரித்குமார் 1922ல் பிறந்தான். மூத்த மகள் கங்கா, 1924ல் பிறந்தாள். இரண்டாவது மகள் பூலு 1926ல் பிறந்தாள். கடைசி மகள் பானி 1932ல் பிறந்தாள். பூலு 1932ல் இறந்து விட்டாள். அவர் 1930 ஆம் ஆண்டு சிறை செய்யப்பட்டு டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டார். 1932ஆம் ஆண்டு, முதல் தடவையாக தாகூரைச் சாந்திநிகேதனில் சந்தித்தார். அவருடைய முதல் நாவலான சைதலி குர்னி 1932ல் வெளியிடப்பட்டது.

1935ஆம் ஆண்டு லப்பூர் வாசிகள் அவருக்கு வரவேற்பு ஒன்றைக் கொடுத்தனர். 1937ல் அவர்கள் இரண்டாம் தடவையாக வரவேற்பு அளித்தனர்; 1940ல் கல்கத்தாவில் உள்ள பாக் பஜாரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தன்னுடைய குடும்பத்தை அங்கு வரவழைத்தார். 1941ல் வடக்குக் கல்கத்தாவிலுள்ள பெருநகரில் பாராநாகூரில் வசிக்கச் சென்றார். 1942ல் பீர்பும் மாவட்ட சாகித்ய சம்மேளனின் இலக்கியப் பிரிவுக்குத் தலைமை வகித்தார். 1942ல் பாசிச எதிர்ப்பு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தின் தலைவரானார். 1947ல் கான்பூர் பிரபாசி சாகித்ய சம்மேளனனின் இலக்கியப் பிரிவிற்குத் தலைமை வகித்தார். 1947ல் கல்கல்தாவில் நடந்த பிரபாசி கங்கா சாகித்ய சம்மேளனத்தைத் தொடங்கி வைத்தார். அதே ஆண்டில் பம்பாயில் உள்ள பிரபாசி பங்கா சாகித்ய சம்மேளனின் இலக்கியப் பிரிவின் வெள்ளி விழாவிற்குத்

தலைமை வகித்தார். 1947ல் கல்கத்தா பல்கலைக் கழகத்திலிருந்து சரத் நினைவுப் பதக்கத்தைப் பெற்றார். 1947 ஜூலையில் வங்காள எழுத்தாளர்கள் அவருக்கு 50 வயதை யொட்டி வரவேற்பு ஒன்றைக் கொடுத்தனர். 1948ல் கல்கத்தா தாலா பூங்காவில் புதிதாகக் கட்டப்பட்ட அவருடைய வீட்டில் குடி புகுந்தார்.

1951-ல் ரஷ்யாவிலிருந்து வந்த அழைப்பு ஒன்றை மறுத்தார். 1952-ல் சட்டமன்றப் பேரவையில் ஓர் உறுப்பினராக நியமிக்கப் பட்டார். 1954-ல் அவருடைய அன்னையிடமிருந்து தீட்சை பெற்றார். 1955-ல் வங்காள அரசு அவருக்கு ரபீந்திர நினைவுப் பரிசை வழங்கியது. 1956-ல் சீன எழுத்தாளர் லூ-ஷுன் முதலாம் ஆண்டு நீத்தார் நினைவை யொட்டி, இந்திய அரசு அவரைச் சீனாவிற்கு அனுப்பியது. ஆனால் உடல்நிலை சரியில்லாத தன் காரணமாக அவர் இரங்கூனிலிருந்து திரும்பி வரவேண்டி யிருந்தது. 1956-ல் அவர் சாகித்ய அகாடமி விருதைப் பெற்றார். 1958-ல் ஆப்ரோ ஆசியா எழுத்தாளர்கள் மகாநாட்டின் குழுவில் கலந்து கொள்வதற்காக ரஷ்யாவிற்குச் சென்றார். அதே ஆண்டில் ஆப்ரோ ஆசிய எழுத்தாளர்கள் பிரதிநிதியின் தலைவராகத் தாஷ்கண்டுக்குச் சென்றார்.

1959-ல் அவர் கல்கத்தா பல்கலைக் கழகத்திலிருந்து ஜகதாரிணி தங்கப் பதக்கத்தைப் பெற்றார். அதே ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட் டிற்குத் தலைமை வகித்தார். 1960-ல் மாநிலப் பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இந்தியக் குடியரசுத் தலைவரால் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு அவர் நியமிக்கப்பட்டதற்காக பந்த்ரா, ஹௌரா வாசிகள் அவருக்கு வரவேற்பு ஒன்றைக் கொடுத்தனர். அதே ஆண்டில் லப்பூர்வாசிகள் மூன்றும் முறையாக வரவேற்பு ஒன்றைக் கொடுத்தனர். 1962-ல் அவருக்கு பத்மஸ்ரீ பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது. அதே ஆண்டில் அவருடைய மூத்த மருமகன் சாந்தி சங்கர் முகர்ஜி இறந்துவிட்டார். இதனால் மனமுடைந்த அவர், தன் எண்ணங்களை வேறு வழியில் திருப்புவ தற்காக சித்திரம் வரைவதிலும் மரப் பொம்மைகள் செய்வதிலும் தன் சிந்தையைச் செலுத்தினார். 1963-ல் அவர் சிசிர்குமார் விருதைப் பெற்றார். 1966-ல் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். 1966-ல் அவர் நாக்பூர்—பங்க சாகித்ய சம்மேளனத்திற்குத் தலைமை வகித்தார். 1967-ல் அவர் ஞானபீட விருதைப் பெற்றார். இதை யொட்டி கல்கத்தா

மாநகராட்சிக் கழகம் அவருக்கு வரவேற்பு அளித்துப் பாராட்டியது.

அவர் எழுபது வயதை அடைந்தபோது மேற்கு வங்காள குடிமக்கள் மஹாஜாத சதனில் அவருக்குப் பெரும் வரவேற்பு அளித்தனர். அதே ஆண்டில் கல்கத்தா பல்கலைக் கழகமும் ஜாதல்பூர் பல்கலைக் கழகமும் அவருக்கு இலக்கியத்தில் டாக்டர் பட்டத்தை அளித்துப் பெருமைப்படுத்தியது. 1969-ல் சாகித்ய அகாடமியின் அறிஞர் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. அதே ஆண்டில் வங்க சாகித்ய பரிஷத்தின் தலைவரானார். காலாண்டுப் பத்திரிகை ஷத்தாருபாவின் ஆசிரியர் குழுவிற்குத் தலைவரானார். 1970-ல் நான்காவது தடவையாக லப்பூர்வாசிகள் அவருக்கு வரவேற்பு ஒன்றைக் கொடுத்தனர். 1971-ல் அவர் விஸ்வபாரதி அழைப்பின் பேரில் நிருபேந்தர சந்த்ரா நினைவுச்சொற்பொழிவை ஆற்றினார். கல்கத்தா பல்கலைக் கழகம் டி. எல். ராய் நினைவுச் சொற்பொழிவு ஆற்றுவதற்காக அவருக்கு அழைப்பு விடுத்தது.

1971 ஜுலையில் சைனஸ் வலி போன்று நோவு இருப்பதாகத் தெரிவித்தார். ஆகஸ்டு 31ஆம் நாள் திடீரென்று நினைவிழந்தார். ஆனால் அன்றைய பிற்பகலில் அவர் நினைவு மீண்டும் திரும்பியது. அவர் உடல்நிலை செப்டம்பர் ஏழாம் தேதி வரை நன்றாக இருந்தது. மறுபடியும் நோய்வாய்ப்பட்டார். செப்டம்பர் 14ஆம் தேதி வைகறையில் மறைந்தார். அவரது உடல் வடக்குக் கல்கத்தா, நிம்தாலா ஆற்றங்கரைப் படித்துறையில் தகனம் செய்யப்பட்டது. அவரது மூத்த மகன் சனத்குமார் பந்த்தோபாத்யாய் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினார்.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்:

1. **லட்சுமிநாத பெஸ்பருவா**—ஹேம்பருவா
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
2. **கபீர்**—பிரபாகர் மாச்வே
   தமிழ்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. **கேசவஸுதர்**—பிரபாகர் மாச்வே
   தமிழ்: ராம கோபிநாதன்
4. **ஈசுவர் சந்திர வித்யாசாகர்**—ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ்: ராம கோபிநாதன்
5. **ராஜா ராம் மோகன்ராய்**—சௌமியேந்திரநாத தாகூர்
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
6. **பிரேம்சந்த்**—பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ்: சரஸ்வதி ராமநாத்
7. **குமாரன் ஆசான்**—கே. எம். ஜார்ஜ்
   தமிழ்; கே. சி. சங்கரநாராயணன்
8. **தாரு தத்**—பத்மினி ஸென்குப்தா
   தமிழ்: அ. சீனிவாச ராகவன்
9. **வீரேசலிங்கம்**—வி. ஆர். நார்லா
   தமிழ்: நா. பார்த்தசாரதி
10. **ஸ்ரீ அரவிந்தர்**—மனோஜ்தாஸ்
    தமிழ்: பி. கோதண்டராமன்.
11. **மீராபாய்**—உஷா நில்சன்
    தமிழ்: எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. **வேமனர்**—வி. ஆர். நார்லா
    தமிழ்: ந. சுப்பு ரெட்டியார்
13. B. M. **ஸ்ரீகண்டய்யா**—A. N. மூர்த்தி ராவ்
    தமிழ்: இரா. மதிவாணன்
14. **சந்துமேனன்**—டி. சி. சங்கரமேனன்
    தமிழ்: கு. இராஜவேலு
15. **காஸி நஸ்ருல் இஸ்லாம்**—கோபால் ஹால்டார்
    தமிழ்: K. P. S. ஹமீத்
16. **வள்ளத்தோள்**—ஹிருதயகுமாரி
    தமிழ்: மா. இளையபெருமாள்
17. **பசவேஸ்வரர்**—H. திப்பேருத்ரசுவாமி
    தமிழ்: T. K. நாகாம்பாள்
18. **பாணபட்டர்**—கே. கிருஷ்ணமூர்த்தி
    தமிழ்: பெ. திருஞானசம்பந்தன்
19. **பக்கிம் சந்திர சாட்டர்ஜி**—சு. ச. ஸென்குப்தா
    தமிழ்: அசோகமித்திரன்
20. **மகரிஷி தேவேந்திரநாத தாகூர்**—நா. சௌதுரி
    தமிழ்: கா. மீனாட்சி சுந்தரம்
21. **தாராசங்கர் பந்தோபாத்யாயர்**—மஹாஸ்வேதா தேவி
    தமிழ்: கு. இராஜவேலு
22. **நானலால்**—U. M. மணியார்
    தமிழ்: நா. பார்த்தசாரதி